Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 30.00
பெப்ரவரி 24 - மார்ச் 02, 2011
PUBLIC LIBRARY JAFNA
தினமுரசு வாரமலர்

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 900

## இலங்கையில் அதிகரிக்கும் சிறுவர் துஸ்பிரயோகங்கள்

### காத்திருக்கும் அதிர்ச்சிகள்

## பாலியல் குற்றச்சாட்டுகள்! இத்தாலிய பிரதமரின் தலை தப்புமா?



## விரையும் தரகர்களுக்கு விலைபோவார்களா வீரர்கள்




## நமஸ்காரங்கள்

இறைவனைத் தரிசிப்பதற்காக நாம் கோவிலுக்குப் போகின்றோம். இருகரம் கூப்பி நமஸ்கரிக்கின்றோம். இதையே பொதுவாகச் சிறியோரில் இருந்து முதியோர்வரை பெரும்பாலானவர்கள் கைக்கொள்கிறார்கள்.

ஆனால், கோவிலினுள் வீற்றிருக்கும் இறைவனை நோக்கி நமஸ்கரிப்பதானது பலவகையிலான வகையாக இருக்கின்றன. அவை முறையே – ஏகாங்க நமஸ்காரம் – த்விதாங்க நமஸ்காரம்– த்திரிவிதாங்க நமஸ்காரம் – பஞ்சாங்க நமஸ்காரம் –அட்டாங்க நமஸ்காரம் –சாஷ்டாங்க நமஸ்காரம் எனக் கொள்ளப்படுகின்றன.

இவற்றுள் ஏகாங்க நமஸ்காரம் என்பது தலையால் மட்டும் வணங்குதலைக் குறிக்கிறது. அதாவது, தலை தாழ்த்தி வணங்குதலாகும். வலது கையை மட்டும் தலை மீது வைத்து வணங்குதல் த்விதாங்க நமஸ்காரம் ஆகும். இரண்டு கரங்களையும் குவித்து தலைமேல் வைத்து வணங்குவதானது த்ரிவிதாங்க நமஸ்காரம் என்றும், இரண்டு உள்ளங்கைகள், இரண்டு முட்டிகள் மற்றும் தலை இவற்றால் வணங்குவது பஞ்சாங்க நமஸ்காரமாகிறது.

அத்தோடு, இரண்டு கால்கள், இரண்டு கைகள், இரண்டு செவிகள் தலை மார்பு ஆகிய எட்டு உறுப்புக்களால் வணங்குவது அஷ்டாங்க நமஸ்காரம் ஆகும். சாஷ்டாங்க நமஸ்காரமானது நிலத்தில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்குவதைக் குறிக்கிறது.

-அனந்தநாராயணன், கைதடி.

## நம்பிக்கையும்;விசுவாசமும்

வாழ்வின் பயணமானது பல போராட்டங்கள் நிறைந்ததாகும். போராட்டமற்ற வாழ்க்கை மனிதனின் மனதைப் பண்படுத்துவதில்லை. இந்தப் போராட்டம் நிறைந்த வாழ்வின் பயணத்தில் பயணிக்கும் போது, தெய்வபயத்துடன் நேர்மை தவறாத வழிமுறைக–ளைக் கைக்கொண்டு, மற்றவர்களை வருந்தத்தக்க செயல்களைச் செய்யாது, மனிதநேயத்துடன் நடந்து கொள்பவர்களுக்கு ஆத்மபலம் உண்டாகிறது. இதைவிட, பாவகாரியங்களுக்குத் துணை போகாது, அதே செயல்களைச் செய்ய விரும்பாது, இறைவ–னின் நியாயத் தீர்ப்புக்குப் பயந்து நீதியின்படி நடப்பவர்கள் வாழ்வில் நிர்மூலமாகிப் போவதில்லை. ஏனெனில், இப்படியானவர்கள் இறை நம்பிக்கையோடு வாழ்வதினால், "கர்த்தர் என் பக்கத்தில் இருக்கிறார் நான் பயப்படேன். மனிசன் எனக்கு என்ன செய்வான் (சங்கீதம் 117:6)" என்ற விசுவாசம் அவர்களைத் தீமைகளில் இருந்து விலக்கி, நல்வழிகளைக் காட்டி நடப்பித்துக்கொள்கிறது.

"கர்த்தர் என்னோடு இருக்கிறார்..." என்ற அசையாத ஓர் உறுதியானது தீயவர்களின் செயல்களைத் தீண்டவிடாமல் தடுத்துக்கொள்கிறது. வாழ்வில் பல நல்ல திருப்பங்களை ஏற்படுத்திக் கொள்கிறது. கர்த்தர் மீதான நம்பிக்கையும் விசுவாசமும் அவர்களை நாளெல்லாம் பாதுகாக்கிறது என்பதை விசுவாசத்திற்குரியவர்கள் மறுதலிப்பதில்லை.

சாமுவேல்-புதுக்குடியிருப்பு.

## அல்லாஹ்வின் துணை

மனிதன் சில சந்தர்ப்பங்களில் உண்மை பேசுகின்றான். இன்னும் சில சந்தர்ப்பங்களில் பொய் பேசுகின்றான். இவன் உண்மையாளனா, பொய்யனா என்பது எவ்வாறு அல்லாஹ்வால் தீர்மானிக்கப்படும் என்பதை இறை தூதர் அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்.

ஒரு மனிதன் உண்மை பேசுகின்றான். உண்மையாக வாழுகின்றான். எதுவரைக்கும் என்றால் அல்லாஹ்விடத்தில் அவன் உண்மையாளன் என்று எழுதப்படும் வரைக்கும்.

இன்னும் ஒருவன் பொய் உரைக்கின்றான். பொய்யாக வாழ்கின்றான். எதுவரைக்கும் என்றால் இவன் அல்லாஹ்விடம் பொய்யன் என்று எழுதப்படும் வரைக்கும்.

உண்மையாளனா, பொய்யனா என்பதை தீர்மானிப்பதற்கு அல்லாஹ் அவனுக்கு ஓர் அவகாசத்தைக் கொடுக்கின்றான். ஆகவே அவன் உண்மையைப் பேச வேண்டும். இப்பாதையில் எத்தனை துன்பங்கள் வந்தாலும் இந்நிலையிலிருந்து இவன் விலகிச் செல்லக் கூடாது. அப்போதுதான் அவன் உண்மையாளன் என்று எழுதப்படும். அவனது வாழ்வில் என்றும் இருக்கும் அல்லாஹ்வின் துணை.

எம்.சி.கலீல், கல்முனை-05

# வாசகர் சாலை

## வாரமொரு வசந்தம்

வியாழன் தோறும் வந்து, வசந்தம் தந்து கொண்டிருக்கிறாய். மக்களின் தேவையறிந்து உரிய தகவல்களை வழங்கி வருகிறாய். அரசியல் ரீதியான விடயங்களை நாசூக்காகச் சொல்வதில் உனக்கு நிகர் நீயே. பாப்பா முரசில் வரும் தகவல் துணுக்குகளில் தெரியாத பல விடயங்களை எடுத்தியம்பியுள்ளாய்.

ம.வைஸ்ணவி, திருநெல்வேலி.

## மனதைக் கவர்ந்திடுதே!

நீண்ட நாள் வாசகி என்ற வகையில் நான் பெருமைப்பட்டுக் கொள்கின்றேன். நான் விரும்பிப்படிப்பவை சிறுகதை, தீண்டும் இன்பம், லேடிஸ் ஸ்பெஷல் என்பனவாகும். இதில் பெண்களின் பகுதியில் இடம்பெறும் அழகுக் குறிப்புக்களையும் அதிக நன்மையடையக் கூடியதாகவுள்ளது.

எஸ்.மாலினி, வவுனியா

## அசத்தலான தகவல்

அதிரடியான அசத்தலான பல விடயங்களைத் தத்துவார்த்த ரீதியாக அசத்தி வருகிறாய். 899 ஆவது முரசில் 24 ஆம் பக்கத்தில் இடம்பெற்ற போக்குவரத்தின் நவீன தரிப்பிடத்தின் வளரச்சியைத் தந்திருக்கிறாய். நாடுகள் எவ்வளவு தூரம் நவீனத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்பது புலனாகிறது.

எஸ்.மதனன், புத்தளம்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772, கொழும்பு,
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல் (Fax): 0212221811
ஈ-மெயில்: (E-mail):- thinamurasu@live.com


# கவிதைப் போட்டி இல.900



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி. 06.03.2011

கவிதைப் போட்டி இல. 900
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### களவு...

கண்கண்ட தெய்வம்
கணவனென்றால்
கையைப் பிடிப்பவன்தான்
காதலனா?...

சி.ரெம்சி, மன்னார்.

### காதல் திருவிழா

கட்டி அணைப்பவர் ஒருவர்
கையைப் பிடிப்பவர்
இன்னொருத்தரா?
இதுதான் இன்றைய
காதல் திருவிழா...

எஸ்.ரேவதி, கொக்குவில்.

### சங்கடம்

ஒருத்திக்கு ஒருவன்;
ஒருவனுக்கு ஒருத்தி
என்பது அந்தக் காலம்
காதலர் தினம் அப்படித்தானோ?

க.சயிந்தன், திருகோணமலை.

### எப்படி நடப்போம்

எப்பிடியும் நடக்கலாம்
என்று நினைக்காமல்
இப்படியும் நடக்கலாம்
என்று நடக்காமல்
எப்படி நடப்போம் என்பதை
நாமே தீர்மானிப்போம்
உலகம் இனிமையாக இருக்க...

மா.லொசியா, மட்டக்களப்பு.

### மர்மம்

தண்ணீருக்குள் தவளை
என்ன செய்கிறது?
ஒருவருக்கும் தெரியாது.
கண்முன்னே என்ன
நடக்கிறது?
இதுவும் எல்லோருக்கும்
தெரியாது.

எஸ்.கோதா, கல்வியங்காடு

### மறைவு

முகங்கள் தெரியாதது
நல்லதாகப் போய்விட்டது
இல்லையென்றால்...
நாய் படாப்பாடுதான்
ஏனிந்த வேலை?

தி.அரவிந்தன், மட்டக்களப்பு.

### பாதுகாப்பு

காதலனா? கணவனா?
விருப்பம் உன் கையில் இருப்பது
தெரிகிறது-ஆனால்
இரு தோணியிலும் கால் வைக்காதே
பெண்ணே உலகமே மாயைக்குள்
தள்ளாடிக் கொண்டிருக்கிறது
உனக்கு நீயே பாதுகாப்பு
அதை நினைவில் நிறுத்திக்கொள்!!

-வேந்தன், தும்பளை.

## கவிதைப் போட்டி இல.898

### பாராட்டுக்குரியது



### அசிங்கம்

ஆராய்ந்தால்...
அண்ணன் மாராக
இருக்கலாம்
ஆராயப்படாதபோது
அசிங்கமான
செயல்தானே.
ஆபத்துக்கு
அழைத்துச் செல்லும்
ஆரம்பமல்லவா இது?

எம்.எவ்.பர்ஷானா,
தர்ஹாநகர்.



# உங்கள் பக்கம்

## திருத்தவேலைகள் விரைவில் நிறைவுபெறுமா?

கொழும்பு, வெள்ளவத்தைப் பிரதேசத்தில், காலி வீதியில் றொக்சி திரையரங்கிற்கு முன்பாக உயிராபத்துக்களை விளைவிக்கக் கூடிய பாரிய குழிகள் ஏற்பட்டு மக்களை அச்சத்தில் உறையவைக்கின்றது. ஏற்கெனவே பல தடவைகள் இவ்விடத்தில் குழி ஏற்பட்டு அவை மறு சீரமைக்கப்பட்டபோதும், கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் திடீரென வீதி இறங்கி குழி ஏற்பட்டதால் அவ்வீதியால் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்றும் அதிலிருந்த மூன்று பிரயாணிகளும் தெய்வாதீனமாக உயிர் தப்பியிருந்தனர். இதனையடுத்து அப்பகுதி பூரணமான முறையில் மீளமைக்கப்பட்டுவருகிறது.

இந்நிலையில் அதிக வாகனப் போக்குவரத்தைக் கொண்ட காலி வீதி வாகன நெரிசலினால் திணறிக்கொண்டிருக்கிறது. கொழும்புக்கு வெளியே செல்லும் வாகனங்களுக்கு மாற்று வீதி ஒன்று போக்குவரத்துப் பொலிசாரினால் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வீதியானது சாதரண குடியிருப்பாளர்களின் வீதி என்பதால் காலி வீதியால் செல்லும் வாகனங்களின் போக்குவரத்திற்குப் பொருத்தமான மாற்றீடாக அமையவில்லை. தினந்தோறும் மணித்தியாலக்கணக்கில் இச்சிறிய வீதியைக் கடப்பதற்குச் செலவழிக்க வேண்டியுள்ளது. இதனால் பாடசாலை மாணவர்களும், உத்தியோகத்தர்களும் சொல்லொண்ணா அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அத்தோடு குறித்த குடியிருப்பாளர் வீதியை அண்டி வாழ்கின்ற மக்களும் சுமூகமான முறையில் தமது வாழ்வை முன்னெடுத்துச் செல்ல முடியாது திணறுவதை அவதானிக்க முடிகின்றது. எனவே காலி வீதியின் திருத்தப்பணிகளை விரைவுபடுத்தி சுமூகமான போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை உட்பட சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று தினமுரசின் 'உங்கள் பக்கம்' ஊடாக கேட்டுக்கொள்கின்றேன்.

எஸ்.பாலேந்திரன்-கொழும்பு.

## ஆசிரியர்களின் தொலைபேசி இலக்கங்கள் எதற்கு?

வடமாகாண ஆசிரியர்களின் தனிப்பட்ட தொலைபேசி இலக்கங்களைப் பெற்றுத்தருமாறு, பாடசாலை அதிபர்களுக்கு வடமாகாண கல்விப் பணிப்பாளர் விடுத்த அறிவுறுத்தலுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

வடமாகாணத்தில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், ஆகிய பாட ஆசிரியர்களின் கைத்தொலைபேசி, வீட்டுத் தொலைபேசி இலக்கங்கள் கோரப்பட்டமையானது ஆசிரியர்களின் தனிப்பட்ட வாழ்விற்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் எனவும் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளதுடன் இந்த நடவடிக்கையை கைவிடுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

# யப்பானில் அபிவிருத்தி கருத்தரங்கு

## நாடு திரும்பியது இலங்கைக்குழு

போரின் பின்னரான சமாதான அபிவிருத்தி தொடர்பாக யப்பானில் கொக்கிறாவா எனும் இடத்தில் கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி முதல் இம் மாதம் 11 ஆம் திகதிவரை நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பில் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் தற்போது எவ்வாறு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மற்றும் அது தொடர்பான திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கமளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் கிளிநொச்சியிலிருந்து மாவட்டச் செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் என்.கௌரிதாசன், பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் ரி.முகுந்தன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இவர்களைவிடப் போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்தும் 14 பேர் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

இப்பயிற்சி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த உதவித் திட்டமிடல் பணிப்பாளர், போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்கு முன்னோடியான ஒரு களப்பயிற்சியாக இது அமைந்ததாகத் தெரிவித்தார்.

இதற்கான பயண ஒழுங்குகளை ஜெயிக்கா நிறுவனம் மேற்கொண்டிருந்தது.

## ஜனாதிபதியின் வாழ்க்கைக் குறிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு அடங்கிய நூல் ஒன்று தமிழ் மொழியில் வெளியிடப்பட்டுள்ளது. தினகரன் நாளிதழின் பிரதம ஆசிரியர் எஸ்.தில்லைநாதனினால் தமிழில் எழுதப்பட்ட இந்நூலுக்கு 'மகிந்த' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதன் முதல் பிரதியை கடந்த திங்கட்கிழமை அதன் ஆசிரியர் எஸ்.தில்லைநாதன் அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதியிடம் கையளித்தார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் A.H.M அஸ்வர் அவர்களும் கலந்து கொண்டிருந்தார்.

இந்நூலானது, பயங்கரவாதத்தை ஒழித்து. நாட்டை ஒருமுகப்படுத்தி வளமான எதிர்காலம் நோக்கி வழிநடாத்திக் கொண்டிருக்கும் ஜனாதிபதிக்கு தமிழ் பேசும் சமூகத்தின் புகழாரமாக அமைந்துள்ளது எனக் கூறப்படுகிறது.

## கொழும்பு கம்பன் கழகம் நடாத்தும் போட்டிகள்

ஆண்டுதோறும் கம்பன் விழாவினை நடாத்திவரும் கொழும்புக் கம்பன்கழகம் 2011 ஆம் ஆண்டுக்கான கம்பன் விழாவை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடாத்தவுள்ளது. இவ்விழாவை முன்னிட்டுக் கழகம் நடாத்தவுள்ள பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகள் குறித்த விபரங்களைக் கொழும்புக் கம்பன்கழகம் அறிவித்துள்ளது.

35 வயதுக்குட்பட்ட போட்டியாளர்கள் சுயமாகத் தயாரிக்கப்பெற்ற விண்ணப்பப் படிவத்தில் தமது முழுப் பெயர், வயது, முகவரி, தொலைபேசி இலக்கம், மாணவராயின் பாடசாலையின் பெயர், கலந்துகொள்ளவுள்ள போட்டி முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு, இல 12, இராமகிருஸ்ண கார்டன், கொழும்பு-06 எனும் முகவரிக்கு மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்க வேண்டும். ஒருவர் இரண்டு போட்டிகளிலும் கலந்துகொள்ள முடியும். போட்டி நடைபெறும் திகதி போட்டியாளர்களுக்குத் தனித்தனியே அறிவிக்கப்படும்.

பேச்சு மற்றும் கவிதைப் போட்டிக்கான தலைப்புகள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர்பில் அமைந்திருக்கும் எனவும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் தங்கம், வெள்ளி, வெண்கலப்பதக்கப் பரிசில்கள் வழங்கப்பெறும் எனவும் கொழும்புக் கம்பன்கழகம் அறிவித்துள்ளது.

## இலங்கைக் கொலையாளிக்கு நோர்வேயில் தண்டனை

புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்து கொலைகள் செய்தமைக்காக, முன்னாள் புலி உறுப்பினர் ஒருவருக்கு நோர்வேயில் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2007 ஆம் ஆண்டு நோர்வே சென்று அரசியல் தஞ்சம் கோரிய பிரஸ்தாப இளைஞர், தனது ஆரம்ப வாக்குமூலத்தில் 2004-2006 இடைப்பட்ட காலப்பகுதியில் புலிகள் சார்பாக மூன்று கொலைகள் செய்ததாகத் தெரிவித்திருந்தார். இதனால் இவரது புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அண்மையில், நோர்வே பொலிசாரால் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப இளைஞர் கடந்த 28ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டார். இவரை மூன்று வாரங்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புகலிடக்கோரிக்கையின் போது அளித்த வாக்குமூலத்திறகு முரணான வகையில் தற்போது நீதிமன்றில் வாக்குமூலம் அளித்திருக்கும் பிரஸ்தாப இளைஞன், தான் எந்தக் கொலையும் செய்யவில்லையெனவும், புலிகளுக்கு அஞ்சியே புகலிடம் கோரியதாகவும் தற்போது தெரிவித்துள்ளார்.

இதுபற்றிக் கருத்துக் கூறும் குறித்த வழக்கின் அரச சட்டத்தரணி அட்.ஜிம்மர் "சட்டம் கருணை காட்டாது எனவும், குற்றவாளிகளுக்குத் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படமாட்டாது" எனவும் தெரிவித்துள்ளார்.

## பணிப் பகிஷ்கரிப்பு

ஆண் தொழிலாளர்களுக்குத் தேயிலைக் கொழுந்து பறிக்கும் தொழில் வழங்கி வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தோட்டத் தொழிலாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

பொகவந்தலாவ பிரதேசத்தில் அமைந்துள்ள கொட்டியாகலை மத்திய பிரிவைச் சேர்ந்த சுமார் 400 தொழிலாளர்கள் கடந்த திங்கட்கிழமையில் இருந்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த தோட்டத்தில் பணிபுரியும் ஆண் தொழிலாளர்களுக்கு உரிய தொழிலை வழங்காது, தொடர்ந்தும் கொழுந்து பறிக்கும் தொழிலில் ஈடுபடுமாறு தோட்ட நிர்வாகம் வலியுறுத்தி வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதாக கூறப்படுகின்றது.

அதேவேளை, ஆண் தொழிலாளர்களுக்குப் பொருத்தமான வேலை இல்லாமையினாலேயே கொழுந்து பறிப்பதற்கு அவர்களை ஈடுபடுத்தி வருவதாகவும், அவர்களுக்கான வேலைகள் வரும்போது அவர்கள் அதில் ஈடுபடுத்தப்பட்டுவார்கள் எனவும் தோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# இலங்கையில் திருமாவளவனுக்கு அவமானம் தேர்தல் களத்தில் பிரதிபலிக்குமா?



பார்வதி அம்மாளின் இறுதிக் கிரியையின்போது...

பார்வதி அம்மாளின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன் வரவுள்ளார் என்ற செய்தி வெளியாகியதையடுத்து, கட்டுநாயக்க விமானநிலையம் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. இதனையடுத்து விமான நிலையம் வந்திறங்கிய திருமாவளவன் திருப்பி அனுப்பப்பட்டிருந்தார். இதையடுத்து சென்னையில் தூதரகத்தின் முன்னால் கூடிய ஆயிரத்துக்கு மேற்பட்ட விடுதலைச் சிறுத்தை ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். கொழும்பிலிருந்து திருமாவளவன் ஏமாற்றத்துடன் ஆர்ப்பாட்ட இடத்தைச் சென்றதையடுத்து ஆவேசம் கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் தூதரகத்தை முற்றுகையிட முயற்சிக்கையில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். ஏற்கனவெ இறுதி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலங்கை வரத் திட்டமிட்டிருந்த பழநெடுமாறன், சீமான், போன்றவர்கள் இறுதி நேரத்தில் தமது முடிவை மாற்றி திருமாவளவனை அனுப்பி வைத்திருந்தனர். ஏற்கனவே இந்திய பாராளுமன்ற உறுப்பினர் குழுவுடன் இலங்கை வந்த பொழுது பார்வதி அம்மாளைப் பார்ப்பதற்கு திருமாவளவனுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இப்பொழுது அது மறுக்கப்பட்டமை மற்றும் மேலதிக சிகிச்சைகளுக்காக பார்வதி அம்மாள் இந்தியா செல்லவிருந்த போது இந்திய அரசு அனுமதியாமை போன்றவை, புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளின் தாக்கமாகவே பார்க்கப்பட வேண்டுமென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பார்வதி அம்மாளுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதன் ஊடாக சட்டமன்றத் தேர்தலில் தமிழ் தேசிய உணர்வாளராக தன்னைக் காட்டி வாக்குகளைச்சேகரிக்க திருமாவளவன் விரும்பினாரெனவும் அவரின் திட்டங்களுக்கு மாறாக இலங்கையில் ஏற்பட்ட அவமானமும், ஏமாற்றமும் தேர்தல் களத்தில் எதிர்விளைவுகளை ஏற்படுத்துமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டுமென தமிழகச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே தமிழகத்தைச் சேர்ந்த புலி ஆதரவுத் தலைவர்கள் தமது அனுதாபச் செய்திகளை வெளியிட்டிருந்தனர். தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேரடியாகச் சென்று தமது அஞ்சலியைத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் பல்வேறு தரப்பினரதும் கவனத்தை ஈர்த்த பார்வதி அம்மாளின் இறுதிச்சடங்குகளில் அவரின் உறவினர்கள் ஊரவர்களென குறிப்பிட்ட அளவினரே கலந்து கொண்டனர். இது இவ்வாறிருக்க. இன்று நடைபெறவிருந்த அமெரிக்கன் மிஷன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி பிற்போடப்பட்டிருந்தது. இதற்கான விளக்கத்தை தெரிவிக்கும்படி பாடசாலை அதிபருக்கு உயர்மட்டத்திலிருந்து அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

**தினமுரசு வாரமலர்**

த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

# முரசம்

## கற்றுக் கொள்ள நிறையவே உண்டு

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்குக் காலியில் நல்ல பாடம் கிடைத்திருக்கின்றது. சாட்சி சொல்ல எவரும் வரவில்லை என்று பெரும் ஏமாற்றத்தோடு திரும்பியிருக்கிறார்கள். ஏற்கெனவே ஒரு தடவை குறிப்பிட்டதைப் போல சாட்சியங்கள் என்று குறிப்பிட்டால் குற்றவாளிகளுக்கான அழைப்பாகவே அது இருக்கும்.

வடக்கு, கிழக்கு மக்களைப் பொறுத்தவரை என்ன பெயர் கொண்டு அழைத்தாலும் தாங்கள் அனுபவித்த வலிகளையும் இழந்த இழப்புக்களையும் சுமந்து நிற்கும் வடுக்களையும் காலங்காலமாக மாறிமாறி வந்த தென்னிலங்கை தலைமைகளால் ஏமாற்றப்பட்ட வரலாறையும் எங்கெல்லாம் பதிவு செய்ய முடியுமோ அங்கெல்லாம் பதிவு செய்ய வேண்டிய கட்டாயமிருப்பதாகவே கருத இடமுண்டு.

விசாரணை என்று தமிழ் மக்களிடம் எவர் சென்றாலும் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் பொதுக்கைதிகளாகவே சாட்சியளிக்க வேண்டிய கட்டாயத்தில் தமிழ் மக்கள் இருக்கிறார்கள்.

வடகிழக்கில் வாழ்ந்தாலென்ன கொழும்பு போன்ற நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்தாலென்ன எந்த நேரத்திலும் எவரொருவர் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற துரதிர்ஷ்டம் இன்னும் தொடர்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இதை சாதாரணமொழி வழக்கில் நம் முன்னோர்கள் சொல்லுவார்கள். "தமிழனாகப் பிறந்ததே குற்றம் தானே" என்று. அடிப்படையில் இந்நிலைப்பாடுதான் இன்னும் நீறுபூத்த நெருப்பாகக் கனன்றுகொண்டு இருக்கும் தமிழர் அரசியல் உரிமைப் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணமாக, இந்நிலையிலிருந்து சற்று மாறுபட்ட அல்லது பிரச்சினைகளின் விளைவுகளால் பாதிக்கப்பட்ட எவருக்கும் சாட்சிக் கூண்டில் ஏறி நிற்பதற்கு விருப்பம் இருக்க நியாயமில்லை.

ஆணைக்குழு விரும்பினால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களிடம் சாட்சியங்களைப் பதிவு செய்தது போல தெற்கு, மேற்கு சிங்களச் சகோதரர்களிடமும் சாட்சியங்களைக் கோரலாம். அத்தகைய முயற்சி தமிழ் மக்களின் அரசியல் உரிமை பிரச்சினை குறித்து இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மைச் சிங்கள சகோதரர்கள் என்ன கருத்தியலை அல்லது அபிப்பிராய பேதங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை முழு உலகமும் புரிந்துகொள்ள உதவும்.

அத்தகையதொரு தெளிவு காணப்படுவது அவசியமானதென்பதைக் காலம் உணர்த்தியிருக்கிறது. மக்களின் பெயரால் அரசியல் நடத்தும் எல்லா அரசியல் போலிகளின் சுயரூபமும் அம்பலத்துக்கு வரும். அந்த முடிவு மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பிளவுபட்டு நம்பிக்கையீனங்களுக்குள் விழுந்து கிடக்கும் சிங்கள-தமிழ் மக்களின் புரிந்துணர்வுக்கும் சுபீட்சமான எதிர்காலத்துக்கும் வழிவகுக்கும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

சிவன்

# இலங்கையில் அதிகரிக்கும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்

## காத்திருக்கும் அதிர்ச்சிகள்





ஒருவனுக்கு ஒருத்தி என்ற குடும்ப வாழ்க்கையில் ஒழுகி கலாசாரப் பண்பாடுகளை இறுக்கமான வரையறைகளை வகுத்து பொருளாதார ரீதியில் முன்னேறிய நாடுகள் எல்லாம் வியக்கும் கலாச்சாரமுடைய நாடுகளில் ஒன்றாக விளங்கிய எமது நாட்டில், அண்மைக் காலமாகவே கட்டிக் காக்கப்பட்ட பண்பாட்டு பெருமைகளுக்கு களங்கம் ஏற்படுவதான சம்பவங்கள் அரங்கேறி வருவதை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது. அதன் ஓர் அம்சமாகவே அதிகரித்து வருகின்ற சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களும் நோக்கப்படுகின்றன. இவ்வாறன துஷ்பிரயோகங்களுக்கே மாற்றம் ஒன்றே மாற்றமில்லாதது என்ற கருத்தியலின்படி சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணங்களாக அமைகின்றன.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் எனும்போது, அதனை இரண்டாக வகைப்படுத்தலாம். ஒன்று சிறுவர்களை தவறான முறையில் அவர்களின் விருப்பமின்றி பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்துதல் அல்லது தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்துதல். மற்றையது சிறுவர்கள் தவறான முறையில் பாலியல் ரீதியிலான செயற்பாடுகளில் ஈடுபடுதல். அதாவது தமது எல்லையை மீறி துஷ்பிரயோகங்களில் ஈடுபடுதல்.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக தேக்கநிலையில் இருந்த இலங்கை சுற்றுலாத் துறையானது தற்போது வேகமான வளர்ச்சியைக் காட்டுகிறது. கடந்த வருடத்தில் மாத்திரம் சுமார் 6 இலட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். இவர்களின் வருகையால் அந்நியச் செலாவணி வருகை அதிகரிக்கின்ற அதேவேளை, சில பாதகமான காரணிகளும் உள்நுழைவதை மறுக்க முடியாது. அது தவிர்க்க முடியாததும்கூட. தமது மகிழ்ச்சியான பொழுதைக் கழிக்க வருபவர்களிடம் கட்டுப்பாடுகள் விதிக்கப் படுமாயின் சுற்றுலாப் பயணிகளின் அபிமானத்தை வெல்லாத நாடாக இலங்கை மாறிவிடும். அது பொருளாதாரத்தில் தாக்கத்தைச் செலுத்தும்.

மிக வேகமாக உள்நுழைகின்ற தொழில்நுட்ப வளர்ச்சி அதாவது இன்ரநெற், ஈமெயில், கைத்தொலைபேசி என்பவை எல்லாம் இன்று சாதாரண மக்களினால் கூட கையாளப்படுகின்ற விடயங்களாக மாறியுள்ளது. இவற்றின்மூலம் இதுவரை காலமும் பண்பாட்டு விழுமியங்களுக்காக மூடி மறைக்க விரும்பிய அனைத்து விடயங்களும் சர்வசாதாரணமாக காண்பிக்கப்படுகின்றது. இவற்றைப் பார்க்கின்ற சாதாரண மக்களின் மனங்களில் இயற்கை உணர்ச்சிகள் ஏற்படுவது, ஏற்பட்டு அவை வரம்பு மீறிச் செல்வது எமது சமூகத்தின் கலாசார விழுமியங்களுக்கு சாபக் கேடாக அமைகின்றது.

மாறிவருகின்ற அவசர யுகத்தில் கடந்த காலங்களைப் போன்ற குடும்பக் கட்டுக்கோப்புகளும் இல்லாமல் அருகி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. முன்பெல்லாம் எமது சமூக அமைப்புப்படி குடும்பத் தலைவன் வேலைக்குச் சென்று பணம் சம்பாதிப்பதும் குடும்பத் தலைவி அந்தப் பணத்தைக் கொண்டு குடும்பத்தை பராமரித்து பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் மரபு, இன்று பொருளாதாரச் சுமை அந்த மரபில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. குடும்பத்தின் தலைவன், தலைவி இருவரும் தொழிலுக்குச் செல்வதன் ஊடாகவே குடும்பச் சுமையை சமாளிக்க முடியும் என்கின்ற நிலை. இதனால் பெற்றோர் தவிர்ந்த ஏனையோரின் பாதுகாப்பிலே சிறுவர்கள் இருக்கின்ற நிலை ஏற்படுகின்றது. இங்கு வேலிகளே பயிரை மேய்ந்து நாசம் செய்கின்ற எத்தனையோ சம்பவங்கள் எம்மைச் சூழ்ந்து இடம்பெறுவதை மறுக்கமுடியாது.

அதிகரித்து வருகின்ற பொருளாதார அழுத்தங்களை சமாளிப்பதற்காகவும் மேலைநாடுகளின் மோகத்தினாலும் நாட்டில் நிலவி வருகின்ற வேலைவாய்ப்புப் பிரச்சினை காரணமாகவும் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்கின்றவர்களும் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. இதிலும் வருடந்தோறும் சாதாரணமாக 60,000 வரையிலான பெண்கள் அரேபிய நாடுகளுக்கு பணிப்பெண்களாகச் செல்கின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் செல்கின்ற இடங்களில் தவறான முறையில் வழிநடத்தப்படுகிறார்கள். இன்னும் சிலர் தவறான முறையில் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இளந்தாய்மாரும் பணிப்பெண்களாகச் செல்வதால் இங்கு தாய்ப்பாசத்தை இழக்கின்ற பிள்ளைகள் தறிகெட்டுச் செல்வதும், சுற்றத்தாலும் உறவுகளாலும் சீரழிக்கப் படுவதும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

நீண்ட கால யுத்தத்தின் பின்னர் நாட்டில் இப்போது ஒரு அமைதிச் சூழல் நிலவி வருகின்றது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பல்வேறு நிறுவனங்களும் தங்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கும் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் எமது நாட்டைப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். இந்நிலையில் பதின்ம வயதில் இருக்கின்ற இன்றைய சந்ததியினரைப் பொறுத்தவரையில் யுத்தம் முடிந்துவிட்டது. கிடைக்கப்பெறுகிற புதிய புதிய கவர்ச்சிகளின் பின்னால் மனங்களை அலைபாய விட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் எம் மத்தியில் இருந்த கலாசாரப் பண்பாடுகள் பற்றிய புரிதலும் இதுவரை காலமும் நடைபெற்று வந்த ஆயுதப் போராட்டம் பற்றிய அடிப்படை விளக்கமும் அவ்வளவாக இல்லை. அதனைச் சொல்லிக் கொடுப்பதற்கும் பெற்றோர் ஒருவித தயக்கத்தை காட்டுகின்றனர். எனவே அவர்களைப் பொறுத்தவரையில் கிடைக்கப்பெறுகின்ற தகவல்களின் பின்னால் தங்களின் மனங்களை அலைபாய விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு பல்வேறு காரணங்களினால் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரிக்கின்றது என்றால் அதற்கு அடிப்படைக் காரணம், எம்மத்தியில் பாலியல் விடயங்கள் சம்பந்தமாக பூரண தெளிவின்மையே ஆகும். பாலியல் என்பது சபையில் பேசக் கூடாத சமாச்சாரமாகவும், கணவன்-மனைவி இருவருக்கும் மட்டும் மூடிய அறையில் பேசப்பட வேண்டிய விடயங்களாகவும் எமது சமூகம் பாலியலை வரையறுத்து வைத்துள்ளது. ஒரு தாய், பருவ வயதை அடைகின்ற பிள்ளைகளுக்கு பாலியல் பற்றிய நன்மை தீமைகளை எடுத்துக் கூற முடியாதுள்ளது. ஆனால் இயற்கையின் நியதி எமது சிறார்களுக்கும் உடல்உள நிலைகளில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான மாற்றங்களினால் விந்தை புரியாது தவிக்கின்ற பருவ வயதினர் அதுபற்றிய விளக்க ஞானம் ஏதுமின்றி இருக்கின்றனர். இவ்வாறானவர்களின் பார்வையில் மேலைத்தேய பழக்கவழக்கங்கள் படுகின்றபோது, வழிதவறி எடுபட்டுப் போகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளிலேயே பாடசாலைக் கல்வியில் முதன் முதலில் பாலியல் சம்பந்தமான விடயங்களைப் போதிப்பதற்கான தீர்மானத்தை எடுத்து நடைமுறைப்படுத்தியது சுவீடன். அதைத் தொடர்ந்தே ஏனைய ஐரோப்பிய நாடுகளும் பாலியல் கல்வியை ஊக்குவிக்கின்றது. சுவீடன்தான் இப்போது பாலியல் துஷ்பிரயோகங்கள் குறைந்த நாடாக இருக்கின்றது. ஆனால் பாலியல் சம்பந்தமாகப் பேசுவது பாவம் என்றும் குடும்பக் கட்டுப்பாடு குலைந்து விடும் என்றும் பேசிக் கொண்டிருந்த இந்தியா போன்ற நாடுகளில்தான் இன்று பாலியல் துஷ்பிரயோகம் மிகவும் அதிகளவில் காணப்படுகின்றன. இது அனுபவரீதியாக புரிந்து கொள்ளப்பட்ட நிலையிலேயே தற்போது இந்தியாவில் பாலியல் பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கு சில முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கும் கடும்போக்கு இந்துத்துவக் கட்சிகள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

அதைவிட எமது நாடுகளில் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பதற்கான முக்கிய காரணமாக பார்க்கப்படுவது குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதே ஆகும். பாதிக்கப்படுகின்றவரின் எதிர்காலம், குடும்பத்தின் கௌரவம் போன்ற சிறுவிடயங்களை முதன்மைப்படுத்துகின்ற எமது சமூகம் குற்றவாளியை இனங்கண்டிருப்பினும் சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்காது ஒதுங்கிக் கொள்கின்றனர். இது குற்றவாளிகளுக்கு வாய்ப்பாக அமைந்து தொடர்ந்தும் குற்றச் செயல்களில் ஈடுபட

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# இத்தாலியப் பிரதமரின் தலை தப்புமா?

## பாலியல் குற்றச்சாட்டுக்கள்!

அலசுவது - மதியூகி -

**"ஆவதும்** பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" இந்தப் பாடல் வரிகளோடுதான் இத்தாலியப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்ஹோனியின் பெண்கள் சமாச்சாரத்தை எழுதவேண்டியுள்ளது.

பழம்பெரும் பண்பாடுகளையும் கலாசார விழுமியங்களையும் தனது அத்திவாரமாகக் கொண்டிருக்கும் இத்தாலியானது ஐரோப்பிய நாடுகளின் பட்டியலில் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றது. இதற்கு இன்னொரு விசேட காரணம், கிறிஸ்தவப் பெருமக்களின் வணக்கஸ்தலமாகவும், நம்பிக்கையின் உறை விடமாகவும் இருக்கும் வத்திக்கான் அங்கே இருப்பதுதான்.



பிரதமரின் சலுகை...



இத்தாலியப் பிரதமர், பதவியைத் துஷ்பிரயோகம் செய்ததாகவும், பல பெண்களோடு பாலியல் தொடர்புகளைக் கொண்டுள்ளதாகவும் பணம் கொடுத்து விபச்சாரத்தில் ஈடுபட்டதாகவும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகியிருக்கின்றார்.


இப்போது புதிதாக பெண்களை அவமதிக்கின்றவராகவும் அவர் மீதுபெண்கள் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியிருக்கின்றன. அண்மையில் இத்தாலியில் பிரதமருக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமானது ரோம், பாரி, வெனிஸ், டிரைண்ட், பலர்மோ உள்ளிட்ட இருநூறு நகரங்களில் முழுக்கப் பெண்களே கலந்துகொண்ட ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அதே வேளை ஜப்பானிலுள்ள இத்தாலிய தூதரகத்தின் முன்னாலும், நூற்றுக்கணக்கான பெண்கள், இத்தாலிய பிரதமருக்கு எதிரான போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

இத்தாலிய நகரங்களில் கூடிய ஆயிரக்கணக்கான பெண்கள், பெண்களை அவமதித்து நடக்கும் செயற்பாடுகளுக்காகவும் பாலியல் குற்றச்சாட்டுக்களுக்காகவும் பரி–காரமாக பிரதமர் பதவியிலிருந்து விலக வேண்டுமென வலியுறுத்தினர். ஆனாலும் அந்தக் கோரிக்கையை பிரதமர் பெர்லுஸ்ஹோனி மறுத்தார். இருந்தபோதும் இத்தாலியப் பிரதமருக்கு எதிராக 600 பக்கங்களில் உள்ளடங்கும் குற்றச்சாட்டுகளும் அதற்கான சான்றுகளுமான வழக்கு விசாரணை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி மிலான் நகர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

குற்றச்சாட்டுக்கள் இத்தாலியப் பிரதமர் பெர்லுஸ்ஹோனி பெண்களோடு பாலியல் தொடர்புகளைக் கொண்டிருந்ததாகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதிலும் சூடுபிடித்திருக்கும் விவகாரமாக இருப்பது மொராக்கோ நாட்டைச் சேர்ந்த 17 வயது யுவதியான ஹரிமா எல் மெக்ரக் அல்லது ரூபி என்றழைக்கப்படும் இரவு விடுதிகளில் நடனமாடும் விபச்சார யுவதியுடன் பாலியல் உறவு கொண்டதே முதன்மைக் குற்றச் சாட்டாக சுமத்தப்பட்டுள்ளது. இந்த யுவதி திருட்டுக் குற்றச்சாட்டில் சிறைக்குள் இருந்தவர் என்றும் அவரை தனது தேவைக்காகப் பதவியைத் துஷ்பிரயோகம் செய்து பிரதமர் விடுதலை செய்திருந்தார் என்றும், அதற்காக அவ் யுவதியைத் தனது விருந்துக்கு அழைத்து உறவு கொண்டதோடு அவருக்கு 7000 யூரோ ரூபா பணமும் வழங்கியிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. இக்குற்றச்சாட்டை இத்தாலியப் பிரதமர் மறுத்துள்ளார். இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும், மேல் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு எடுக்க உத்தரவிட்ட நீதிபதிகள் இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்டவர்கள் ஆகையால், தன்னை வீழ்த்துவதற்காக இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு முன்னுரிமை அளிப்பதாகவும் கூறியிருந்தார்.

இருந்தபோதும் இத்தாலிய சட்டத்தின்படி பராயம் அடையாதவர்களோடு பாலியல் உறவு கொள்வதும், பணம் கொடுத்து பாலியல் உறவு கொள்வதும் சட்டத்திற்கு விரோதமானதாகும். இவ்விரண்டு குற்றச்சாட்டுக்களும் ரூபியுடனான தொடர்பில் பிரதமருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளது. அதேவேளை இக்குற்றச்சாட்டுக்கள் கொண்டிருக்கும் ஆதாரங்கள், பெண்கள் அமைப்புக்களின் எதிர்ப்பு, தனிப்பட்ட நடத்தை என்பவைகளைக் காரணமாக வைத்துப் பிரதமரின் இரண்டாவது மனைவியும் விவாகரத்துப் பெற்றுப் பிரிந்துசென்றுவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை பிரதமர் பெர்லுஸ்ஹோனிக்கு அதிர்ச்சி தந்த மற்றொரு செய்தியும் வெளியாகியிருக்கிறது. அதாவது விபச்சாரப் பெண்களோடு பிரதமர் நிர்வாணமாக இருக்கும் புகைப்படங்கள் தம்மிடம் இருப்பதாகவும் அவற்றை 7.2 கோடி ரூபாவிற்கு விற்பனை செய்யவுள்ளதாகவும் இத்தாலிய இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது. இச்செய்திக்கு பதிலளித்திருக்கும் பிரதமரின் செய்தியாளர், அவ்வாறான புகைப்படங்கள் போலியானவை என்றும் கணினியின் தொழில்நுட்ப உதவியோடு அவை வடிவமைக்கப் பட்டதாக இருக்கலாமென்றும் கூறியுள்ளார். பிரதமர் பெர்லுஸ்ஹோனியின் பதவிக்கு ஆபத்தைத் தரக்கூடிய இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் நீதிமன்ற அமர்வுகளில் நீதியை வழங்க இருப்பவர்கள் மூன்று பெண் நீதிபதிகள் என்பது பிரதமர் பெர்லுஸ்ஹோனிக்கு நிம்மதியைக் கெடுக்கும் செய்திதான். இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்படுமாக இருந்தால் 74 வயதான பிரதமர் இத்தாலியச் சட்டப்படி 15 வருடங்கள் சிறை வாசம் அனுபவிக்க வேண்டியிருக்கும்.



அவமானத்துடன்...



உல்லாசத்தில்...

# அதிரடி அய்யாத்துரை

**பிரபாகரனின்** தாயார் பார்வதி அம்மாள் காலமான செய்தி இலங்கையை விடவும் புலம்பெயர்ந்து வாழுறவைக்குத்தான் ரொம்பத் துக்கமாய் இருந்திச்சுதாம். மரணம் எல்லோருக்கும் துக்கமான செய்திதானே. அதை யார் தூக்கிப் பிடிக்கினம் எண்டதாலதானுங்கோ துக்கப்படுகிறவையளின்ர கற்றக்கறியே மாறுதுங்கோ.

பார்வதியம்மாவைப் பக்கத்திலிருந்து பார்த்துக்கொள்ளுறதிலையே பொலிக்ரிஸ் பண்ணின தமிழ் உணர்வாளர்கள் அம்மாச்சி இவ்வளவு கெதியில போயிருக்கக் கூடாதெண்டு நிச்சயமாய் கவலைப்பட்டிருப்பினமுங்கோ.

உள்ளூராட்சித் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் வரைக்குமாவது அம்மாச்சி ஆஸ்பத்திரியிலேயே கிடந்திருக்கலாம். அதைச்சொல்லியே வண்டி ஓட்டியிருக்கலாமெண்டு கண்ட கனவையெல்லாம் உப்பிடி அம்மாச்சி கலைச்சுப்போட்டாவே எண்ட துக்கம்தான் சிலோனில சிலருக்கு இருக்குதாமுங்கோ.



**உள்ளூராட்சித்** தேர்தல்கள் நடக்கப்போகுது எண்டு அறிவிச்ச காலத்தில இருந்து சமிக்ஞைகள் சரியில்லையுங்கோ. கிரிக்கெட் போட்டிகள் நடக்கப்போகுதெண்டு தெற்கில சில இடங்களில நடக்காதெண்டாங்கள். பிறகு கிழக்கில மழையெண்டு ஒத்திப்போட வேணுமெண்டாங்கள். இப்ப வழக்கில நிக்குதெண்டு சிலதுகள ஒத்திப்போடப் போறமெண்டுறாங்கள்.

எனக்கென்னமோ ஆரம்பத்தில இருந்தே எங்கேயோ பிசகிக் கிடக்குது போலத் தெரியுதுங்கோ. கிராமத்தவர்கள் கிரிக்கெற் பார்க்க ஏற்பாடு செய்யிற மாதிரி கிராமத்தின்ர அபிவிருத்தி ஏற்பாடுகளும் கிரமமா நடக்கவேணுமெண்டால் உந்த உள்ளூராட்சித் தேர்தல் இழுபாடுகளுக்கும் நல்லதொரு தீர்வு காணப்பட வேணுமுங்கோ.

பிறகு கிராமங்கள் ஹம்பாந்தோட்டையில மட்டுமோ இருக்குதெண்டு கேள்வி கேட்டுப் போடாதையுங்கோ. நான் பாவமல்லோ.

**உள்ளுக்குள்ள** ஒரு செய்தி தலையும் இல்லாம, வாலும் இல்லாம உலாவித் திரியுதுங்கோ. இது வதந்தியெண்டும் விடமுடியல்லை. உண்மையாயும் இருக்குமெண்டும் திங் பண்ண முடியல்லை.

அதிகாரமானவருக்கும் எங்கட தமிழ்த் தேசியவாதிகளுக்கும் அண்மையில நடந்த பேச்சுவார்த்தையில அதிகாரமானவர் கூட்டமைப்பிட்ட கேட்டவராம்.

போர்க்குற்றச்சாட்டுக்களை நீங்கள் மேலே தூக்கக் கூடாது. அதேநேரம் அந்த விஷயத்தில நீங்கள் மௌனமாக இருக்க வேணும். உந்த டீலுக்கு ஓ.கே. எண்டால் அதிகாரப் பகிர்வு ஒண்டுக்குதான் ரெடி எண்ட மாதிரி சொன்னவராமுங்கோ. அது உண்மையோ, பொய்யோ எண்டு தெரியாதுங்கோ.

உதில பகிடி என்னெண்டால் எங்கட தேசியக் கூட்டமைப்புக்காரர் இதுவரைக்கும் , யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில மூச்சும் இல்லாம, பேச்சும் இல்லாம மூச்சையாய் கிடக்கினம். அப்படியெண்டால் கிலோ எவ்வளவு எண்டு கேக்குமாப்போல இருக்கிறவையிட்ட அதிகாரமா–னவர் இப்படிக் கேட்டிருப்பாரோ எண்டது எனக்குச் சந்தேகமுங்கோ.

# குழந்தையை கண்டிப்புடனும் செல்லமாகவும் வளருங்கள்

**குழந்தை** பிறந்த சில நாட்களுக்கு தாய்க்கும், குழந்தைக்கும் அமைதியும், அதிகமான ஓய்வும் தேவை. குழந்தை தினமும் 23 மணி நேரம் தூங்க வேண்டும். தாயும் அதிக நேரம் தூங்க வேண்டும். அந்த நேரத்தில் சத்தமில்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது. குழந்தை பிறந்ததும் உறவினர்கள் பார்க்க வந்து தாய் மற்றும் குழந்தைக்கு தொந்தரவு கொடுக்காமல் சில நாட்கள் கழித்து குழந்தையை பார்த்து கொஞ்சுவதே மிகவும் நல்லது. குழந்தை பிறந்த சில நாட்களுக்கு மற்றவர்கள் தூக்கி கொஞ்சாமல் இருப்பது சுத்தமானது, சுகாதாரமானது.

குழந்தைக்கு ரோல் மொடலே பெற்றோர்கள்தான். அவர்கள் தங்கள் கடமைகளைச் சரியான நேரத்தில், ஒழுங்காக செய்தாலே குழந்தைகளும் அதை செய்ய ஆரம்பித்து விடுவார்கள். இரவு 12 மணி வரை தொலைக்காட்சி பார்ப்பது, காலையில் தாமதமாக எழுவது, அடிக்கடி வெளியில் சாப்பிடுவது போன்ற பெற்றோரின் பழக்கங்கள் குழந்தைகளிடம் மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும். குழந்தைகள் படிக்கும்போது பெற்றோர்கள் தொலைக்காட்சி பார்ப்பதையோ, வெளியே செல்வதையோ அல்லது யாரிடமாவது மகிழ்ச்சியாக பேசுவதையோ தவிர்ப்பது நல்லது.

குழந்தைக்கு சேலை மற்றும் இதர துணிகளால் தொட்டில் கட்டுவது கூடாது. இதனால் குழந்தைக்கு பல தீமைகள் ஏற்படும். குழந்தை தன் விருப்பத்திற்கு கை, கால்களை ஆட்டவும், புரண்டு படுக்கவும் முடியாது. தன் நெஞ்சு மற்றும் உடம்பை குறுக்கிக் கொண்டு தூங்க வேண்டிய சூழல் ஏற்படும். காற்றோட்டமும் குறையும். இதனால் குழந்தைக்கு மார்பில் மூக்கடைப்பும், சளியும் ஏற்படும். மேலும் தொட்டிலில் தூங்கும் குழந்தைகள் அடிக்கடி விழித்துக் கொள்ளும். இதனால் தாய்க்கும் தூக்கம் கெடும்.

"ஊட்டி வளர்த்த பிள்ளை உருப்படாது" என்பது பழமொழி. சாப்பிடுவதற்கு குழந்தைகள் அடம் பிடித்தால் ஊட்டுவதை நிறுத்துங்கள். சாப்பாட்டைக் கண்டால் ஒரு வெறுப்புணர்ச்சி ஏற்படும்படி செய்ய வேண்டாம். சாப்பாடு வேண்டும் என்று குழந்தை கேட்கும் வரை கண்டுகொள்ளாமல் பொறுமையாக இருக்கவும். வீட்டில் உள்ள மற்றவர்கள் சாப்பிடும் போது குழந்தைக்கும் சாப்பாடு வைத்து மற்றவர்களை பார்த்து சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்தவும். நாளடைவில் குழந்தைக்கு நல்ல சாப்பாட்டு பழக்கத்தை இது உருவாக்கும். குழந்தைகளை மற்ற குழந்தையுடன் ஒப்பிட வேண்டாம். ஒப்பீடு செய்வது பெற்றோர்கள் செய்யும் மிகப் பெரிய தவறு.

ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு விதத்தில் மற்ற குழந்தையை மிஞ்சித் தான் இருப்பார்கள். பெற்றோர்களின் ஊக்குவிப்பினால் குழந்தைக்கு தன்னம்பிக்கை அதிகமாக வேண்டும், மேலும் நீங்கள் கொடுக்கும் பயிற்சியால் குழந்தை மிகவும் திறமை சாலியாக மாறும் சூழல் ஏற்படும். ஆரம்பத்தில் தோல்வி கண்டாலும் ஊக்குவித்தால் குழந்தைகள் முயற்சி செய்து வெற்றி அடைவார்கள்.

குழந்தையை மிகுந்த கண்டிப்புடன் வளர்ப்பது தவறு. கண்டிப்பு இல்லாமல் மிகுந்த செல்லத்துடன் வளர்ப்பதும் தவறு. குழந்தையை கண்டிப்புடனும், செல்லமாகவும் வளர்க்க வேண்டும். கண்டிப்புடன் வளர்க்கும் பெற்றோரை குழந்தைகள் நேசிக்காமல் பயப்படுவார்கள். கண்டிக்காமல் செல்லம் கொடுத்து வளர்த்தால், குழந்தை பெற்றோரை தாம் நினைத்ததைச் செய்யும் அடிமை என்று நினைத்து விடுவார்கள். இதனால் அந்தக் குழந்தையின் எதிர்காலம் பாதிக்கப்படும். அடம் பிடிக்கும் குழந்தையிடம் எக்காரணம் கொண்டும் பெற்றோர்கள் அடிபணியக் கூடாது. தொடர்ந்து குழந்தை பிடிவாதம் செய்ய ஆரம்பித்தால், அலறினால் யாரும் கண்டு கொள்ள வேண்டாம். குழந்தையை அடிக்கவோ, அதட்டவோ, கட்டாயப்படுத்தவோ வேண்டாம். இது கஷ்டம்தான் என்றாலும் பொறுமையாக பெற்றோர் இருந்தாலே, பிடிவாதம் செய்தால் நமக்கு எதுவும் கிடைக்காது என்பதை குழந்தைகள் புரிந்து கொள்வார்கள். பின்னர் அமைதியாக இருக்கும்போது பொறுமையாக எடுத்துச் சொல்லி புரிய வைக்கவும். ■




**நன்றி – இணையம்**

# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் – 08

159



ஒன்றைப் பார்த்த உடனேயே, 'இது விஷம்' என்று கண்டு கொள்பவனே அறிவார்ந்த யோகி.

'இது மோசம்' என்று கண்டு கொள்கிறவன் அறிவார்ந்த யோகி.

அதை அனுபவித்துப் பார்த்து விலகுபவன், அனுபவ யோகி.

அறிவார்ந்த யோகியின் செயலைத்தான், 'ஞான திருஷ்டி' என்கிறார்கள்.

ஒரு பஸ்ஸில் ஏறி வெளியூருக்குச் செல்ல விரும்பினார் ஒரு நண்பர். திடீரென்று 'இன்றைக்குப் போக வேண்டாம்' என்று முடிவு கட்டினார்.

அன்று அந்த பஸ் விபத்துக்குள்ளாகிவிட்டது.

இது இறையருள் யோகம்.

இறைவன் எல்லோருக்கும் இந்தச் சக்தியைக் கொடுப்பதில்லை.

பூர்வஜென்ம விதிவசத்தால் சிலருக்கு இது கைகூடுகிறது.

நூறாண்டுகளுக்கு ஒரு முறை, இப்படி இறையருள் யோகம் கைவரப் பெற்றவர்கள் பிறக்கிறார்கள்.

இந்த விதிவிலக்குகளை நம்முடைய வாழ்க்கையில் எடை போடக் கூடாது.

உண்மையான யோகம் என்பது, நான் முன்னே சொன்னபடி, வாழ்ந்துகொண்டே வாழாமல் இருப்பது, அல்லது வாழாமலே வாழ்வது.

பகவான் கீதையிலே கூறும் முக்கியமான யோகங்கள் சில. கரும யோகம் அவற்றிலே ஒன்று.

'கருமத்தைச் செய்; பலனை எதிர்பார்க்காதே' என்பதே பகவான் வாக்கு.

இதை ஆயிரக்கணக்கான தடவைகள் நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

இதன் பொருள் என்ன?

'அலுவலகத்தில் வேலை பார், சம்பளம் வாங்காதே' என்பதா?

சாதாரண மனிதனுக்கு அப்படித்தான் தோன்றும்.

ஆனால் உண்மை அதுவல்ல.

உனக்கென்று சில சுய தர்மங்களை வகுத்துக்கொள்.

'பத்துப்பேருக்கு உதவுகிறது' என்று வைத்துக்கொண்டால், எந்தப் பத்துப் பேரிடமிருந்து எதையும் நீ எதிர்பார்க்க முடியாதோ, அவர்களுக்கு உதவு.

'கருமம்' என்பது கடமை.

"மகனைப் படிக்க வைத்துப் பட்டம் பெற வைத்த, உத்தியோகமும் வாங்கிக்கொடுத்துவிட வேண்டும்" என்று மட்டும் நினை.

'அப்படிக் கொடுத்துவிட்டால், அவன் சம்பளத்தில் சாப்பிடலாமே' என்று நினைக்காதே.

எங்கே நீ பலனை எதிர்பார்க்கலாமோ, அங்கே எதிர்பார்க்கலாம்.

மனைவிக்கு நகை வாங்கிக் கொடுப்பதும், கருமம்தான்; அப்படி வாங்கிக் கொடுத்தால், 'அவள் நம்மிடம் பிரியமாக இருப்பாள்' என்ற பலனும் அதில் அடங்கி இருக்கிறது.

அரசியல்ரீதியாகச் சொன்னால், ஒரு கருமத்தின் பலன் இருந்தும், இல்லாமலும், இருக்கிற இரண்டு நிலைகள் உண்டு.

உதாரணம், வங்காளதேச விடுதலை.

அந்த விடுதலையின் மூலம் ஒரு அரக்கனிடமிருந்து வங்காளதேச மக்கள் விடுதலை பெற்றார்கள்.

நாம் அந்த நாட்டைக் கைப்பற்றவில்லை.

ஆனால், ஒருகோடி அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

ஒரு வகையில் நமக்குப் பலன் இருந்தது. ஒரு வகையில் பயனில்லை.

நாம் எதிர்பார்த்த பலன். அகதிகளை அனுப்புவது.

நாம் விரும்பாத பலன் நாட்டைக் கைப்பற்றுவது.

தச்சன், அடிக்கின்ற ஆணிக்கு கூலி வாங்காமல் இருக்க முடியாது.

கொல்லன், அடிக்கின்ற இரும்புக்குக் கூலி வாங்கித்தான் தீர வேண்டும்.

பகவான் இவர்களைத் தான், பலனற்ற கருமம் செய்யச் சொல்லுகிறான் என்று பலர் தப்பாகக் கணக்கிடுகிறார்கள்.

உண்மை அதுவல்ல.

'கருமம்' என்பது என்ன?

பலன் கருதாத உதவி.

'கருமம்' என்பது பலன் கருதாத கடமை.

எந்தப் பலனும் கருதக்கூடாது.

'மகாராஜன் நல்லா இருக்கணும்' என்று வாழ்த்துவார்கள்.

பெற்றுக்கொண்டவர்கள். எந்தப் பலனையும் எதிர்பார்க்கக் கூடாது.

'அடப்பாவி! நான் எவ்வளவு உதவி செய்திருக்கிறேன். என்னைப் போய்த் திட்டுகிறானே' என்று சொல்லக் கூடாது.

உண்மையில் அதுவும் ஒருவகை யோகம்தான்.

'நன்றியை எதிர்பாராதே'

'நன்றி கெட்டவனை மன்னித்துவிடு.'

'எந்தச் சூழ்நிலையிலும் நமது கடமையைச் செய்துவிட்டோம்' என்று திருப்தியடையுங்கள்!

-இதுவே யோகம்.

இந்த இலக்கணத்தின் படி, எத்தனை பேரை இன்று நாம் சந்திக்க முடியும்?

தருமச் சொத்து என்று வைத்து, அதிலேயும் கொள்ளையடிப்பவர்கள் தான் அதிகம்.

ஆனால், கண்ணை மூடிக்கொண்டு கடமையைச் செய்வதுதான் யோகம்.

இன்றைய யோகிகளில் சிலர் காரியத்தைச் செய்து கொடுத்துவிட்டு- நாங்கள் எதிர்பார்க்காவிட்டாலும் வருகின்ற பலனைப் பெற்றுக் கொள்கிறார்கள்!

அதுவே நேரான யோகத்துக்குப் புறம்பானது.

லௌகிக வாழ்வில் ஒரு மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய தர்மம் இது.

நல்ல அடை மழை, 'தனது வீடு ஒழுகுகிறது' என்று நாலு பேர் கதவைத் தட்டினால், அவர்கள் படுப்பதற்குக் கூடச் சில பேர் இடங்கொடுப்பதில்லை.

ஓர் இந்து, 'தங்கள் வீடு, அகதிகளும் அதிதிகளும் ஆபத்தில் தங்குவதற்காக' என்று கருத வேண்டும்.

'தன் உணவு பங்கிட்டுச் சாப்பிடவே!' என்று எண்ண வேண்டும்.

'மனைவியைத்தவிர, மற்ற உடைமைகள் தன்னுடையவையல்ல!' என்று எண்ண வேண்டும்.

'செல்வம் செல்லக் கூடியது".

**தொடர்ச்சி அடுத்த வாரம்...**

# மலையக மக்களின் உரிமை மீண்டும் மறுக்கப்படுமா?

**அமலன்**



**மலையகம்** அதிலும் முக்கியமாக தமிழர்கள் செறிந்து வாழும் பெருந்தோட்டங்கள் தொடர்பான அடிப்படை தகவல்களை கடந்த வார மலையகப் பார்வையில் பார்த்தோம். இந்தநிலையில் அங்கு உள்ள சமுதாயக் கட்டமைப்புக்குள் இருந்துக்கொண்டு மக்கள் படும் கஷ்டங்கள் குறித்து இன்றைய பார்வையில் கவனம் செலுத்தலாம். வரலாற்றுரீதியாக இந்தியாவில் இருந்து இலங்கையில் தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கை தோட்டங்களில் பணிபுரிவதற்காக பெருந்தோட்ட தமிழர்கள் அழைத்து வரப்பட்டார்கள் அவர்கள், லயன் என்ற வரிசை வீடுகளில் தங்கவைக்கப்பட்டு சமூகரீதியிலும் பிற்படுத்தப்பட்டவர்களாக கருதப்படும் நிலைக்கு ஆட்படுத்தப்பட்டனர். அதேநேரம் அவர்களின் பொருளா-தாரமும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே அன்றிலிருந்து இன்று வரை இருந்து வருகிறது.

இதன் காரணமாக அந்த மக்கள், இன்றும் கையேந்தி நிற்கும் மக்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அதற்கு ஏற்றாற்போல அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிர-திநிதிகளும் செயற்பட்டு வருகின்றமை வருந்தத்தக்க விடயமாகும்.அன்று முதல் இன்று வரை கட்டுப்பாடான சமூகத்துக்குள் கட்டுண்டு கிடக்கும் அந்த சமூகத்துக்கு விடிவை பெற்றுக்கொடுப்பதற்காகவே மலை யக மக்கள் மத்தியில் இருந்து பிரதி நிதிகள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

ஆனால் அவர்கள், அந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதை காட்டிலும் தமது நலன்களை முன்னிலைப்படுத்துவதையே முதன்மையாக கொண்டி ருக்கின்றனர் இதன் ஆரம்பக்கட்ட நடவடிக்கையாகவே ஸ்ரீமாவோ-சாஸ்திரி உடன்படிக்கை கையெழுத்தானது. இந்த உடன்படிக்கையின்படி, தாய் தந்தையர் இலங்கையில் இருக்கும் போதும் மகன் மாத்திரம் இந்தியாவுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் இதன் காரண-மாக பல குடும்பங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தியாவுக்கு செல்லவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டனர். முன்னதாக, இனத்தில் முஸ்லிமாக இருந்த போதும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் அங்கம் வகித்த ஏஅஸீஸ் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்காக போராடும் தலைவராக செயற்பட்டார்.

எனினும் போராட்ட குணம் இருந்தபோதும் பின்னர் அரசாங்கங்களின் ஆதரவா-ளராக அல்லது அரசாங்கத்தில் அங்கம் வகிக்காது பிரச்சினைகளை தீர்க்கமுடியாது என்ற கொள்கையை மறைந்த அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான், கடைப்பிடித்தன் காரண-மாக, அஸீஸ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து விலகினார். அவர் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரில் தொழிற்சங்கம் ஒன்றை ஆரம்பித்தார்.

எனினும் அவரின் போராட்டத்திற்கு உரிய அங்கீகாரம் மலையக மக்கள் மத்தியில் கிடைக்கவில்லை. எனினும் இலங்கை தொழிலாளர் காங்கிர ஸின் தலைவராக செயற்பட்ட முன்னாள் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான், பெருந்தோட்ட மக்களின் நெளிவு சுழிவுகளை அறிந்த நிலையில் செயற்பட்டமையால், அவர்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்றார்.எனினும் அவரின் போராட்டங்களால் மலையக மக்களுக்கு பாரிய நன்மைகள் ,எவை யும் கிடைத்ததாக சான்றுகள் இல்லை என்றே கூறவேண்டும்

குறிப்பாக நாடற்ற மக்களாக இருந்த இரண்டு இலட்சம் மலையக மக்களுக்கு பிரஜாவுரிமைகளை பெற்றுக்கொடுத்த பெருமையை சௌமியமூர்த்தி தொண்டமான் பெற்றிருந்த போதும் அது அவரால் வென்றெடுக்கப்பட்ட உரிமையல்ல என்பது அரசியல் தெரிந்தவர்களுக்கு மாத்திரம் தெரிந்த விடயமாகும்.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் போராளி இயக்கங்களுக்கும் இடையில் பூட்டானின் தலைநகர் திம்புவில் இடம்பெற்ற இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தையின் போது ஈரோஸ் இயக்கம் முன்வைத்த கோரிக்கையை ஏற்றே இலங்கை அரசாங்கம் நாடற்ற பெருந்தோட்ட மக்களுக்கு பிரஜாவுரிமையை வழங்கியது.

எனினும் போராளி இயக்கம் ஒன்றின் கோரிக்கையை நிறைவேற்றுவது அந்த இயக்கத்தை மலையக மக்கள் மத்தியில் பிரசித்தப்படுத்திவிடும் என்ற காரணத்தினால், அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, அந்த பெருமையை சௌமியமூர்த்தி தொண்டமானுக்கு கிடைக்க வழிசெய்தார் எனக்கூறவேண்டும். அத்துடன் ஆயுதப்போராட்டத்துக்கு மலையகத்தில் அங்கீகாரம் கிடைத்து விடும் என்ற அச்சமும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு ஏற்பட்டது இந்தநிலையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆலோசனையின் பேரில் பிரஜாவுரிமையற்ற நாடற்ற பிரஜைகளுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டும் எனக்கோரி சௌமியமூர்த்தி தொண்டமான், சத்தியாக்கிரகப்போராட்டம் ஒன்றை நடத்தினார்.

இதனையடுத்து தொண்டமானின் அறவழிப்போராட்டத்துக்கு மதிப்பளித்து தாம் அவரின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாக கூறி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் நாடற்ற பிரஜைகளுக்கு பிரஜாவுரிமையை வழங்கினார்.


ஆனால் இன்றும் பெருந்தோட்ட பகுதியில் ஏனைய இலங்கை பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பிரஜாவுரிமைப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

இந்தநிலையில் இந்த முனைப்பை முன்னாள் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான், தமது வாக்குகளை அதிகரித்துக்கொள்வதற்காகவே மேற்கொண்டார் என்பதை யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. இவ்வாறாக ஏமாற்றப்பட்டு வந்த மலையக பெருந்தோட்ட மக்கள் பாரியளவில் ஏமாற்றப்பட்டு தற்போதும் கட்டுண்டுள்ள பிரச்சினையே இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட்டு வரும் சம்பளம் தொடர்பான கூட்டு உடன்படிக்கையாகும். இதன் மூலம் இலங்கையில் எந்த ஒரு தொழில்பிரிவினருக்கும் ஏற்படுத்தப்படாத சாபக்கேடு, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளதை காணமுடிகிறது.

ஒரு தொழில் பிரிவினருக்கு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சம்பளத்தொகை வரையறுக்கப்படுமானால் அது, நாள்தோறும் மாறிவரும் பொருளாதாரத்தின் அடிப்படையில் அந்த தொழில்பிரிவினரை எந்தளவில் பாதிக்கும் என்பதை யாரும் உணர்ந்துகொள்ளமுடியும். அந்த உடன்படிக்கை கூட, உரிய முறை யில் நிரந்தரமான அடிப்படையிலோ அல்லது மாறிவரும் வாழ்க்கை செலவீன அடிப்படையிலோ மேற்கொள்ளப்படுவதில்லை என்பதை வைத்துக்கொண்டே இந்த பாதிப்பு பார்க்கப்படுகிறது.

இவ்வாறான உடன்படிக்கை தொடர்பில் அறிந்திருக்காத எவரும் இன்னும் ஒரு மாதக்காலப்பகுதியில் அந்த உடன்படிக்கையை பற்றி தெரிந்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். ஏனெனில் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் இந்த கூட்டு உடன்படிக்கையின் இரண்டு வருட காலம் முடிவடைகிறது.

எனவே இதன் போது மலை யகப் பெருந்தோட்ட மக்களின் பிரதிநிதிகள், தமது மக்களுக்காக பெருந்தோட்ட நிறுவனங்களுடன் எந்தளவில் கோரிக்கைகளை முன்வைக்கப்போகிறார்கள் என்பதை பார்க்ககூடியதாக இருக்கும். வழமை யாகவே தொழிற்சங்கங்களை காட்டிலும் பெருந்தோட்ட தனியார் நிறுவனங்களின் கைகளே இந்த உடன்படிக்கையில் முன்னிலை வகித்து வந்தமை கடந்த கால வரலாறாகும். இந்தத் தடவையாவது, அதனை உடைத்து தமது மக்களுக்காக பெருந்தோட்டத்துறையின் அரசியல் மற்றும் தொழிற்சங்க தலைவர்கள் போராடுவார்களா? என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.






'நான் ஒரு மாபெருங் கடல். என்னுள் எத்தனையோ முரண்பாடுகள் அமைந்திருக்கின்றன என்றார் வோல்ட் விட்மன். நான் முரண்பாடுகளின் மூட்டை என்று சொன்னார் ஜெயகாந்தன். முரண்படுவது ஒன்றும் விரும்பத்தகாத இயல்பல்ல. பாவத்துக்குரியதோ வெறுத்தொதுக்கப்பட வேண்டியதோ அல்ல.

முரண்களும் அவற்றின் மோதலும்தான் புதிய ஒன்றைத் தோற்றுவிக்கிறது. முரண்பாடுகளே வளர்ச்சியைக் கொண்டுவருகின்றன. முரண்பாடுகளினால், அவற்றின் இடைவிடாத, ஒன்றையொன்று எதிர்த்த போராட்டத்தினால்தான் சமுதாயம் இயங்கி வந்திருக்கிறது. முரண்பட்ட அம்சங்களே இயக்கத்தை நிகழ்த்தும் ஆற்றல் கொண்டவை.

ஒளி என்பதே இருளினால் அறியப்படுவதுதான். அன்பும் துவேசமும் ஒரு நுட்பமான கண்ணுக்குப் புலப்படாத, மிக மெல்லிய இழையில் அடுத்த மொழியையும் கலாசாரத்தையும் அழித்தொழிக்கும் முனைப்பும் நம்மிடம் வந்துவிடுகிறது.

தம் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுகையில் முற்போக்கானதாகத் தோற்றப்பாடு கொள்ளும் ஒரு இனக்குழு, தமக்குள்ளேயே இருக்கும் ஏனைய வித்தியாசங்களை ஏற்றுக்கொள்ளாத அல்லது விரும்பாத போது, அதுவும் ஒடுக்குமுறையைப் பிரயோகிக்கும் ஆதிக்க சக்தியாகவே மாறுகிறது.

அந்நிய காலனித்துவத்துக்கு எகெதிராகப் போராடிய நாடு அல்ஜீரியா. பிறகு, அந்த நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள கபீலியா என்ற பகுதியில் மக்கள் தங்களுடைய சொந்த மொழியான கபீலிய மொழியைப் பேசினால் அபராதம் விதிக்கப்பட்டது. அல்ஜீரியாவின் ஆட்சிமொழியான அரபி மொழியே பேசவேண்டும் என்று கபீலியர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். தங்கள் மொழிக்காகவும் சுதந்திரத்திற்காகவும் அவர்கள் போராடும்படி ஆகியது. அல்ஜீரிய அரசு ஒடுக்குமுறையரசாகியது. அது

# வளர்ச்சியின் ஆரம்பப் புள்ளி முரண்பாடு!

ஒன்றுக்கொன்று வேறாக மாறி விடக் கூடியவை. மிக நெருக்கமாக, உயிருக்குயிராய் பழகும் இருவர் பின்னர் ஒரு கட்டத்தில் ஒருவரையொருவர் கொன்று தீர்த்துக்கொள்ள வெறியுடன் அலைவதை நாம் பார்த்திருக்கிறோம். அவ்வளவு ஏன்? நம் இயக்கங்களிலும், கூட இருந்து முரண்பட்டுப் பிரிந்து போனவர்களே எதிரியை விடப் பயங்கர விரோதத்துக்குரியவர்களாக ஆகியதையும், முதலில் அவர்களையே தீர்த்துக்கட்டி விடும் ஜனநாயக உணர்வில் நாம் தழைத்தோங்கியிருந்ததையும் அறிவோம்.

முரண்கள் இயல்பானவை, ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை, விவாதித்து முன்னகரத் துணைபுரிபவை. விலகல்களையும் வித்தியாசங்களையும் ஏற்றுக்கொள்ள மறுக்கும் மனமே படுகொலைகளுக்கும் போர்களுக்கும் வித்தாகிறது, பாசிசத்தின் தோற்றுவாய் ஆகிறது. மதம், இனம், மொழி, கலாசாரம் என்பவற்றில் தீவிர பற்றும் தற்பாதுகாப்புணர்வும் மேலோங்குகையில் அது மற்றவற்றின் மீதான வெறுப்பாக மாறிவிடும் அபாயம் எப்போதுமிருக்கிறது. இதுபற்றி விரிந்த பார்வை ஏற்படாமல் அதாவது மற்றைய இன, மொழி, மத, கலாசாரங்களைக் கணக்கிலெடுக்காமல், அவைபற்றி ஏதும் அறிந்துகொள்ளாமல், அவற்றை மறுத்து எங்களுடையதை நாம் உயர்த்திப் பிடிக்கையில் அது அடிப்படைவாதமாகிறது. உலகின் ஏதோ ஒரு மூலையில் ஒரு புள்ளி அளவில் இருந்துகொண்டு நம்முடைய மொழியும் நம்முடைய கலாசாரமுமே சிறந்த மொழியும் கலாசாரமும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் அறியாமை சிறுபிள்ளைத்தனம் ஏற்பட்டுவிடுகிறது. துரதிர்ஷ்டவசமாக அதிகாரமும் கிடைத்துவிட்டால் போலவே, கடும் அடக்குமுறைக்கும் இன ஒடுக்குதலுக்கும் உள்ளான யூதர்கள் பின்பு பிறர்மீது அடக்குமுறையை ஏவ சற்றும் தயங்காத நாடாக உருப்பெற்றிருக்கிறார்கள்.

மற்றவர்களை, அவர்களது இயல்புகளோடும், நம்மிடமிருந்து மாறுபடும் வித்தியாசங்களோடும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாமல் போவதே நாம் பாசிஸ்டுகள் ஆவதன் ஆரம்பப் புள்ளி. நம்மிடமிருந்து வேறுபடுகிறவர்கள் நாமிருக்கும் இந்த உலகில் வாழ்வதற்கு நியாயமில்லை என்று கருதத் தொடங்கிவிடுகிறோம்.

நம்மோடு முரண்படுபவர்களையும் ஒத்துப் போகாதவர்களையும் மிக அதிகளவில் கொண்டதுதான் இந்த உலகம். அந்தக் கடவுளிலிருந்து ஆரம்பித்து நம் மனைவி, பிள்ளைகள், நண்பர்கள், அயலவர்கள் என்று யாரோடும் எதனோடும் நம்மால் முழுமையாக ஒத்துப்போக முடிகிறதா என்ன? ஒத்துப்போகாதவர்களோடுதான் நாம் வாழ வேண்டியிருக்கிறது. ஜெயகாந்தனாயிருக்க வேண்டும்... சொன்னார்: ஒன்றுக்கொன்று மாறுபட்ட ஒழுக்கங்களை ஒழுக்கக்கேடு என்று புரிந்துகொள்வது ஒருவகை தீயொழுக்கம் என்பதாக. நமக்கு அப்பாலான எதையும் விரோதமாகப் பார்ப்பதும், அங்கீகரிக்க இயலாமல் அல்லற்படுவதும் நமது சிறுபிள்ளைத்தனமாகுமே தவிர வேறல்ல. நம்மைப் பற்றியே கூட முழுமையாக்த் தெரிந்துகொண்டுவிட முடியாத, நம்முடைய இந்த மிகக் குறைந்த அறிவை வைத்துக்கொண்டு, நம்மைப் பற்றிப் பெருமையாகவும் மற்றவற்றை இழிவாகவும் எண்ணிக்கொள்வதில் என்ன பொருளிருக்கிறது?

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)


**பாரி என்ற** பெயர்கொண்ட வள்ளண்மை மிக்க கடைச்சங்க காலக் குறுநில மன்னன் முல்லைக்கொடி படர்வதற்காகத் தனது தேரினையே வழங்கினாராம். நான்கு தொழிலாளர்களை அமர்த்தி சில மணி நேரத்தில் கச்சிதமான ஒரு பந்தலை அமைத்து முல்லையை படர விட்டிருக்கலாம். அதற்குப் பதிலாகத் தனது தேரினைக் கொடுத்தார் என்பது அவரின் வள்ளண்மையைச் சிறப்பித்துப் பாராட்டுவதற்கான புலவரின் அதீர கற்பனை யதார்த்தத்திற்கு ஒவ்வாது.

'செங்கை ஆழியான்' என்று அழைக்கப்படும் கலாநிதி க.குணராசா தமது தலைமுறைக் காலத்தில் கலை- இலக்கியம் -கல்வி முதலிய கொடிகள் தலையெடுத்து வளர்வதற்கான கொழுகொம்பாக விளங்கியவர் என்பது கற்பனை அல்ல நிஜம்.

சிவந்த நிறம், எடுப்பான தோற்றம்- பக்கம் லட்சுமி தேவி கிட்டவே வருவதில்லை என்று ஐதீகம். இது பழைய புலவர்களின் வாழ்க்கையை நோக்கும் போது உண்மை போல இருக்கிறது. சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாறு வீழ்ச்சிகளிலிருந்து வெற்றிகரமாக எழுந்து தைரியமாக முன்னேறிய உண்மை அனுபவங்கள், வாழ்க்கைப் பாதையின் தடைக்கற்களைக் கண்டு மிரளாமல் அவற்றை முன்னேற்றத்துக்கான படிக்கற்களாக அமைந்த சாதுரியச் சம்பவங்கள் தோல்விகளையும் துன்பங்களையும் கண்டு துவண்டுவிடாமல் தொடர்ந்து விடாமுயற்சி மூலம் ஈட்டிய வெற்றி வெளிப்பாடுகள். துயரங்களிடையே கற்றுக்கொண்ட படிப்பினைகளுடன் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும்

# இன்றைய இலக்கியத்தின் ஜாம்பவான் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்)

நயினை
கி.கிருபானந்தா



கணீரென்ற குரல்வளம்-ஞானத்தின் ஆழத்தை எடுத்துக்காட்டும் விழிகள்-முகத்தில் சாந்தம் நிறைந்த தெய்வீகக் களை-தர்மத்தை நீதியை நியாயத்தை மனிதநேயத்தை- உண்மையாக விசுவாசிக்க இலக்கிய நெஞ்சு கனவில் கூட எவருக்கும் எள்ளளவும் தீமை நினைக்காத ஆனால் எல்லோருக்கும் ஓடோடிச் சென்று அவர்களின் இடர்களைந்து நன்மை புரிகின்ற பெரியவர். மனத்தினால்-வாக்கினால்-செயல்களினால் பெரியவராகப் பெருந்தன்மை கொண்டவராக விளங்கி பொது வாழ்வில் முடிசூடா மன்னராகப் பொதுமக்களால் மதிக்கப்படுகிறார். எவரிடத்திலும் அவர் சொல் செல்லக் கூடியதாக இருக்கின்றது.

எல்லோர்க்கும் நல்லவர் பழகுவதற்கு இனியவர்-பண்பாளர்-நட்பைப் பெரிதும் மதிப்பவர்-சொல்வது ஒன்று செய்வது வேறொன்று என வேடம் போடத் தெரியாதவர். அடக்கமான ஆழ்ந்த சிந்தனையாளர், அதிகமாக வார்த்தைகளை உதிர்ப்பதில்லை. எடுத்த காரியம் சிறப்பாக முடியும்வரை ஓய்ந்திருக்கவே தெரியாதவர். அதனால் தான் வரலாற்றுச் சம்பவங்கள் பல சிறப்புக் காரணகர்த்தாவாக திகழ அவரால் முடிந்தது. எமது தமிழ்க்கவலை இலக்கியங்களின் மேம்பாட்டுக்காகப் பின்னணியில் நின்று பலகாலமாக ஊக்கமளித்து ஆரோக்கியமான புதுமையான பல பூக்கள் மலர்வதற்கு வழிகாட்டிய இவர் இலக்கிய உலகில் தனி முத்திரை பதித்த அற்புத மேதை. அவரின் எழுத்துக்களால் ஈர்க்கப்பெற்றவர்கள் அவர் மீது அளவிறந்த பற்று அல்ல பக்தியே கொண்டிருந்தனரெனக் கூறலாம்.

பேரறிஞர் என்ற மிடுக்கோடு -தலைக்கனமோ இல்லாதவராக அவரை நான் காண்கின்றேன். அத்தோடு ஈழத்து இலக்கியக்காரர்கள் அநாதைகள் அல்லர். அவர்களுக்கென்று பாரம்பரியம் உண்டு. அதற்கான வேர்களைத் தேடிக் கண்டுபிடித்த முன்னோடி.

வீரனின் கையிலிருக்கும் வாளிலும் பார்க்க அறிஞனின் கையிலிருக்கும் பேனா அதிகம் கூர்மையும் சக்தியும் என்பதைப் பல சந்தர்ப்பங்களில் நிரூபித்துக் காட்டியவர். தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களில் தட்டிக்கொடுப்பதிலும் கண்டிக்க வேண்டிய வேளைகளில் ஆக்ரோஷமாகக் கண்டிப்பதிலும் அவருக்கு நிகர் அவரேதான். குயில் கறுப்பாக இருந்தாலும் அதன் குரல் இனிமையை போற்றத் தெரிந்தவர்.

சரஸ்வதி கடாட்சம்மிக்கவர்களின் அவரை வீரனாக மிளிரச் செய்கிறது.

மெல்லிய உள்ளம் கொண்ட இவர் எத்தனை நெருப்பாறுகளைக் கடந்து வந்திருக்கிறார் என்பதை அறியும்போது அவருக்கு இருக்கும் தன்னம்பிக்கை, உறுதி, விடாமுயற்சி என்பனவே ஒருவரின் வெற்றி வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையமுடியும் என்பது துலாம்பரமாகின்றது.

இலக்கியத்துறையில் அவர் கையாண்ட புது உத்திகளுக்கு ஒரு முன்னுதாரணம் கிடையாது. இன்னாருடைய பாணி இவருக்கு இருக்கிறதென்று எவரையும் சொல்ல முடியாது. பிறமொழி கதாசிரியர்களில் கூட எவரையும் இவர் பின்பற்றியதாக தெரியவில்லை. அவரது நிலத்தில் தோன்றிய விளைச்சல்களுக்கு அவரே விதை. அவரே நீர் அவரே உரம். அதனால் தான் முன்னொருவரில்லை, பின்னொருவரில்லை என்ற இடத்தைச் செங்கை ஆழியான் பிடித்திருப்பதை யாரும் மறுக்க முடியாது.

இவருடைய எழுத்துக்களைப் படிக்கும் பொழுது "கவிச் சக்கரவர்த்தி" என்ற நாடகத்தில் ஒட்கக் கூத்தரின் கூற்றாக கு.அழகிரிசாமி சொல்வார். "கலைமகள் எனக்கு அருள்பாலிக்கிறார் - உமக்குச் சேவகம் செய்திருக்கிறாள்" என்று கம்பரிடம் கூறுவதாக அந்த வா்சகம் அமைகிறது. செங்கை ஆழியானின் எழுத்துக்களைப் படிக்கும் போதெல்லாம் இந்த வாசகம் தான் எனக்கு நினைவுக்கு வரும். செங்கை ஆழியானுக்கு தமிழ் சொற்களும் தமிழ் மொழிநடைகளும் கைகட்டி சேவகம் செய்கின்றன. சிறுகதை-நாவல் கட்டுரை எந்த வடிவமாய் இருந்தாலும் எடுத்துக்கொண்ட விடயத்தைப் புதிய கோணத்தில் வாசகன் புரிந்துகொண்டு நெருங்கி வரும்படி அவனை ஈர்க்கும் சொல்லாற்றல் அவருக்கு கைவந்த கலை.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# அவலம் சுமந்த அகதிகள்

அத்திமுகத்தோன்

அவலம் 19

புழுதி பறக்கும் கிரவல் சாலையில் நிற்கும் அக்காமாரைக் கண்டதும் தங்கைக்கு அழுகை வந்து விட்டது. அவள் அழத் தொடங்கினாள்.

"ஏனடி அழுகிறாய்...? தம்பிக்கு என்ன பெரிய காயமே...?" அக்காளில் ஒருத்தி கேட்டாள்.

"ஷெல் பீஸ் அண்ணையின்ர தொடையைத் தோண்டி எடுத்துப் போட்டுது. மருந்தொண்டும் இல்லை. ரத்தம் போகாதபடிக்குப் பழைய சீலைத் துணியளாலை சுத்திக் கட்டியிருக்கினம். அண்ணை அரைகுறை மயக்கத்தில கிடக்கிறார். அம்மா அழுதுகொண்டு நிற்கிறா...." தங்கை அழுதபடி கூறிக்கொண்டிருந்தாள். மூத்த சகோதரிகள் இருவருக்கும் மனம் பதகளிப்பட்டது. சின்னத் தங்கச்சியையும் அழைத்துக்கொண்டு வைத்தியசாலையை நோக்கி விரைந்தார்கள். அவர்கள் வைத்தியசாலை வாசலில் கால்வைத்த போது அவ்வளாகம் ஒரு வைத்தியசாலைக்குரிய தோற்றப்பாட்டுடன், செயற்பாட்டுடன் இருக்கவில்லை, இயங்கவுமில்லையென்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள்.

ஒரு நரகலோகத்துக்குள் நுழைவதான உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது.

இரத்த வெடிலும், இடமில்லாத நிலையும், இலையான்களின் பெருக்கத்தோடு, கூக்குரல்களும், கூட வந்தவர்களின் ஓலமுமாய் அவ் வைத்தியசாலை தோற்றமளித்துக்கொண்டிருந்தது.

நாளாந்தம் ஷெல் தாக்குதல்களிலும் கிபிர் விமானக் குண்டுவீச்சுக்களிலும் காயப்பட்டு வருபவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டிருக்க, வைத்தியசாலையினுள் இடநெருக்கடி அதிகரிக்கத் தொடங்கியது.

மரநிழல்களின் கீழ் தரப்பாள் விரிக்கப்பட்டு காயப்பட்டவர்களை மிக நெருக்கமாகக் கிடத்தி விட்டிருந்தார்கள். இரத்த வெடிலுக்கு வந்து மொய்க்கும் இலையான்களை சிறு இலை-



குழைகளால் உறவினர்கள் விசுக்கிக் கொண்டிருந்தார்கள். இயற்கை உபாதைகளுக்குக் கூட எழுந்துசெல்ல முடியாத துர்ப்பாக்கியமாய் காயப்பட்ட நோயாளிகள் தோற்றம் பெற்றிருந்தார்கள். இரத்த வெடிலின் தாக்கத்தால் உணவோ, குடிநீரோ அருந்த முடியாமல் அவர்கள் அருவருத்த மனோநிலையிலும், காயப்பட்ட அதிர்ச்சியினாலும் செயலிழந்து நின்றார்கள்.

காயத்தின் நிமித்தம் ஏற்படும் வலிகளைத் தாங்க முடியாது. வயது வேறுபாடின்றி ஆண்-பெண் எல்லோரும் குளறுவதும்-முனகுவதுமாக வைத்தியசாலை இயங்கிக்கொண்டிருந்தது. வலிகளைக் குறைப்பதற்காக 'பனடோல்' மாத்திரைகள், அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்டுக்கொண்டிருந்தன.

வைத்தியர்கள், ஊழியர்கள் பற்றாக்குறையின் நிமித்தம், அங்கு கொண்டுவரப்படும் காயப்பட்ட நோயாளிகளைப் பராமரிப்பதற்கு வைத்தியசாலை நிர்வாகம் மிகவும் திணறிக்கொண்டிருந்தது.

நோய்க்குரிய மருந்துகள் இல்லை. கட்டில்கள் இல்லை. தொற்று நீக்கி மருந்துகள் இல்லை. மலசலகூட வசதிகள் இல்லை. எல்லாமே இல்லாததாகிப் போன அந்த வைத்தியசாலையின் ஓர்

ஒதுக்குப் புறத்தை நோக்கிச் சின்னத்தங்கச்சி தன் அக்காள் இருவரையும் அழைத்துச் சென்றாள்.

அவர்களைக் கண்டதும் அம்மா அழத் தொடங்கினாள். அம்மா அழுவதைக்



கண்டதும் பிள்ளைகளும் அழ ஆரம்பித்தார்கள்.

"தம்பி... டேய்..."

மூத்த அக்காள் குனிந்து தன்கரத்தால் தம்பியின் தலையைத் தடவினாள.காயத்தின் வலிதாங்க முடியாமல் அரை குறைத் தூக்கத்தில் முனகியபடியிருந்த தம்பி, சற்று தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

" அக்கா வந்திருக்கிறமடா...." இரண்டாமவள் கூறினாள்.

"இப்ப என்னத்துக்கு வந்தனிங்கள். ஓடுங்கோ வீட்டை..." "தம்பி இப்படி அதிரடியாய் கூறியதும் அம்மா உட்பட அனைவரும் திகைத்தே போய்விட்டார்கள்.

"டேய் ஏன்ரா அவளவயைக் கலைக்கிறாய்? உன்னைப் பார்க்கிறதுக்கு வந்து நிற்கிறாளவை..." அம்மா மகனைப் பேசினாள்.

"இஞ்ச ஒருதரும் வரவேண்டாம். எனக்கு நடந்த மாதிரி உங்களுக்கும் ஏதும் நடந்தாலும்... ஓடுங்கோ...





ஓடிப்போய் பங்கருக்குள்ள இருங்கோ"

தங்கள் மீது தம்பி கொண்டிருக்கும் பரிவையும் பாசத்தையும் நினைத்து அக்காள் இருவரும் மனம் நெகிழ்ந்து நின்றார்கள்.

"காயம் என்ன பெரிசே...?" மூத்தவள் கேட்டாள்.

"சீச்சி.... அது ஒரு சின்னக்காயம் ...."

அம்மா கூறவும் அதற்கு எதிராகக் கடைசித் தங்கை கூறினாள்.

"இல்லைப் பெரியக்கா. அம்மா பொய் சொல்லுறா..." என்றபடி அவள் அண்ணனின் காயத்தை மூடியிருந்த பெட்சீட்டை நீக்க முற்பட்டபோது அம்மா அதைத் தடுத்தாள்.

"விடடி... காயத்தை இலையானுகள் மொய்க்கப்போகுது..." அம்மாவின் செயற்பாட்டைக் கண்டு சகோதரிகள் இருவருக்கும் சந்தேகம் வலுத்துக் கொண்டது. ஒருவரை ஒருவர் முகம் பார்த்துக் கொண்டார்கள்.

"ஏனம்மா அவளைத் தடுக்கிறாய். இஞ்சை விடு..." என்று கூறியபடி இரண்டாமவள் பெட்சீற்றை சற்று நீக்கியபோது...

அக்காளும்-தங்கையும் பதறியே போய்விட்டார்கள்..

"ஐயோ! எட தம்பி என்னடா இது...?" மூத்தவள் கத்தினாள்.

தம்பியின் தொடைப்பகுதியை குண்டின் சிதறல் ஒன்று நன்கு கிழித்துவிட்டதினால், சுற்றிக் கட்டப்பட்டிருந்த துணிகளையும் மீறி இரத்தம் அவன் உடுத்தியிருந்த சாரத்தையும் நன்கு நனைத்து விட்டிருந்தது.

சாரத்தைச் சற்று நீக்கி காயத்தைப் பார்க்க முற்பட்ட மூத்த அக்காவின் கரத்தைத் தட்டிவிட்டான் தம்பி.

"ஏன் இப்ப உதுகளைப் பார்க்கிறியள். பேசாமல் போங்கோ... அவன் கூறிவிட்டு முனக ஆரம்பித்தான். மூத்த அக்கா அழ ஆரம்பித்தாள்.

"எல்லாரும் கொஞ்சம் வழியை விடுங்கோ. காயப்பட்ட ஆக்களின்ர வாகனம் வருகுது..." வைத்தியசாலை ஊழியர் ஒருவர் உரத்துச் சத்தமிட்டபடி.... வாகனம் வரும் வழியில் நின்றவர்களை ஒதுங்கி நிற்கச் செய்வதில் பெரும் சிரமப்படத் தொடங்கினார்.

காயப்பட்டவர்களைப் பார்வையிட வந்த அனைவரினது பார்வையும் வைத்தியசாலை வாசலை நோக்கியபோது... வாகனம் ஒன்று வாசலைத் தாண்டி உள்ளே வந்து நின்றது. வாகனத்தின் பின்புறம் படுக்கை நிலையில் இருந்த இளைஞனோடு இன்னும் நால்வரை கூட வந்தசிலர் கீழே இறக்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களை இறக்கிய பின்பு வானத்தின் மேல்நின்ற ஒருவர் இதை என்ன செய்யிறது...?" என்றபடி அதனுள் கிடந்த ஒன்றை எடுத்து வெளியே வைத்தியசாலை ஊழியரிடம் காட்டிக் கேட்டபோது, ஊழியர் உட்பட பார்த்துக்கொண்டிருந்த அனைவரும் ஒரு கணம் உறைந்தே போய்விட்டனர். அவர் எடுத்துக் காட்டியது வாகனத்தில் இறக்கிய இளைஞனின் துண்டாடப்பட்ட....

**அவலம் தொடரும்....**



## கவலைப்படாதே சகோதரா!

காட்டில் பலசாலியான ஒரு சிங்கம் இருந்தது. ஆனால், அது எப்போது பார்த்தாலும் கவலைப்பட்டுக்கொண்டே இருந்தது.

“எனக்கு இவ்வளவு பலம் இருந்தும், இரும்பு போன்ற நகங்களும் பற்களும் இருந்தும் என்ன உபயோகம்? கேவலம், இந்தக் காட்டுச் சேவல் கூவுகிற சத்தம் என்னை நடுங்கவைக்கிறது. இப்படிப் பயந்துகொண்டே வாழ்வது ஒரு வாழ்க்கையா? என்று தன்னைத்தானே நொந்து கொண்டபடி இருந்தது.

அதே சமயம், அங்கே ஒரு யானை வந்தது. அது மிகவும் கவலையுடன் தன் காதுகளை முன்னும் பின்னும் அடித்துக்கொண்டே நகர்ந்தது.

அதைப்பார்த்த சிங்கம், “ஏய்........ஜம்போ! உனக்கு என்ன கவலை? யாருமே உன்னை எதிர்த்து சண்டை பண்ணமாட்டார்களே! உன் உடலைப் பார்த்தாலே, எல்லா மிருகங்களும் பயந்து ஓடுமே.....எதற்காக நீ கவலையோடு இருக்கிறாய்?” என்று ஆச்சரியத்துடன் கேட்டது.

அதற்கு யானை, “இதோ...... என் காது பக்கத்தில் பறக்கும் குளவியைப் பார்த்தாயா? இது என் காதுக்குள் நுழைந்து கொட்டிவிட்டால், அவ்வளவுதான்.........என் உயிரே போய்விடும்! அதற்காகத்தான் இது காதுக்குள் போய்விடாதபடி, காதுகளை ஆட்டிக்கொண்டு கவலையோடு நடக்கிறேன்...”என்றது.

அது கேட்டு சிங்கம் யோசித்தது. “இவ்வளவு பெரிய உடம்பை வைத்து இருக்கும் யானை கவலைப்படாது என்று நினைத்தால், அதுகூடக் கவலைப்படுகிறதே! அப்படியானால், பூமியில் இருக்கும் எல்லா உயிர்களுக்கும் ஏதாவது ஒரு கவலை இருக்கத்தான் செய்யும் போலிருக்கிறது! கவலைப்படுவதால் வாழ்க்கை ஒன்றும் நமக்கேற்ற மாதிரி மாறப்போவதில்லை. அது மட்டுமல்லாமல் கவலைப்பட்டு, கவலைப்பட்டு நம் கண்ணெதிரே இருக்கும் மகிழ்ச்சியான விடயங்களைப் பார்த்து சந்தோசமாகக்கூட வாழமுடியாமல் போய்விட்டதே!” என்று அது புரிந்து கொண்டது.

அன்றிலிருந்து அது கவலைப்படுவதை விட்டுவிட்டு, மகிழ்ச்சியாக வாழத் தொடங்கியது.



தன்னை அதிக புத்திசாலியாக எண்ணுவதே மனிதனிடம் உள்ள மிகப் பெரிய பலவீனம்.

-சிம்மன்ஸ்-


## பூமி எப்போது தோன்றியது?




முதன் முதலில் ஒருவகையான தாவர இனம்தான் பூமியில் தோன்றியது. தண்ணீரில் தோன்றிய ஒருவகைப் பாசிதான் அந்தத் தாவரம். இந்த நீர்ப்பாசி தான் உயிர்த் தோற்றங்களின் அடிப்படையாக இருந்திருக்கக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். சுமார் 100 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தான் இது போன்ற நீர்ப்பாசி தோன்றியதாகவும் அவர்கள் கணக்கிட்டுள்ளனர். அந்தக் காலத்தில் காபன் கூட்டுப்பொருட்கள் அதிகமாக இருந்ததே நீர்ப்பாசியின் தோற்றத்திற்கு காரணம். நீர்ப்பாசி தோன்றி கிட்டத்தட்ட 50 கோடி ஆண்டுகளுக்குப் பின்னர் தான் அடுத்தகட்ட உயிர்த் தோற்றங்களைக் காண முடிந்தது. தொடக்கத்தில் தோன்றிய உயிரினங்கள், இப்போதுள்ள உயிரினங்களைப் போல பூமியில் நடமாடி உயிர் வாழ்வில்லை. அந்த உயிரினங்கள் கூடுகளில் அசைவற்று முடங்கிக் கிடந்தன. அவற்றின் வளர்ச்சியில் அல்லது வாழ்க்கையில் மாற்றங்கள் உண்டாவதற்கு மேலும் 50 கோடி ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

## பாய்மரக் கப்பல்கள்

எகிப்தியர்கள் முதன்முதலில் மரக்கிளைகளையே பாய்மரமாக அமைத்து கப்பல்கள் கட்டியிருக்கிறார்கள். பின்னர் மரத்தை துளைப்பதற்குப் பதில், பலகையைப் பயன்படுத்தி கப்பல்கள் தயாரிக்கப்பட்டன. பாய்மரங்களையும் கப்பல்களில் இணைத்து, கடற்பயணத்தை மேற்கொண்டான் பண்டைய காலத்து மனிதன். கி.பி மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த முன்னேற்றம் ஏற்பட்டதாக சொல்லப்படுகிறது. மத்திய தரைக்கடலை அண்டிய கிழக்குப் பகுதியில் வாழ்ந்த மக்கள், ஒரு மாதிரியான சிற்பத்திறனுடன் கப்பலை வடிவமைக்கத் தொடங்கினர். பின்பு பாய்மரக் கப்பல்களின் அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டது.



## நண்டுகளின் விநோத சுவாசம்




மணல் குமிழன் என்ற ஒருவகை நண்டினம் உள்ளது. இந்துமகா சமுத்திரம், பசுபிக் பெருங்கடல் ஆகியவற்றின் கரைகளில் கூட்டம் கூட்டமாக இந்த நண்டுகள் வசிக்கின்றன. சிறிய வட்டமான உடலுடன் இருக்கும் இவை, கரைகளில் ஒதுங்கும் பிளாங்க்டான் மற்றும் சில நுண்ணிய பாசி போன்ற உயிரிகளை உணவாக உட்கொள்கின்றன.

கடல்நீர் கரைக்கு வரும்போது அவை மணலுக்குள் புகுந்துகொண்டு, காற்றுப்பொட்டலம் சிக்கியிருப்பது போல ஒரு வளையை அமைத்துக் கொள்ளும். இதனால் தான் அதற்கு ‘மணல் குமிழன்’ என்ற பெயர் ஏற்பட்டது. கடல்நீர் வடியும்வரை வளைக்குள்ளேயே இருந்துவிட்டு, அதன் பின்னர் வெளியே வந்து இரைதேடும். மணல் குமிழன்கள் தங்களுடைய காலில் சுவாசிக்கும் அமைப்பை உருவாக்கி வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த அமைப்பின் வழியாகவே அவை தங்களுடைய சுவாசத்தை மேற்கொள்கின்றன.

## தெரிந்து கொள்ளுங்கள்

*அரபிக்கடலின் ராணி என்று வர்ணிக்கப்படும் நகரம், கொச்சி.
*மனிதன் ஒரு நிமிடத்தில் சுவாசிக்கும் காற்றின் அளவு, சுமார் 15.5. லீற்றர்.
*பிக் அப்பிள் என்று அழைக்கப்படும் அமெரிக்க நகரம், நியூயோர்க்.
*இந்தியாவின் ஏவுகணை மனிதர் என்று போற்றப்படுபவர், ஏ.பி.ஜே. அப்துல்கலாம்.
*நீரைவிட இரத்தத்துக்கு 6 மடங்கு அடர்த்தி அதிகம்.
*நம்முடைய கால் பாதங்களில் 16 எலும்புகள் இருக்கின்றன.
*போலியோ தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர், அல்பர்சேலின்.
*அஜந்தாவில் உள்ள குகைக்கோவில்களின் எண்ணிக்கை, 27.
*ரஷ்யப்புரட்சியை தலைமையேற்று நடத்தியவர், ஜோசப் ஸ்டாலின்.
*வாத்துகள், அதிகாலை நேரத்தில் மட்டுமே முட்டையிடுகின்றன.
*சிங்கப்பூரின் பழைய பெயர், டெமாஸெக்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 06.03.2011

வர்ணம் தீட்டும் போட்டி இல.880
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 878**

**பரிசுக்குரியவர்:** சி.நிரோஜன், யா/நெல்லியடி மகாவித்தியாலயம், கவெட்டி

பாராட்டுக்குரியவர்கள்


01. யோ.சிவரஜனி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
02. அ.சோபிதன்,நுணாவில் மேற்கு சாவகச்சேரி.
03. அ.அருளமுதன், யா/கென்றியரசர் கல்லூரி, இளவாலை.
04. எஸ்.லோகிதன்,மகாரம்பைக்குளம், வவுனியா.
06. கு.விதுஷா, பேசாலை, மன்னார்.
07. கே.முகிலன், கடற்கரைவீதி, யாழ்ப்பாணம்.
08. எஸ்.அருணோதயா, கொழும்பு-06

தகவல் துணுக்குகள்...

## உலகின் மிகப் பெரிய மரம்

உலகிலேயே எடை அதிகமான மரம் கலிபோர்னியாவில் உள்ள ஜெனரல் ஷெர்மன் என்ற மரம்தான். கடந்த ஆண்டு மரங்களின் வளர்ச்சிக் கணக்கெடுப்பின்படி இதுவரை இந்த மரத்தின் சாதனையை வேறு எந்த மரமும் வெற்றி கொள்ளவில்லை. அது மட்டும் இல்லாது ஒரே நேரத்தில் இந்த மரத்தின் நிழலில் மனிதர்களாகிய நம்மை நிற்க வைத்தால் இரண்டரை இலட்சம் மக்கள் தங்கள் மேல் வெயில்படாமல் மாலை வரை அமர்ந்திருக்கலாம். இறுதியான கணக்கெடுப்பின்படி அந்த மரத்தின் எடை சுமார் 2,800 தொன், அடிபாகச் சுற்றளவு 135 அடி, அதன் உயரமோ 260 அடி என்றால் யூகித்துக்கொள்ளுங்கள் எவ்வளவு பெரிய மரமாக இருக்குமென்று!

## கண்டுபிடி



அருகே உள்ள படங்களில், மேலே உள்ள படங்களும், கீழே உள்ள படங்களும் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாகத் தோன்றினாலும், ஒவ்வொன்றுக்கும் இடையே சில வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.


# கொக்கோ-கோலா இரகசியம்

உலக நாடுகளின் பொது குளிர்பானமாகக் கொடி கட்டி பறக்கும் கொக்கோகோலாவின் 125 ஆண்டு தயாரிப்பு இரகசியத்தை அதிரடியாக ஒரு இணையத் தளம் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலகம் முழுவதும் 200 நாடுகளில் கொக்கோ கோலா, பெப்சி இருக்கின்றன. இரண்டுமே அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்கள். கோலா தொடங்கப்பட்டது 1886இல். 125 ஆண்டுகளாக உள்ளது. உணவு, குளிர்பான தயாரிப்புகளின் லேபிளில் உள்ளடக்கம் வெளியிடுவது கட்டாயம்.

எனினும், "காபைன் கலந்த இயற்கை சுவை கூட்டல்" பொருட்கள், சீனி, தண்ணீர், நிறமிகள் என்று மட்டுமே கோலாவில் அச்சிடப்படும். அந்த இயற்கை சுவை கூட்டலில் என்ன அட்டவணை என்பது இரகசியம். இந்த பானத்தின் தயாரிப்பில் "Merchandise 7X" எனப்படும் 7 வகை திரவியங்களின் பங்கே முக்கியமாக கருதப்படுவதாகவும் இவையே கொக்கா-கோலாவிற்கே உரிய சுவையைத் தருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதை www.thisamericanlife.org என்ற இணையத்தளம் இப்போது வெளியிட்டுள்ளது.

இந்த அட்டவணை எழுதப்பட்ட காகிதத்தை அமெரிக்க வங்கி லொக்கரில் பாதுகாக்கிறது கோலா நிறுவனம். அதுதான்






இது என இணையத் தளம் வெளியிட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே, 1979இல் ஜோர்ஜியா மாநில உள்ளூர் நாளிதழ் ஒன்றில் இது வெளியானதாகத் தெரிகிறது. ஆனால், இப்போது இருப்பதுபோல கொக்கோ கோலாவின் புகழ் அப்போது பெரிதாக இல்லை என்பதால் அந்த செய்திக்கு முக்கியத்துவம் இல்லாமல் போனது.

நன்றி இணையம்



## 43 திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

**எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.**

**என்னை** முறைத்துப் பார்த்துவிட்டு, "எடியே பூலான் நீ பெரிய அழகியாடி?" என்று கேட்டான்.

"இல்லை" என்றேன்.

"நீ அழகிதான்! நீ... நீ அழகிதானடி! சொல்லடி நீ அழகிதானே?"

"இல்லை"

"பொய்!"

"பொய் சொல்கிறாய் நீ"

"இல்லை உண்மைதான்"

"இல்லை பொய்தான்"

"பொய்... ஆ... இப்படிச் செய்தால் என்ன?

"நீ பொய் சொல்கிறாயா இல்லையா என்று கண்டுபிடிக்கப் போகிறேன்! மூக்கு, இதுதானே மூக்கு! வெட்டிவிடலாமா? சொல்லு வெட்டிவிடவா?"

நான் கண்ணிமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். இவனுடன் சண்டை போடுவதால் பயனில்லை. என்னதான் செய்யப்போகிறான் என்று பார்த்துவிடலாமே என்று முடிவு செய்துவிட்டேன். என் மூக்கை தனது விரல்களால் வருடிப் பார்த்தான். பின் என் உதடுகளைத் தன் கட்டை விரலால் மெல்ல மெல்ல வருடிப் பார்த்தான்.

"பரவாயில்லையே! பஞ்சுமிட்டாய் மாதிரி இருக்கிறதே! அந்தக் கிழவன் பூல்சிங்கிக்கும் கொடுத்தாயா?" எனக்கு எரிச்சலாக இருந்தது.

"பூல்சிங் எனக்கு அப்பா மாதிரி' என்றேன்.

"அப்படியானால் நான் உனக்குப் புருஷன் மாதிரியா? மாதிரி என்ன, மாதிரி புருஷன்தான்!"

வெறித்தனமாகச் சிரித்துக் கொண்டே என் சேலையை இழுத்து உருவினான். நான் சேலையைப் பிடித்திழுத்தபோது எட்டி என் வயிற்றில் உதைத்தான். சேலையை உருவி மூலையில் போட்டுவிட்ட என்னைக் குனிந்து பார்த்துச் சிரித்தான்.

"அடங்காத குதிரை என்றால் இந்த பாபுசிங் குஜாருக்குப் பிடிக்கும். ரொம்ப ரொம்பப் பிடிக்கும். சண்டிக் குதிரையும் பாபுசிங் குஜார் முன்னால் மண்டிபோடுமடி கண்ணு!" சொல்லிவிட்டுச் சிரித்தான். 'நான் என்ன பண்ணுகிறேனோ அதே மாதிரியே நீயும் செய்ய வேண்டும். மறுத்தால் உதைதான்" தன் சட்டையைக் கழற்றி விசினான். அதேநேரம்



"தக்குர் சாஹாப்!" என்று சற்று உரத்த குரலில் அழைத்தபடி யாரோ வந்தார்கள் அது விக்ரம்மல்லா. தாக்குண்ட சிங்கம் போல அவனை நோக்கித் திரும்பினான் பாபுசிங் குஜார்.

விக்கிரம்மல்லா துப்பாக்கியுடன் நின்றான். அவன் முகத்தில் உணர்ச்சி ஏதும் இல்லாமல் பாபுசிங் குஜாரை நோக்கி நிதானமாக அடியெடுத்து வைத்தான். பாபுசிங் குஜார் ஒரே தாவாகத் தாவி தனது துப்பாக்கியை எடுத்துக் கொண்டான்.

துப்பாக்கியை விக்ரம் மல்லாவை நோக்கி நீட்டியபடியே, "அங்கேயே நில் இப்போது ஏன் வந்தாய்! போய்விடு! திரும்பிப்போய்விடு!" என்று கத்தினான்.

" வேண்டாம் சஹாப். அவளை ஒன்றும் செய்யாதீர்கள்!" என்றான் விக்ரம்மல்லா. விக்ரம்மல்லா தன் துப்பாக்கியைச் சட்டென்று கீழே போட்டான்.

"நமக்குள் சந்தேகம் கூடாது சஹாப்! நான் உங்களுடன் சண்டைபோட வரவில்லை!"

"டேய் விக்ரம்மல்லா! நான் யார் தெரியுமல்லவா! நான் யாரடா?"

"எங்கள் தலைவர்!"

"அதைக் கேட்கவில்லை! நான் என்ன ஜாதி?"

"உயர்ந்த ஜாதி"

அதைச்சொன்னபோது விக்ரம்மல்லாவின் குரலில் கேலி தெரிந்தது போல எனக்குத் தோன்றியது. பாபுசிங் குஜார் நிதானமிழந்திருந்தான். அதனால் விக்கிரம்மல்லாவின் குரலில் இருந்த கேலியை அவன் கவனிக்கவில்லை.

"நீ யார் தெரியுமா? கீழ் ஜாதி! மீனவ ஜாதி! கீழ் ஜாதிக்காரன் எனக்குப் புத்திசொல்ல வரலாமா? சொல்லடா நாயே! இதற்காகவே ஊன்னை நான் நாய் சுடுவதைப்போலச் சுட்டுத்தள்ளலாம்! சுடட்டுமாடா! உன்னை நான் இங்கேயே இந்த இடத்திலேயே சுடட்டுமாடா?"

பாபுசிங் குஜார் கீழ் ஜாதிக்காரன் என்று விக்ரம்மல்லாவை இகழ்ந்தபோது விக்கிரம்மல்லாவின் முகத்தில் சட்டென்று மின்னல்போல கோபம்தோன்றி மறைந்ததை நான் கண்டுகொண்டேன். விக்ரம்மல்லா தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்கிறான். தன் கோபத்தை என்னைப்போலவே உள்ளே அடக்கிக் கொள்கிறான். எனக்கும் அவனுக்கும் இடையில் அப்படியொரு ஒற்றுமை இருப்பதை நினைக்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அதுமட்டுமல்ல. நாங்களும் மீனவஜாதியைச் சேர்ந்தவர்கள்தான். விக்ரம்மல்லாவும் நானும் ஒரு ஜாதி.

"விக்ரம்மல்லா நானும் உன் ஜாதிதான்" என்று உடனே கத்திவிடலாம் போல் இருந்தது.

மெல்ல எழுந்து முழங்கால் மடக்கி அமர்ந்துகொண்டேன். விக்ரம்மல்லாவையே பார்த்துக்கொண்டேன். விக்கிரம்மல்லாவின் பார்வை ஒரு நொடி மட்டும் என்மீது பட்டுச் சென்றது.

"சஹாப்! நீங்கள் என்னைச் சுடமாட்டீர்கள்! சுட்டால் நான் செத்துவிடுவேன். அதனால் நஷ்டம் உங்களுக்குத்தான். ஒரு நல்ல தளபதியை இழந்தவிடுவீர்கள். உங்கள் கோஷ்டியில் இருக்கும் என் ஜாதிக்காரர்கள் உங்களுக்கு எதிராகத் திரும்பிவிடுவார்கள்"

"மிரட்டுகிறாயா நாயே!"

"இல்லை சஹாப், உங்களை நான் ஏன் மிரட்ட வேண்டும். அப்படியானால் துப்பாக்கியைக் கீழே போட்டிருப்பேனா?"

பாபுசிங் குஜார் அவனைச் சந்தேகத்துடன் நோக்கினான். இப்போதும் துப்பாக்கி விசையில் தனதுவிரலைத் தயாராக வைத்திருந்தான். அவன்விரல் கவனக்குறைவாக அழுத்தினாலும் கூட குண்டு பாய்ந்துவிடும்.

(திருப்பங்கள் தொடரும்...)

# கண் தானம் செய்தார் சினேகா

தமிழ் சினிமாவின் புன்னகை இளவரசி என அழைக்கப்படும் நடிகை சினேகா பல்வேறு சமூக நலப்பணிகளிலும் ஆர்வம் காட்டி வரும் சினேகா கண்களை தானம் செய்துள்ளார். இதற்கான படிவத்தின் கையெழுத்திட்டு மருத்துவ மனைக்கு அவர் வழங்கினார்.

சமீபத்தில் போலியோ இல்லாத இந்தியாவை உருவாக்கும் அமைப்பு ஆதரவு திரட்டும் வகையில், தன்னை அந்த அமைப்பில் இணைத்துக் கொண்டு நிதியுதவியும் செய்தார். இப்போது தனது கண்களை தானம் செய்துள்ளார் சினேகா. இதற்கான விழா அண்மையில் நடந்துள்ளது.

கண் தான பத்திரத்தில் கையெழுத்திட்டு மருத்துவமனை நிர்வாகத்திடம் வழங்கிய சினேகா, கண் தானம் செய்வதன் மூலம், வாழ்க்கையை தொடர்ந்து வாழும் வாய்ப்பு கிடைக்கிறது என்றார்.



# இந்தி வாய்ப்பை மறுத்த நரேன்

சித்திரம் பேசுதடி, அஞ்சாதே போன்ற வெற்றிப் படங்களிற்குப் பின்னர் நரேன் நடித்து வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'தம்பிக்கோட்டை' படத்திற்குப் பின்னர் உற்காசமாக இருக்கின்றார். இது பற்றி நரேன் கூறும் போது, தம்பிக்கோட்டை எனக்கு முக்கியமான படம். இந்தப் படத்துக்காக வேறெந்த படத்திலும் நடிக்காமல் காத்திருந்தேன். அதற்கான பலன் கிடைத்திருக்கிறது. அக்ஷன் படங்கள் மட்டுமல்லாது, காதல் படங்களிலும் நடிப்பேன். வித்தியாசமான வேடங்களை மாற்றி நடிக்கும் யோசனை எதுவும் இப்போது இல்லை. மக்கள் மனதில் பதியும் இரண்டு வெற்றிப் படங்களை தந்துவிட்டு பிறகுதான் வித்தியாசமான முயற்சிகளை மேற்கொள்வேன். இரண்டு இந்திப் பட வாய்ப்புகள் வந்தது. தமிழில் வெற்றிபெறாமல் இந்திக்குப் போனால் உரிய மரியாதை கிடைக்காது என்பதால் மறுத்துவிட்டேன் என்றார்.

# வித்தை காட்டும் சூர்யா

ரெட் ஜெயின்ட் உதயநிதி ஸ்டாலின் தயாரிப்பில், முருகதாஸ் இயக்கும் 'ஏழாம் அறிவு' படத்தின் இசை வெளியீட்டு விழாவை பிரமாண்டமாக நடத்த திட்டமிட்டுள்ளார்கள்.

சோனி கம்பெனி இப்படத்தின் ஒடியோ உரிமையை பெற்றுள்ளது.

இந்த இசை வெளியீட்டு விழாவில் ஸ்டண்ட் கலைஞர்களுடன் சூர்யா மேடையில் சேர்க்கஸ் வித்தையை காட்டி ரசிகர்களை மகிழ்விக்க போகிறாராம். இதற்காக சேர்க்கஸ் நிபுணர்களிடம் பயிற்சி எடுத்து வருகின்றார் சூர்யா. மெடிக்கல் த்ரில்லராக உருவாகும் ஏழாம் அறிவு படத்தில் சண்டை காட்சிகளில் 'டூப் போடாமல்' கடும் முயற்சி எடுத்து சண்டை போட்டிருக்கின்றார் சூர்யா.

தமிழ், தெலுங்கு இரு மொழிகளில் ஒரே சமயத்தில் படத்தை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



உல...

# கிரிக்கெ...

...மாக இந்தப் படங்கள் ...
சினிமா வட்டாரங்கள் ...

# திருமணத்துக்கு தயாராகும் சாயாசிங்

திருடா திருடி படத்தில் அறிமுகமாகிய சாயாசிங் சில படங்களில் நடித்ததற்குப் பின்னர் நடிப்புக்கு முழுக்கு போட்டுவிட்டு தனது கல்லூரி தோழி ஒருவருடன் சேர்ந்து பெங்காலி படம் ஒன்றை இயக்கும் முயற்சியில் இருக்கிறார்.

அத்துடன் பெங்களூருவில் ஒரு விளம்பர நிறுவனம் ஒன்றை தொடங்கவும் திட்டமிட்டிருக்கிறார். இதற்கான அலுவலகமும் ரெடியாகிவிட்டது. விளம்பர படங்கள் இயக்கவும் வேலை நடக்கிறது. முக்கியமாக பெற்றோர் விருப்பப்படி இந்த ஆண்டு இறுதிக்குள் திருமணம் செய்யவும் பச்சைக்கொடி காட்டிவிட்டாராம்.



# மன்னிப்...

'தூங்காநகரம்' படத்தின...
விமல் மற்றும் அப்படத...
கௌரவ் கலந்து கொ...
ங்காநகரம்' படத்தை ...
படப்பிடிப்பில் நடந்த ...
வயான நிகழ்ச்சிகள் ...
தொலைக்காட்சியில் ந...
பகிர்ந்து கொண்டனர். ...
'தூங்காநகரம்' படப்பிட...
நடிகர் விமல் தனது ...
வீட்டிற்கு தெரியாமல் ...
கொண்டார். இதைப்பற்...
தனது மாமாவிற்கு த...
ஒரு நடிகருக்கு திரும...
கொடுக்க விருப்பமில்...
மாப்பிள்ளை தேட ஆ...

# விக்ரமுடன் இ...

அழகர்சாமியின் குதிரை படத்திற்குப் பின்னர் சியான் விக்ரம், சுசீந்திரன் இயக்க உள்ள படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கவுள்ளார். வித்தியாசமான வேடங்களில் நடிப்பதை சவாலாக ஏற்று நடிக்கும் விக்ரமிற்கு இப்படத்தில் அதிரடியான இரட்டை வேடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப்படத்தில்

## தலைப்பு தர மறுத்த பிரபு

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த 'தெய்வ மகன்' வெற்றிப் படமாக தமிழ் சினிமா வரலாற்றில் இன்றும் பேசப்பட்டு வருகிறது. புதிதாக படம் எடுக்கின்றவர்களும் இந்த 'தெய்வ மகன்' தலைப்பை எப்படியாவது வாங்கிவிட வேண்டும் என்று முயற்சி செய்துள்ளார்களாம். தற்போது விக்ரம் நடித்துவரும் 'தெய்வ மகன்' என்ற பெயரில் படத்தை எடுத்து வருவதாகவும் பேசப்பட்டது. நடிகர் திலகத்தின் நினைவாக இந்த 'பெயரை' போற்றி வருகிறாராம் இளைய திலகம். சிவாஜியின் பேரன் நடிக்கும் புதுப் படத்திற்கு இந்த பெயரை வைக்க போவதால், அவர் கொடுக்க மறுக்கிறாராம்.

## இயக்குநராகும் அனன்யா

நாடோடிகள் படத்தில் அறிமுகமான அனன்யா சீடன் படத்தின் வெளியீட்டுக்காக காத்திருக்கிறார். சமீபத்தில் 'சீடன்' படத்தை பார்த்த அனன்யா, இயக்குநர் சுப்ரமணியம் சிவாவின் காலை தொட்டு வாழ்த்துபெற்றபடி 'இனிமேல் இப்படியொரு வேடம் கிடைக்குமான்னு தெரியாது' என்றாராம். அனன்யா பற்றி இன்னொரு சுவாரசியமான தகவல் வெளியாகியுள்ளன. அதாவது அனன்யா நடிக்க வருவதற்கு முன்பு மலையாள இயக்குநர்களிடம் உதவி இயக்குநராக பணியாற்றியவர். சில வருடங்களுக்கு பிறகு அவரே படம் இயக்க முடிவு செய்துள்ளாராம்.





உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி நடைபெறும் காரணத்தால் இந்த மாதம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட சில தமிழ் படங்கள் சித்திரை மாதத்திற்கு தள்ளி போயுள்ளது என தெரிகிறது. புலிவேஷம், எங்கேயும் காதல், வானம், கோ, ஊலலல்லா, மாப்பிள்ளை, எத்தன் போன்ற படங்கள் இந்த மாதம் மற்றும் மார்ச் மாதங்களில் வெளியாகவிருந்தன. ஆனால் உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகள் காரண-

## ...கெட்டுக்காக தள்ளிப் போன படங்கள்!

...ள் ஏப்ரல் மாதம் தள்ளிப் போடப்பட்டுள்ளதாக ...ள் தெரிவிக்கின்றன

## ...ப்பு கேட்ட விமல்

...தின் நாயகன் ...படத்தின் இயக்குநர் ...காண்டு 'தூ ... பற்றியும், ... பல சுவை- ... பற்றியும், விஜய் ... நகைச்சுவையுடன் ...ர். ...பிடிப்பின் போதுதான் ... முறைப்பெண்ணை ...ல் திருமணம் செய்து ...பற்றி கூறிய விமல், ...தனது பெண்ணை ...மணம் செய்து ...ல்லாமல் வேறு ...ஆரம்பித்ததாகவும், அதனால் வேறு வழியில்லாமல் அவசரமாக திருமணம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாகவும் கூறினார். என்ன தான் திருமணம் செய்து கொண்டாலும், தனது மாமாவிற்கு தெரியாமல் திருமணம் செய்தது தவறு என்று தற்போது உணர்வதாக கூறிய விமல், அதற்காக மாமாவிடம் இந்நிகழ்ச்சியின் மூலமாக மன்னிப்பு கேட்டதாகவும் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

## இரண்டு நாயகிகள்


'இரண்டாயிரத்து ஒன்பதாம்' ஆண்டு 'மிஸ் இந்தியா' பட்டம் வென்ற அழகி, தெலுங்கில் கவர்ச்சி நாயகியாக நடித்த தீக்சா சேத், விக்ரமின் ரொமான்ஸ் நாயகியாக நடிக்க, காவலன் படத்தில் அசினிற்கு தோழியாக நடித்த மித்ரா குரியன் இன்னொரு நாயகியாக நடிக்க வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கையடக்கத் தொலைபேசியால் பாதிப்பு

இன்று வீட்டுக்கு வீடு அதாவது குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொலைபேசி வைத்திருப்பவர்களே அதிகமாகக் காணப்படுகிறார்கள். ஆனால் இதன் பாதிப்பை அவர்கள் சிந்தித்தே பார்ப்பதில்லை.

செல்போன் மற்றும் செல்போன் கோபுரத்தில் இருந்து வரும் கதிர்வீச்சால் உடல்நிலை மோசமாகப் பாதிப்படைவதாக அறிக்கை ஒன்று கூறுகிறது. ஞாபக மறதி, மனதை ஒருநிலை படுத்த முடியாமை, வயிற்றுக் கோளாறுகள், தூக்கமில்லாமை போன்றவையும் ஏற்படும். மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டத்தில் மாற்றம் ஏற்பட்டு உடலில் வெப்பம் அதிகரிக்கும். செல்போனில் உள்ள மின்காந்த சக்தி உடலில் உயிர் செல்களை பாதிக்கும். காதில் இரைச்சல், தலைவலி, ஜீரண பாதிப்பு, இதயநோய் போன்றவை ஏற்படும். குழந்தைகள், இளம் பருவத்தினர், கர்ப்பிணி பெண்கள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். குழந்தைகள், சிறுவர்கள் மண்டை ஓடு மெல்லியதாக இருக்கும். எனவே அவர்கள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்தினால் மூளை புற்றுநோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

செல்போன் கோபுரம் கதிர்வீச்சால் நகர பகுதிகளில் வண்ணத்துப்பூச்சி, தேனீக்கள், பூச்சிகள், சிறிய பறவைகள் மறைந்துவிட்டன. எனவே மக்கள் அதிக நெருக்கம் உள்ள இடங்கள், பள்ளிக்கூடம், விளையாட்டு மைதானம், ஆஸ்பத்திரி அமைந்துள்ள பகுதிகளில் செல்போன் கோபுரங்கள் அமைக்கக் கூடாது. அதிக சக்தி கொண்ட கோபுரம் அமைக்க கூடாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# தேன் கிண்ணம்

## நிசப்த இரவுகளில்!

அவனும், அவளுமான
ஜோடிப் புறாக்கள்;
என்னையும், உன்னையும் போல்!
கரை சேர்த்த தோணிகளாய்,
ஏற்றிவிட்ட ஏணிகளாய்,
பனி, குளிரில் போர்வைகளாய்,
பணி சிறக்க உதவிகளாய்,
ஆடை, அணிகலனாய்,
குடையாய், குலவிளக்காய்,
வாழ்வியலின் வளைவுகளை
நேர்வரையாய் அமைத்தோராய்...
அவனும், அவளும்!
இன்றல்ல; அன்று!

இன்று–
மீனுக்கு நீரில்லை!
நீ இருந்தும் மீன் இல்லை!
மானுக்கு வனமில்லை
வனமிருந்தும் மானில்லை!
வண்டுக்குப் பூவும்,
பூவுக்கு வண்டும்
அருந்த, அமுதளிக்க
மருந்துக்கும் இடமில்லை!
அவன், அவனாய்...
அவள், அவளாய்...
வெவ்வேறாய்; எனினும்,
அவன், அவளாய்...
அவள், அவனாய்...
நித்திரைகளை வெல்லும்
நினைவுத் திரைகளிலும்,
நிசப்த இரவுகளில்
நிகழ்வலைகள் நெளிதலிலும்!

-ஏறாவூர் தாஹிர்.

## சுமை...?

மனதில் ஒரு சுமை
வாழ்வு மறு சுமை
திருமணம் ஒரு சுமை
சீதனம் மறு சுமை
பிள்ளை ஒரு சுமை
அதை வளர்ப்பது மறுசுமை
வாழ்க்கை ஒரு சுமை
அதை வெல்வது மறுசுமை
சுமைகளோ ஒரு சுமை
இவை தமிழனின்
சுவையா..? இல்லைச்
சுமையா..?

–அபா–

## தலைப்பிலிக் கவிதை

கடவுளை வஞ்சிக்கின்றேன்
என் பூவுலகப் பிறப்பிற்காக
ஆத்மார்த்தமான பொழுதுகளில்
அழுந்திக்கொள்ளும் மனம்
அழுத்தமாகச் சொல்லிக் கொள்கிறது
கைப்பற்றிவிடு முழுமையாக என்று,
துறத்தல் எமக்குப்
பழையதாகிவிட்டது.
வீடு துறந்து,
உடைமை துறந்து,
உறக்கம் துறந்து,
உரிமை துறந்து,
மனசும் துறந்தாயிற்று
இன்னமும் துறத்தலுக்கான
நீட்சி மறையவில்லை.

யாழினி-யோகேஸ்வரன்
மட்டக்களப்பு.

## பிடிவாதப் பூ

உன் கூந்தல் முடிகளில்
தூக்குத் தண்டனையை...
அனுபவிக்கிறது -அழுது
களைத்த என் இதயம்.
உன் பிடிவாதங்களிடம்
சட்டம் படித்துக்கொண்டே...
உன் புன்னகைகளின்
திருடனாய் இருக்கிறேன்.

வெள்ளை அடிக்கப்பட்ட
என் மனச் சுவரில் - உன் திமிரை
கொட்டை எழுத்துக்களால்
பொறித்துவிட்டுப் போகிறாய்.

உன் உதடுகளை
மன்னித்தாலும் - இமைகளை
கண்டிக்கிறேன்.
என் கவிதைகள் காயப்பட்டதற்காக...

கதவையும் அடைத்திருக்கிறேன்
ஜன்னலையும் சாத்தி இருக்கிறேன்
கொசுவலையும் போட்டிருக்கிறேன்
போர்வையாலும் மூடி இருக்கிறேன்
அதையும் தாண்டி நுழைகின்றதே...?
"உன் நினைவுகள்"

வி. முகிலன்,
நெடுந்தீவு-13



## சூனியம்

நிச்சயிக்கப்பட்ட
திருமணத்திற்குள்
சரணடைந்து
பிடித்துப்போகாத
ஒருவருடன்
பிடித்துப் போனதாய்
வாழ்ந்தும் அவன்
ஒத்து வரவில்லை
நல் வாழ்க்கைக்கு.

கணவனின்
அடிதடி
அடாவடித்தனத்தால்
உடலும் மனமும்
ஊனமாகி
மரத்துப்போக
வாழ்க்கை
வெறுத்த நிலையில்
செத்திட...
நினைத்தபோது
கண்ணெதிரில்
கைகட்டி நின்றது
என் குழந்தை.

மரணம் என்னை மழுங்கடிக்க
மகனுக்காய் வாழ்வோம்
என்று வீட்டைவிட்டு
வெளிக்கிட்டுப் போகிறேன்
சூனியமான
எதிர்காலம் நோக்கி...

எம்.ஏ.மஹிறா,
மருதமுனை-04

## சீதனம்

சீதனச் சந்தையில்
சீவியம் நடாத்தும்
சிறியவர் எல்லாம்
சித்தம் தெளிந்து
சிரத்தையுடன்
சமூக நலன் கருதும்
காலம் மலராதோ ?

எஸ்.சைந்தவி-யாழ்ப்பாணம்

## பெண்ணே!

உன் மீது காதல் கொண்டு
ஆண்டுகள் ஈர் ஐந்து
பறந்தோடிப் போச்சு!
இருகரம் பற்றி தகித்திடும்
தார்வீதியில்
உலாவரக் கனாக் கண்டேன்!–ஆம்
அவ்வீதியால்
தென்றலாய் வருகிறாய்
உன் பெற்றோர் தேடிய
துணையுடன்!
தேம்பிய மனதுடன் – என்
விழிகள் உன் பாதச் சுவட்டைத்
தொடர்கிறதை அறிவாயே!

எஸ்.ஸ்ரீமது, அராலி.

Welcome
# லேடிஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கம்...



## பழக்க அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை

**மனிதனின்** அகமனம் ஆற்றல்மிக்கது. அகமன ஆற்றல் பெற்றவர்களே, அகமன ஆற்றலைப் பயன்படுத்துவோரே சாதனையாளர்கள். "ஆணும் பெண்ணும் சமமெனக் கொள்வதால், அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்" என்றான் பாரதி. சமூகப் பொருளாதார அடிமைத்தனங்களிலிருந்து பெண்ணினம் விடுதலை பெற வேண்டும் என்பதே பாரதியின் கனவு. இன்றைய கல்வியும், சூழலும் மனித விடுதலைக்குப் பாதை காட்டாமல், போட்டி, பொறாமை, தீயபழக்க வழக்கங்கள் எனும் பள்ளத்தாக்கிலே பலரையும் தள்ளிவிடுகின்றன.

பழக்க அடிமைத்தனங்களில் வாழ்வோர் குடும்பத்திலும் சமூகத்திலும் இரண்டறக் கலந்து வாழ முடியாத தனிமைத் தீவுகளாகின்றனர். பெருகிவரும் புகை, மாது, போதைப் பழக்கங்களை பாரம்பரிய பண்பாடுகள் நிறைந்த நாட்டில் முக்கிய சவாலாக உருவெடுத்துள்ளது. நமது கலாசாரம் உணவுப் பண்பாடுகளும் மேற்கத்திய மோகத்தால் கொஞ்சம் கொஞ்சமாக சீரழிந்து கொண்டு வருகிறது. கேடான பழக்கங்களில் வீழ்ந்து அடிமையாகும் வாய்ப்புள்ள உடல், மன இயல்புகள் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் உருவா கிக் கொண்டிருக்கிறது. பழக்க அடிமைத்தனம் என்பது தனி மனித வாழ்க்கையை கடுமையான, துயரமான பயணமாக மாற்றிவிடும்.

ஒருவர் தன்னிடம் பழக்க அடிமைத்தனம் உள்ளதா? என்று எளிதில் அறியலாம். தவறான பழக்கம் என்று தெரிந்தும் அதே சிந்தனை நீடிக்கிறதா? சின்னச்சின்ன அன்றாடப் பிரச்சினைகள், கஷ்டங்கள் வந்தால்கூட தற்காலிகமான விடுபட விரும்பி தவறான பழக்கத்திற்குச் செல்கிறீர்களா? சமூகத்தை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறி நடுங்கி செயற்கை உத்வேகம் கிடைப்பதாகக் கருதி தவறான பழக்கத்தையே பெரிதும் சார்ந்துள்ளீர்களா? செய்வது தவறு என்று நன்கு உணர்ந்திருந்த போதிலும் மீண்டும் மீண்டும் செய்கிறீர்களா? முயற்சித்தாலும் மீள முடியவில்லையா? இக்கேள்விகளில் ஒன்றிரண்டு கேள்விகளுக்கு 'ஆம்' எனப் பதிலளித்தால் நீங்கள் ஏதோ ஒரு பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளீர்கள் என்றே பொருள்.

பழக்க அடிமைத்தனங்களிலிருந்து குழந்தைகளை, பருவ வயதினரை, இளையோரை, தம்பதியரை, முதியோரை ஆகியோரின் குணநலன் பற்றிய ஆய்வும், அடிமைப்பட்டுள்ள பழக்கத்தின் தன்மைகளும், இதர பின்னணிச் சூழல்களும் அறியப்பட்டால் இப்பிரச்சினையிலிருந்து விடுபட வேண்டும்.

## உடலின் ஆரோக்கியத்திற்கு...

**பெண்கள்** எப்பொழுதும் தங்கள் உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க நேரம் ஒதுக்குவதேயில்லை. குடும்பம், உறவுகள் போன்றவற்றை பாதுகாப்பதிலேயே அவர்களின் நேரம் கரைந்து விடுகிறது. குடும்பத்தை கவனிக்கக் கூடாது என்று கூற வரவில்லை. தங்களுக்காகவும் வாழ கற்றுக் கொள்ள வேண்டும்.

தினசரி வாழ்க்கையில் சுலபமான யோகாசனங்களை நடைமுறைப்படுத்தலாம்.

கண்டிப்பாக காலை உணவைத் தவிர்க்கக் கூடாது.

வயிறு மற்றும் இடுப்புச் சதையைக் குறைக்க முயற்சிப்பது நல்லது. பசித்தால் மட்டுமே சாப்பிடுவது என்ற பழக்கத்தை கடைபிடிப்பது நல்லது. வறுப்பது, பொரிப்பது போன்றவற்றை விட்டுவிட்டு, வேக வைத்த உணவுகளை அதிகமாக சாப்பிடுவது நல்ல பலனைக் கொடுக்கும்.

மெனோபஸ் காலத்தை நெருங்கும்போது முகத்தில் வெயிலினால் ஏற்படும் தாக்குதல்கள் அதிகமாக இருக்கும். இந்த காலகட்டத்தில் ஈஸ்ட்ரோஜனும் நம்முடைய உதவிக்கு வராது. அதனால் கண்டிப்பாக சூரிய ஒளிக்கதிர்களிலிருந்து பாதுகாக்கும் க்ரீம்களைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

பெண்கள் தினமும் கீரை, உலர்ந்த திராட்சை, போன்றவற்றை சாப்பிடவேண்டும். அல்லது இரும்புசத்து மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிடலாம்.

உயரமான செருப்புகளை அணியாமல் தட்டையான அடிப்பாகம்கொண்ட செருப்புக்களை அணிய வேண்டும்.

பெண்களுக்கு சோயா மிகவும் நல்லது. இதற்கு பதிலாக சோயா பாலிலிருந்து கிடைக்கும் கல்சியம் மிகவும் நல்லது. இதை உட்கொண்டால் பெண்களின் உடலில் ஈஸ்ட்ரோஜன் அளவும் அதிகரிக்கும்.

## குழந்தைக்கு பரீட்சை நெருங்குகிறதா?

**பரீட்சை** வரப்போகிறது... இன்னும் பொறுப்பில்லாமல் இருக்கிறியே... திட்டித் தீர்ப்பவரா நீங்கள்? குழந்தை படிக்க வேண்டும் என்பதில் நீங்கள் காட்டும் அக்கறை சரிதான். ஆனால், உங்கள் குழந்தையின் தேர்வுக்கு அவர்கள் மட்டுமல்ல, நீங்களும் கொஞ்சம் தயாராக வேண்டும். நீங்கள் கடைப்பிடிக்க வேண்டியவற்றைப் பார்ப்போம். நெருங்கிய உற்றார், உறவினர்களிடம் உங்கள் குழந்தையின் தேர்வு திக திகளை தெரிவியுங்கள். அப்படி கூறுவதால், உறவினர்கள் குழந்தைகளின் தேர்வு சமயத்தில் உங்கள் வீட்டிற்கு வருவதை தவிர்க்கலாம். அப்படியே வந்துவிட்டால், நாசூக்காக எடுத்துச் சொல்லிவிடுங்கள். பெற்றோர், பிள்ளைகளை மட்டும் படிக்கச் சொல்லிவிட்டு, தாங்கள், 'தொலைக்காட்சி பார்ப்பர். நீங்கள் தொலைக்காட்சிப் பார்ப்பதை முதலில் நிறுத்துங்கள். குழந்தைகள் வேறு அறையில் உட்கார்ந்து படித்தாலும், அவர்கள் கவனம் முழுவதும் தொலைக்காட்சியின் தொடர்களில் தான் இருக்கும். பெற்றோர்களே இதைத் தவிர்ப்பது உங்கள் குழந்தைகளுக்குத்தான் நன்மை பயக்கும். குழந்தைகளின் தேர்வு சமயத்தில், பாடம் சொல்லிக் கொடுக்கும் போது, "நன்றாகப் படித்திருக்கிறாய். நிச்சயமாக நல்ல புள்ளி வாங்குவாய்" என்று ஊக்கமளியுங்கள். பொதுவாக உங்கள் குழந்தையை மற்ற குழந்தைகளுடன் எப்போதும் ஒப்பிட்டுப் பேசாதீர்கள். ஒரே வீட்டில் மற்ற குழந்தைகள் இருந்தாலும் அவர்களுடன் ஒப்பிட்டு பேச வேண்டாம்.

நீங்களும் அவர்கள் அருகில் அமர்ந்தவாறு நீங்களும் ஏதாவது புத்தகத்தை படித்து, நீங்கள் உங்கள் குழந்தைகள் மீது கொண்டிருக்கும் அக்கறையை வெளிப்படுத்தலாம். இது மனரீதியாக, நேர்மறையான விளைவை உங்கள் குழந்தையிடம் ஏற்படுத்தும்.

உங்கள் குழந்தைகளுக்கு எப்போதும் பக்கபலமாக இருங்கள்.



## முகத்தின் பளபளப்புக்கு...

**யாருக்குத்தான்** அழகாக இருக்க வேண்டுமென்று ஆசையிருக்காது. பெண்களே நீங்களும் இவற்றைப் பின்பற்றினால் அழகாகத் மிளிரலாம். பாலை பஞ்சில் நனைத்து, முகத்தை சுத்தமாக துடைக்க வேண்டும். பிறகு, வெள்ளரிச்சாற்றை முகத்தில் பூச வேண்டும். சிறிதுநேரம் கழித்து, பாலாடையுடன் இரண்டு துளி தேன் கலந்து, நன்றாக மசாஜ் செய்ய வேண்டும். இதைக் கழுவிவிட்டு, முல்தானிமெட்டி 1 தேக்கரண்டி, சந்தனத் தூள் 1தேக்கரண்டி கலந்து முகத்தில் பேக்காக போடவும். பதினைந்து நிமிடங்கள் கழித்து, சுத்தமான தண்ணீரில் கழுவினால் முகம் பளபளப்பாக மாறும்.

ஒரு தேக்கரண்டி ஒலிவ் எண்ணெய், ஒரு தேக்கரண்டி தேங்காய் எண்ணெய் இரண்டையும் ஒன்றாக கலந்து, சிறிது சூடுபடுத்தவும். பஞ்சில் இந்த எண்ணெயை சிறிது எடுத்து, முடியின் வேர்க்கால்களில் படுமாறு நன்கு தடவவும். சிறிது நேரம் ஊறவிட்டு, பின் தேங்காய்பால் கொண்டு மசாஜ் செய்து, நன்கு அலசவும். பட்டுபோன்ற கூந்தல் காற்றில் அலைபாயும்.

பாலாடை, பீட்ரூட் சாறு, 3 துளி தேன் மூன்றையும் கலந்து, உதட்டில் தடவவேண்டும். சிறிது நேரம் கழித்து பண்டேஜ் துணியை சிறிது வெந்நீரில் நனைத்து பிழிந்துவிட்டு, உதட்டை அழுத்தி துடைக்க வேண்டும். உதடுகள் பனிவெடிப்பில் இருந்து மீண்டு, அழகாக மாறிவிடும்.

ஒரு பாத்திரத்தில் வெதுவெதுப்பான தண்ணீர் எடுத்து, அதில் பாதி எலுமிச்சை, 2 துளி டெட்டோல் மற்றும் சிறிது ஷம்பு சேர்த்து கைகளை அதில் சிறிது நேரம் வைத்திருக்கவும். பிறகு, கைகளுக்கான பிரஷ் கொண்டு நன்கு தேய்த்து கழுவவும். துடைத்துவிட்டு, சிறிது தேங்காய் எண்ணெயை தேய்த்துவிடவும். பாத்திரங்கள் துலக்குவதால் ஏற்படும் சொரசொரப்பு நீங்கி, கைகள் மென்மையாக இருக்கும்.

மேனி எழிலை பாதுகாப்பதற்கு சன்ஸ்க்ரீன் பூச்சுகளை பயன்படுத்த வேண்டும். இவற்றை உபயோகிக்கும்போது, நம்முடைய தோலின் வகையறிந்து உபயோகிக்க வேண்டும்.

இதன்மூலம், சூரியனின் புற-ஊதா கதிர்களிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம். வெளியில் கிளம்புவதற்கு அரைமணி நேரத்திற்கு முன் இதை பயன்படுத்த வேண்டும். உலர்ந்த சருமம் உள்ளவர்கள் க்ரீமையும், இயல்பான சருமம் உடையவர்கள் லோசனையும், எண்ணெய் பசை சருமம் உள்ளவர்கள் ஜெல் வகைகளையும் பயன்படுத்த வேண்டும். சன்ஸ்க்ரீன் பூச்சுகளை, ஒவ்வொரு நான்கு மணி நேரத்திற்கு ஒருமுறை உபயோகிக்கவேண்டும்.



## பெண்கள் தினமும் பால் குடிக்க வேண்டும்

**தசை** தளர்வு ஏற்படாமல் இருக்க பெண்கள் தினமும் 2 டம்ளர் பால் குடிக்க வேண்டும். அதே வேளையில் பால் குடித்தால் உடல் தசையில் தளர்வு ஏற்படாமல் இறுக்கம் ஏற்படுமென தகவல் ஒன்று தெரிவித்துள்ளது. அவ்வாறு குடித்தால் அவர்களின் உடல் தசைகளில் தளர்வு ஏற்படாமல் இறுக்கம் ஏற்படும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பாலில் அதிகளவில் விற்றமின் டி, மற்றும் கல்சியத்தின் அளவுகள் உள்ளன. இவை உடல் எடையை அதிகரிக்க செய்யாமல் சராசரி அளவிலேயே இருக்க செய்யும் என ஆய்வில் கண்டறிந்துள்ளனர்.



## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 259**

கேள்வி : பனியிலிருந்து உதட்டைப் பாதுகாக்க பூசவேண்டியவை எவை?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 259**

**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **06.03.2011**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

பரிசுப் போட்டி இல:- 257 இற்கான விடை:-மறைத்தல், மாற்றுதல்

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- என்.பர்ஹானா, 2 ஆம் வட்டாரம், எருக்கலம்பிட்டி, மன்னார்.

259

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

..............................

தே.அ. அட்டை இல : ..............................

விடை : ..............................

கையொப்பம் : ..............................



# ஆபத்தானவர்கள்

30

சந்தேகம் என்னவென்றால், அவன் உறவினர்கள் யாராவது இந்த நகரத்தில் இருக்க வேண்டும். அத்துடன் மிக முக்கியமான விஷயம் ஒன்றை நான் இப்போது உங்களிடம் சொல்லப் போகிறேன்" என்ற ஐ.ஜி. ஜமாலுதீன் தனது கோட்பொக்கட்டிலிருந்து நீண்டகவர் ஒன்றை வெளியே எடுத்தார்.

அதைப் பிரித்தார்.

இப்போதும் எல்லோரும் அவரையே பார்த்தனர்.

"இதன் சுருக்கம் இதுதான்" என்று கூறியவர் காகிதத்தைப் பழையபடி மடக்கிவிட்டுப் பேசத் தொடங்கினார். "நாளை மறு நாள் அதாவது பன்னிரண்டாம் திகதி, வியாழக்கிழமையன்று கனடாவிலிருந்து பிரபல விஞ்ஞானியான டாக்டர் டிக்சன் கொச்சிக்கு வருகிறார். மிகவும் தந்திரபூர்வமான போர்க்கருவி ஒன்றின் இரகசியம் அவரிடம் உள்ளது. விண்வெளியிலிருந்து கட்டுப்படுத்தி இயக்கக் கூடிய ஆயுதங்கள் மற்றும் ஆயுத ஒழிப்புத் தொடர்பான சில நகவல்களை நம்முடன் பகிர்ந்துகொள்வதற்காகவே அவர் வருகிறார். அவரது பாதுகாப்பு முழுக்க நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் அவரை எவரும் கடத்திச் செல்லாமல் நாம் கண்காணிக்க வேண்டும்.

அப்போது அந்த அறை அளவுக்கு மீறி அமைதியாக இருந்தது. பஞ்சுத் துண்டு ஒன்று தரையில் விழுந்தால் கூடச் சத்தம் கேட்கும் அமைதி அங்கு நிலவியது.

"மற்றொரு முக்கியமான விஷயத்தையும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்." தன் கையிலிருந்த சுருட்டுச் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டியவர் மேலும் தொடர்ந்தார்.

"கங்காபிரசாத் இந்த ஊருக்கு வந்திருப்பதன் நோக்கமே டாக்டர் டிக்சனைக் கடத்திச் செல்வதுதான் என்ற ஒரு சந்தேகம் எங்களுக்கு உண்டு. அதிலிருந்து காவல்துறையின் கவனத்தைத் திசை திருப்பத்தான் அவர் வெடிகுண்டு வைத்துக் கட்டடத்தைத் தகர்க்க முயன்றது"

யாரும் எதுவும் பேசவில்லை.

"அது மட்டும் வெற்றி பெற்றிருந்தால், பொலிசின் மொத்தக் கவனமும் இந்த வழக்கின் பக்கம் திரும்பியிருக்கும். அதைப் பயன்படுத்தி கொச்சியில் அவர் டாக்டர் டிக்சனைக் கடத்தத் திட்டமிட்டு இருக்கலாம்." ஜமாலுதீன் ஒருவாறாகப் பேசி முடித்தான்.

"அதற்கு நாம் இப்போது என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வி ஒவ்வொருவரின் முகத்திலும் வெளிப்படையாகத் தெரிந்தது.

துப்பறிவாளர் புஷ்பராஜை, ஜமாலுதீன் மீண்டும் கவனித்தார். 'இந்த விஷயத்தில் தன்னால் என்ன செய்ய முடியும்?' என்று புஷ்பராஜ் யோசித்தார்.

கங்காபிரசாத்தை நேருக்கு நேராகச் சமாளிப்பது அவ்வளவு சுலபமல்ல. அவர், இதற்காக என்ன திட்டம் வகுத்திருக்கிறார் என்பதை எவராலும் யூகிக்க முடியவில்லை. கங்காபிரசாத் அந்தளவுக்குத் தந்திரசாலி. ஒவ்வோர் அடியையும் கவனமாக வைத்திருப்பவர். ஏதோ ஒரு வெளிநாட்டின் பின்னணிச் சக்தி அவருக்கு இருக்கிறது என்பதும் நிச்சயம்.

டாக்டர் டிக்சனைக் கடத்திக் கொண்டு வந்துவிட்டால் அவருக்கு உதவும் நாட்டில் வாழ்நாளின் மீதியை வெகு பத்திரமாகக் கழிக்கலாம். மட்டுமன்றி, இந்தியாவிலுள்ள எந்த ஒரு வாழ்க்கையும் நேரிடாமல், சுலபமாக அவற்றிலிருந்து தப்பிக்கவும் செய்யலாம். இதெல்லாம் அவரது தீர்க்கதரிசனமான திட்டங்கள் என்பது ஓரளவு எல்லோருக்கும் விளங்கவே செய்தது.

"நான் ஏற்கனவே குறிப்பிட்ட பிளக்டைகர், ஒருவேளை காங்காபிரசாத்துடன் இணையாமல் தனியாகவும் செயற்படலாம். எனவே, நாம் அந்த வகையிலும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்" ஜமாலுதீன் கூறினார்.

"அப்படியானால் நமது அடுத்த திட்டம் என்ன?" புஷ்பராஜ் கேட்டார்.

"நீங்கள் கங்காபிரசாத்திடம் செல்ல வேண்டும். சில சமயம் அவர், அந்த வேலையை உங்களிடம் ஒப்படைக்கவும் செய்யலாம்". இஸ்மாயில் கூறினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் பிளக்டைகர் ராபின்சனும் எஸ். பி.ஜோஸப் மாத்யூவும் டைனிங் டேபிளில் அமர்ந்திருந்தனர்.

சாப்பிட்டவாறே எஸ்.பி.ஜோஸப் மாத்யூ எதிரில் அமர்ந்திருக்கும் இளைஞனை ஊன்றிப் பார்த்தார்.

'இந்த முகத்தை எங்கேயோ பார்த்து மறந்துவிட்டதாக' அவருக்குத் தோன்றியது. எவ்வளவுதான் யோசித்துப் பார்த்தும் நினைவிலிருந்து கிட்டங்கியிலிருந்து அந்த ஞாபகம் மட்டும் மேலெழும்பி வரவில்லை.

ஆனால், ஒன்றிரண்டு தடவை பிளைக்டைகர் கிளமெண்ட் டிசூஸாவின் முகம் அவர் மூளைக்குள் எட்டிப் பார்க்கவும் தவறவில்லை.

பிளைக்டைகரின் கண்ணுக்குள் ஒரு கரும்புள்ளி இருநதது. அது, இந்த இளைஞனிடம் தென்படவில்லை. இந்த மாதிரி ஒரு சூழலில் எதிரே இருக்கும் இளைஞனை எப்படிச் சந்தேகிக்க முடியும்? அவர் இருப்பது சகோதரி மகளின் வீட்டில் அல்லவா?

"இப்போது எங்கே பிரக்டீஸ் செய்கிறீங்கள்?" எஸ்.பி கேட்டார்.

(தொடரும்....)

ஐம்பதைக் கடந்த அவர் மிகவும் புத்தி கூர்மையானவர். பொலிஸ் வட்டாரத்தில் அவர் பலருக்கு வழிகாட்டி என்று கூடச் சொல்லலாம்.

எல்லோரும் அவர் முகத்தை ஊன்றிக் கவனித்தனர்.

"கங்காபிரசாத் சாமானியமான வன் அல்ல. புஷ்பராஜை, அவன் இதுவரை பிளைக்டைகர் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறான். உண்மையான பிளைக் டைகர் எங்கே தலைமறைவாக இருக்கிறான். அவன் கங்காபிரசாத்துடன் எப்போது வேண்டுமானாலும் தொடர்புகொள்ளலாம்." என்றவர் தனது பேச்சை நிறுத்திவிட்டுப் புஷ்பராஜைப் பார்த்தார்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆவலுடன் புஷ்பராஜ் அவர் முகத்தையே பார்த்தார்.

"எனவே, நாம் எப்படியாவது பிளக்டைகரை உடனே கண்டுபிடித்தாக வேண்டும். அவன் இப்போது எந்த ஹொட்டலிலோ, லொட்ஜிலோ இல்லை. என்னுடைய

# முன்னாள் புலி உறுப்பினரின் உணர்வலைகள்

சிறப்புப் பேட்டி

வெட்ட வெளியாக இருக்கிற அந்த இடத்தைப் பார்த்தால் இனம் புரியாத ஒரு சோகம் மனசில வரும்.

✡ இந்த நிலைமை- அதாவது புலிகளின் வீழ்ச்சியும் நீங்கள் சரணடைந்ததும், பிறகு இப்போது விடுதலை. குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதைப் பற்றியும் என்ன நினைக்கிறீங்கள்?

இதைத்தானே நான் முன்னரே சொல்லிவிட்டேன். நாங்கள் விரும்பாத ஒருகட்டத்துக்கு வந்திருக்கிறன் எண்டு. இப்படியான நிலைமைக்குப் பிறகு ஒரு கால கட்டம் வரையில நீரோட்டத்தில போல வேண்டியதுதான்.

நீந்தேக்கக் களைச்சுப் போனால், கொஞ்ச நேரம் நீரோட்டத்தின்ர போக்கில போய்ப் பிறகு திரும்பிற விளையாட்டுத்தான்.

✡ ஆனால், இது நிலைப் பாட்டின் வீழ்ச்சியாக மாறாதா?

அப்ப என்ன செய்யிறது? எதையும் சொல்லலாம். செய்து பாத்தாத்தான் தெரியும் எண்டு சொல்லுவார். அதைமாதிரி, நாங்கள் இருக்கிற சூழ்நிலையில இப்ப பேசாமல் இருக்கிறதே மேல். தொழில், வருமான வீடு, பிள்ளைகளின்ர எதிர்காலம் எண்டு எங்களுக்கு முன்னாலே ஏராளம் பிரச்சினைகளிருக்கு.

இதையெல்லாம் இந்த வயதில் எப்படிச் செய்து முடிக்கிறது எண்டு தெரியேல்ல. எல்லாத்தையும் தொடக்கத்தில இருந்து செய்ய வேணும் எண்டால் எவ்வளவு கஷ்ரம்?

22 வருசமாகப் பொதுவாழ்வில் இருந்திட்டு இப்ப இப்படித் திடீரெண்டு தனியாகக் குடும்ப வாழ்க்கைக்கு வாறதே சிரமம். உழைக்க வேண்டிய உற்சாகமான காலத்தை - இளமைக்காலத்தை இழந்திட்டு இப்ப என்ன செய்யலாம் எண்டால் என்ன செய்யிறது?

நானாவது பரவாயில்ல. கால் இல்லாதவங்கள், கையில்லாதவங்களின்ரை நிலைமையைக் கொஞ்சும் நினைச்சுப் பாருங்க.

இந்த நிலைமையில நாங்கள் என்ன செய்யிறது?

எங்க இருந்தாலும் இதயம் நல்லா இருந்தாச் சரி எண்டதுதான் என்ர நிலைப்பாடு.

✡ அரசாங்கத்தின் உதவித் திட்டங்கள், புனர்வாழ்வு நடவடிக்கைகள் எல்லாம் எப்படி இருக்கு? விடுதலைப் போராளிக-ளின் பொதுவான நிலைமையைப் பற்றிச் சொல்லுங்கள்.

அரசாங்கம் கடன் தாறதாகச் சொல்லியிருக்கு. ஐ.ஓ.எம் எண்ட ஒரு தொண்டு நிறுவனம் தொழில் உபகரணங்களைத் தருகுது. அதுக்கு மேல நாங்கள் எதிர்பார்க்க ஏலாது. அப்படி எதிர் பார்க்கிறதில பிரயோசனமும் இல்ல.

புனர்வாழ்வில சிலபேருக்கு நல்ல வாய்ப்புக் கிடைச்சிருக்கு. சிலபேருக்கு தொழில் வாய்ப்பும் கிடைச்சிருக்கு. குறிப்பாக இளைய பெடியள், அல்லது பெண் போராளிகளுக்கு வேலை வாய்ப்புகளில் இடம் குடுக்கிற அவர்களின்ர வயது அதுக்குத் தோதாக இருக்கு.

எங்களுக்கு வயது கூடிட்டுது. படிப்பும் போதாது. படிக்கிற ஆக்களுக்கும் பரவாயில்ல. ஆகப் பாதிக்கப்பட்டது எங்களைப் போல இருக்கிற ஆக்கள்தான்.

✡ இப்போதுள்ள உங்களின் மனநிலை என்ன?

இப்படியொரு கேள்வியை விசாரணையின்போதும் கேட்டார்கள். இப்ப நீங்களும் கேக்கிறியள். இதுக்கு என்ன பதிலைச் சொல்ல முடியும்?

✡ பொதுவாகவே போராளி களின் இன்றைய வாழ்க்கையைப் பற்றிச் சொல்லுங்கள்.

வசதி வாய்ப்புள்ள ஆக்களுக்கு ஓரளவு பிரச்சினை இல்ல. சிலர் வெளியில போயிட்டினம். மற்ற ஆக்கள் சிலர் சொந்தமாகத் தொழில் செய்கிறார்கள். சிலருக்குச் சொந்தக்காரர் நண்பர்களின் உதவி இருக்கு.

ஆனால், பலருக்கும் வசதிகள் இல்லை. உதவிகள் இல்லை. சிலருக்கு சில இடங்களில் இருந்து உதவி கிடைச்சிருக்கு. அவர்கள் அந்த உதவிகளைப் பெற்றுக்கொண்டு ஏதாவது செய்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான போராளி கள் வேதனையோட இருக்கிறார்கள். அரசாங்கத்தின்ர கடனைப் பெற்றாலும் அதை வைச்சுத் தொழில் செய்யக் கூடிய நிலைமை எல்லோருக்கும் இல்லை.

பொதுவாகச் சொன்னால் இதுக்கு ஒரு ஒழுங்கான திட்டம் இருந்தால்தான் எதுவும் செய்யலாம்.

✡ பெண் போராளிகளின் நிலைமை எப்படி இருக்கிறது? குறிப்பாகத் திருமணம் முடித்திருக் கும் பெண் போராளிகளின் நிலை?

அவர்களின் நிலைமை இன்னும் மோசமானது. பெரும்பாலும் இந்த மாதிரியான பெண் போராளிகள் ஆண் போராளிகளையே திருமணம் செய்திருந்தனர். இப்ப அவர்களில் பலரும் இல்லை. பலர் ஏற்கனவே வீரச்சாவடைந்துவிட்டார்கள். சிலரைப் பற்றிய தகவலே இல்லை. இந்த நிலையில இந்தப் பெண் போராளிகள் பிள்ளைகளோடு பெரிய கஷ்ரங்களைப் படுகுதுகள்.

அதுதான் சொன்னேனே, ஒரு நல்ல திட்டம் இல்லை எண்டால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

✡ முடிவாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

இவ்வளவு காலம் எங்களை ஒரு கொள்கையில் அர்ப்பணிச்சு வாழ்ந்த நாங்கள் இப்ப இப்பிடி ஒண்டும் செய்ய முடியாத ஒரு நிலையில இருக்கிறம். இதை எப்பிடி மாத்திறதெண்டு தெரியேல்ல. அதைப் பற்றித்தான் யோசிக்கிறன்.

இப்படி யோசிக்கேக்க இனி ஒரு சோலியும் வேண்டாம் எண்டுதான் முடிவெடுக்க முடியுது.

நல்லாக் களைச்சுப் போனா தண்ணியாவது தரவேணும். அதுக்கும் ஆளிருக்க வேணும். ஆனா, இப்ப அதுக்கெல்லாம் ஆருமே இல்ல.

✡ ஒரு முன்னாள் போராளி என்ற வகையில் உங்களின் இன்றைய மனநிலை?

முன்னாள் போராளி - இப்படிச் சொல்லுவது தவறு. போராளி என்றால் முன்னாள் பின்னாள் என்றெல்லாம் கிடையாது. போராட்டம் என்றைக்கும் ஓய்வதில்லை. அது வெவ்வேறு வடிவங்களை எடுக்கும். வெவ்வேறு சூழ்நிலைகளில் அது வேறான தொழிற்பாடுகளைக் கொண்டிருக்கும். ஆகவே போராட்டத்துடன் என்றைக்கும் இணைந்திருக்கும் ஒரு போராளியை முன்னாள் போராளி பின்னாள் போராளி என்று சொல்ல முடியாது.

போராளி ஒரு அரச உத்தியோகத்தரைப் போல ஓய்வுபெறவும் முடியாது. ஓய்வாளராக அவரைக் கருதவும் முடியாது- இது அவர்களைக் கொச்சைப்படுத்தும் வார்த்தை அல்லது போராளி என்றால் என்ன என்பது புரிந்துகொள்ளாதவர்களின் கதை எண்டுதான் அர்த்தம்.

மற்றும்படி வேறு என்ன சொல்ல முடியும்.

இதைத்தானே ஏற்கனவே சொல்லியிருக்கிறன்.

முற்றும்



நன்றி: இணையம்

# அழிவும் புனர்வாழ்வும்!

## விழுந்து விழுந்து எழும் கிழக்கு மக்கள்!



-ஏ.எச். ஏ. ஹுஸன்-

ஒன்றன்பின் ஒன்றாக மாறி மாறி வரும் இயற்கை இடர்களாலும், மனித வன்முறைகளாலும் கிழக்கு மக்கள் அவ்வப்போது துவண்டுபோய் விடுகிறார்கள்.

இத்தகைய அழிவுகள் 1978 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியிலிருந்து கிழக்கு மக்களை வாட்டி வதைத்து வருகிறது. 1978ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி கிழக்கைத் தாக்கிய சூறாவளி மற்றும் வெள்ளம் இரவோடிரவாக கிழக்கு மாகாண மக்களை உருட்டிப் போட்டுப் புரட்டி எடுத்ததோடு உயிரிழப்புக்களையும் பொருளாதார அழிவுகளையும் ஏற்படுத்திவிட்டுச் சென்றது.

அப்பொழுதெல்லாம் இப்பொழுது உள்ளது போன்று உடனே ஓடோடி வந்து உதவ அரச சார்பற்ற நிறுவனங்கள் இருக்கவில்லை. அதேவேளை அரசாங்க உதவிகளும் பெருத்த அளவில் இருக்கவில்லை. மிஞ்சிப் போனால் பாணும் பருப்பும் தேயிலையும் கிடைத்தன.

என்றாலும் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களிலிருந்து மீண்டெழுவதற்கு மக்கள் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் என்ற இன பேதமில்லாது தங்களுக்கிடையில் பரஸ்பரம் செய்து கொண்ட உதவிகளே பெருந்துணை புரிந்தன.

சூறாவளியால் உருட்டப்பட்ட சில மணித்தியாலங்களுக்குள்ளாகவே நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து வந்த மக்கள், குறிப்பாக சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்ட தமிழர்களின் பிரதேசங்களுக்கும் முஸ்லிம்களின் பகுதிகளுக்கும் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு விரைந்தோடி வந்து, வீடுவீடாகச் சென்று அவற்றை விநியோகித்து விட்டு வீடுகளையும் துப்புரவாக்கிக் கொடுத்த காட்சிகள் இன்னமும் நீங்காத நினைவுகளாக தடம் பதித்து நிற்கின்றன.

சில இடங்களில் தொண்டர் முகாம்களை அமைத்து சலிப்பில்லாமல் தொடர்ந்தும் மாதக்கணக்கில் சமைத்து அன்னதானமும் வழங்கி உதவிக்கொண்டிருந்தார்கள்.

இவை தவிர தொழில் துறையை இழந்தவர்களுக்கும் அவர்கள் தமது வாழ்வாதாரத்தை மீளத் துவங்குவதற்காகத் தம்மால் முடிந்த உதவிகளை நலன் விரும்பிகள் செய்திருந்தார்கள்.

இவ்வேளையில், பிற்பட்ட காலப்பகுதியில் தொடங்கிய ஆயுதப்போராட்டம் உள்ளூர் சிங்கள முஸ்லிம் தமிழ் சமூகங்களுக்கிடையில் இருந்த சமூக சகவாழ்வைச் சீர்குலைத்ததோடு அவர்களை இன அடிப்படையில் பல கூறுகளாகப் பிரித்துப் பகைமையை ஏற்படுத்தி விட்டிருந்தது.

அதன் விளைவாக கிழக்கு சமூகங்கள், குறிப்பாக தமிழர்களும் முஸ்லிம்களும் அங்கு மிக மோசமான முறையில் தூண்டிவிடப்பட்ட இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டார்கள். இந்த வேளையில் உள்ளூர் சமூகங்களான தமிழர்களும் முஸ்லிம்களும் பரஸ்பரம் தங்களுக்குள் உதவி ஒத்தாசை செய்ய முடியாமல் தடுக்கப்பட்டார்கள்.

முஸ்லிம்கள் குறைந்தளவான எண்ணிக்கையில் வாழ்ந்த உள்ளூர்க் கிராமங்களிலிருந்து பூண்டோடு விரட்டப்பட்டதோடு, அவர்கள் மீது படுகொலைகளும் நடத்தப்பட்டன. சொத்துக்கள் பறிக்கப்பட்டன.

தமிழ் மக்கள் வாழ்ந்த கிராமங்களும் தீ வைத்து எரிக்கப்பட்டன. முஸ்லிம் தமிழ் மக்களுடன் வாழ்ந்த சிங்கள மக்களும் படுகொலை செய்யப்பட்டதோடு ஏனையோர் தப்பியோடி உயிர் பிழைத்துக்கொண்டனர்.

இந்தக் காலப்பகுதியில் எந்த இனத்தவரும் அடுத்த சமூகத்தாருக்கு உதவி செய்ய முடியாத நிலை தோன்றியது.

இந்த இனக்கலவரங்கள் எரியும் நெருப்பாக இருந்து கொண்டிருக்கும்போதே அரசாங்கப்படையினருக்கும் புலிகளுக்குமிடையிலான மோதல்கள் உக்கிரமாக இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

இது இவ்வாறிருக்க, 1987ஆம் ஆண்டு கிழக்குக்குள் புகுந்த இந்திய அமைதி காப்புப் படை நடவடிக்கைகளில் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டார்கள்.

இந்தியப் படையினரின் வெளியேற்றத்தோடு புலிகள் மீண்டும் கிழக்கில் தமிழ் முஸ்லிம் இனக்கலவரங்களை ஏற்படுத்திவிட்டார்கள். இதில் பல நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் பள்ளிவாசல்களிலும் கிராமங்களிலும் படுகொலை செய்யப்பட்டார்கள். முஸ்லிம்கள் அவர்கள் வாழ்ந்த பகுதிகளிலிருந்து இனச்சுத்திகரிப்புச் செய்து வெளியேற்றப்பட்டார்கள். சொத்துக்கள் உட்பட்ட பொருளாதாரம் அனைத்தும் கபளீகரம் செய்யப்பட்டன. அதேபோன்று இக்காலப்பகுதியில் முஸ்லீம் மக்களைப் பாதுகாப்பதற்கு என்ற போர்வையில் முஸ்லீம் சமூகத்தின் மத்தியில் குறிப்பிட்ட சிலரால் திட்டமிட்டு உருவாக்கபட்ட ஜிகாத் என்னும் பயங்கரவாத அமைப்பினால் கிழக்கு வாழ் தமிழ் மக்களும் பல பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்தனர். குறித்த பயங்கரவாத அமைப்பினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்றும் அந்த வலிகளில் இருந்து மீள முடியாதவர்களாக கிழக்கில் வாழ்ந்துகொண்டிருக்கின்றமையை மறந்துவிடவோ மறுத்துவிடவோ முடியாது.

இவ்வாறு மனித நாசகார வன்முறைகள் நடந்து கொண்டிருக்கும் தறுவாயில் 1994 மற்றும் 1995 ஆண்டு காலப்பகுதிகளில் கிழக்கில் கடும் வரட்சியும் மிகையான மழையும் வெள்ளமும் ஏற்பட்டு கலவரங்களினாலும் பயங்கரவாத வன்முறைகளினாலும் சீரழிக்கப்பட்டுப் போயிருந்த மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கியது.

இயற்கை இடர் இப்படியிருக்க, தொடர்ந்து பயங்கரவாத வன்முறைகள் மக்களைத் துவம்சம் செய்த வண்ணம் இருந்தது. வீட்டுக்கு ஒருவர் என்று போருக்கு ஆள் பிடிக்கும் கட்டாய ஆள் சேர்ப்பில் தமிழ் சமூகத்தின் இளம் பரம்பரை மீள முடியாதவாறு நாசம் செய்யப்பட்டது. அகதிகளும், அநாதைகளும், விதவைகளும், அங்கவீனர்களும் புத்தி பேதலித்தோரும் என்று தமிழ் சமூகத்துக்கான தலைவிதியைப் புலிகள் நிர்ணயம் செய்து விட்டார்கள்.

2002ஆம் ஆண்டு புலிகள் கிழக்கில் மீண்டும் இன வன்முறைகளை உசுப்பிவிடும் நோக்கோடு மேற்கொண்ட நாசவேலைகளினால் அநேக எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதோடு இன்னும் பலர் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போனார்கள். திருமலையில்- மூதூர், மட்டக்களப்பில் வாழைச்சேனை போன்ற முஸ்லிம்களின் வர்த்தக நகரங்கள் எரியூட்டப்பட்டன. இதன் மறுதாக்கமாக தமிழ் மக்களும் பாதிக்கப்பட்டனர்.

2006ஆம் ஆண்டில் கிழக்கிலிருந்து தொடங்கப்பட்ட பயங்கரவாதத்திற்கெதிரான அழித்தொழிப்பு நடவடிக்கையின்போது கிழக்கில் வாழ்ந்த ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் அகதிகளாகி அல்லற்பட நேர்ந்ததுடன் அதிக இழப்புக்களையும் சந்தித்தார்கள். இன்று வரையும் திருகோணமலை சம்பூர் பகுதி மக்கள் அகதிகளாகவே தமது வாழ்நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

2007ஆம் ஆண்டு புலிகளின் வன்முறைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட கிழக்கு மக்கள் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களாக இன ஐக்கியத்தோடு இணைந்து தமது வாழ்வாதாரத்திலும் இன்ன பிற பொருளாதார நடவடிக்கைகளிலும் முனைப்புடன் ஈடுபட்டு வந்த தறுவாயில் 2010 டிசெம்பரில் தொடங்கி 2011 பெப்ரவரி வரையிலும் துரதிர்ஷ்ட வசமாக ஏற்பட்ட அடை மழையும் அடுத்தடுத்து தொடராக ஏற்பட்ட பெருவெள்ளங்களும் கிழக்கு மக்களை நிலை குலையச் செய்திருக்கிறது.

இதிலிருந்து அவர்கள் மீள்வதுதான் இடம்பெறக்கூடிய அவசரமும் அவசியமும் நிறைந்த காரியமாகும். இப்போதைக்கு ஓரேயொரு நம்பிக்கை ஒளிக்கீற்று என்று கூறுவதென்றால் அது இனங்களுக்கிடையிலான பரஸ்பர உதவி ஒத்தாசையாக இருப்பதைக் கருத முடியும். ஏற்கெனவே 1978ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளி இடரின் போது எவ்வாறு சிங்கள சமூகத்தார் சமூக சக வாழ்வோடு தமிழர் முஸ்லிம்களின் பகுதிகளுக்கு ஓடோடி வந்து உதவினார்களோ அதே மனப்பான்மையோடு உதவிக்கொண்டிருப்பதை ஒரு சாதகத்தின் அறிகுறியாகக் கருதமுடியும்.

அதேபோல உயிர் அச்சுறுத்தல் எதுவுமின்றி மக்கள் தமக்கான மீளமைப்புப் பணிகளைக் கிடைக்கும் உதவிகளைக் கொண்டு தொடங்குவதற்கான தடைகள் எதுவுமில்லாதிருப்பதை இன்னொரு சாதகமான அறிகுறியாகக் கொள்ள முடியும்.

கிழக்கு மக்கள் இணைந்த சமூகங்களாக மீண்டுமொரு முறை மீண்டெழ வேண்டியிருக்கிறது


## மனோதத்துவ வைத்தியம்
General Psychotheraphy

அகில உலகெங்கும் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களிற்கு அறிமுகமான பிரபல மனோதத்துவ Dr.P. ஆறுமுகம் அவர்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் இல்லற வாழ்க்கைக்குப் புத்துயிர் கொடுத்து பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

**யாழ்ப்பாணத்தில் 25.02.2011-03-03-2011 வரை**

KAMAL TOURIST INN
(சிவதர்சன் பாட்ஸ் கடைக்கு மேல்)
392/A Clock Tower Street. Jaffna.

T.P:0214922403

கமல் ருரிஸ்ற் இன்
392/A மணிக்கூட்டு கோபுரவீதி,
யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் பாட்ஸ் கடைக்கு மேல்)

Hotline:0719315664
0777569205

*** தாம்பாத்திய பாதிப்புக்கு 100% இற்கு 10% கூட நோய் காரணம் அல்ல 90% மனோநிலையால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மையே காரணம்.**

இப்படியானவர்கள் திருமணம் செய்யப் பயந்து திருமணத்தை வெறுக்கிறார்கள். பலர் திருமணம் செய்து ஏற்பட்ட தோல்வியால் வாழ்வே வீணாகிவிட்டது என்று பயந்து வாழ்வை வெறுக்கிறார்கள். இதற்கு இளம் வயதில் இருந்து(முஸ்தீ மைத்தூனம்) கரப்பழக்கம் செய்து சீக்கிரம் விந்து வெளி யாக்க பயிற்சி கொடுத்தாலும் சிலர் அளவுக்கதிகமான உறவு கொள்வதாலும் முறையற்ற தொடர்புக ளாலும் உடல் ஆற்றல் குன்றி நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு இப்படியான பாதிப்புக்களை ஏற்படுத்த்திக் கொள்கின்றனர்.

விஞ்ஞான வளர்ச்சி பெற்ற முக்கியத்துவம் கொடுக்கும் இக்காலத்தில் இவ்வாறான பாதிப்புக்களை Dr.P.ஆறுமுகம் அவர்கள் விஞ்ஞான ரீதியில் அற்புதமான மனோதத்துவ பயிற்சியைக் கொடுத்து அடிமனதில் நான் முடியுமானவனாய் ஆகிவிட்டேன் என்று நம்பிக்கையைக் கொடுக்கின்றார்.

* வெளிநாட்டி னருக்கு விசேஷட வைத்தியம் மனோதத்துவ ஒலிப்பதிவு நாடாவும் நாலுவிதமான $1^1/_2$Kg மூலிகை மருந்தையும் அனுப்புகிறார்.

* யாழில் குழந்தை இல்லாமல் இருந்த சிலருக்கு எனது மனோதத்துவ வைத்தியம் மூலம் குழந்தை கிடைத்தமைக்கு ஆதாரம் உண்டு.

**கொழும்பு முகவரி பின்னர் அறிவிக்கப்படும். விளக்கம்பெற 300ரூபா மணி ஓடர் அனுப்பவும்.ஏனைய நாட்களில்,**

Dr.P.ஆறுமுகம். 51/5 கூழாவடி வீதி. மட்டக்களப்பு. தொ.பே. இல : 0652224019 C/470

ICC Cricket World Cup 2011

# தீர்ப்புகளுக்கு அப்பால் சில நியாயங்கள்




உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா ஆரம்பமாகிவிட்டது. திருவிழா என்றாலே சேர்ந்து வருவது அதிரடி வாண வேடிக்கைகளும்தான். இந்தியா, நியூசிலாந்து, இலங்கை ஆகிய டெஸ்ட் அந்தஸ்த்துப் பெற்ற நாடுகள் வெற்றிகளைப் பதிவு செய்ய, மறுபுறம் டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற பங்களாதேஷ், ICC அந்தஸ்துப்பெற்ற கென்யா, கனடா நாடுகள் வெற்றியைப் பதிவு செய்ய முடியவில்லை. நடைபெற்று முடிவடைந்த ஆட்டங்களில் நியூசிலாந்து கென்யா ஆட்டம் சற்று வித்தியாசமானதாக இருந்தது. ஜாம்பவான்களில் தரவரிசை கீழ்மட்ட நியூசிலாந்து கென்யாவைக் கடுமையாகத் தண்டித்துவிட்டது. இது சிலருக்கு ஆச்சரியத்தையே ஏற்படுத்தியது.

பொதுவாக வெற்றி பெற்றவர்களை ஆகா, ஓகோ என்று புகழ்பவர்கள் தோல்வியுற்றோர் பற்றி ஆராய்வது குறைவு. இப்படிப் பார்த்தால் கென்யா ஏன் இப்படி வீழ்ந்தது என்றும், மறுபுறமாக யோசிக்கலாம். உலகக் கிண்ணத் தொடரொன்றில் அரை இறுதிவரை முன்னேறிய கென்யா இம்முறை பலமான அணியாக இல்லை. இருந்தாலும் அடுத்துவரும் ஆட்டங்களில் வெற்றி தோல்வி என்பதற்கு மேலாக சிறந்த முறையில் போராடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம். 23.5 ஓவர்களில் 69 ஓட்டங்களுடன் சுருண்டு போவதென்பது இந்த அதிஉச்சச் சுற்றுப் போட்டியில் இவர்களுக்கு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். மேலும் நியூசிலாந்து விக்கெட்டுக்கள் ஒன்றைக் கூடச் சரிக்க முடியவில்லை என்பது இன்னொரு தாக்கம்.

மறுபுறம் ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற இலங்கை, கனடா் பங்குகொண்ட போட்டியும் ஒருபக்கம் சார்ந்த போட்டிதான். ஆரம்பத்தில் நிதானமாகவே ஆரம்பித்த இலங்கை, பின்னர் விஸ்பரூபம் எடுத்தபோது கனடா நொந்துதான் போய்விட்டது. இருந்தாலும் இலங்கையின் விக்கெட்டுக்கள் ஏழைச் சாய்த்தோம் என்று வேண்டுமானால் ஆறுதல் கொள்ளலாம். தொழில்சார் கிரிக்கெட் வீரர்களைக் கொண்டிராத, பொழுதுபோக்குக் கிரிக்கெட் அணிகளுக்கு என்ன நேரம் என்பதற்கு கனடா, இலங்கை ஆட்டம் ஒரு நல்ல உதாரணம். கனடா தோல்வியடைந்தாலும் பரவாயில்லை, ஐம்பது ஓவர்கள் நின்று தாக்குப்பிடித்திருக்க வேண்டும். குறைந்தது இருநூறு ஓட்டங்களையாவது பெற்றிருக்க வேண்டும். இரண்டுமே நடக்காமல் 36.5 ஓவர்களை வெறும் 122 ஓட்டங்களுடன் சுருண்டு வெறுப்பேற்றிவிட்டார்கள்.

ஆனால் சுற்றுப்போட்டியின் முதல் ஆட்டமான இந்தியா, பங்களாதேஷ் ஆட்டம் வித்தியாசமானது. இந்தியா நான்கு விக்கெட்டுக்கள் மட்டும் இழந்து 370 ஓட்டங்கள் குவித்தமை பாராட்டுக்குரியது. இந்திய அணியின் பலத்துக்கு, எல்லா வீரர்களும் ஒன்றிணைந்து நியாயம் கற்பித்துவிட்டார்கள் என்றே கொள்ளவேண்டும். இருந்தும், மறுவளமாக பங்களாதேஷ் அணியின் சகல விக்கெட்டுக்களையும் சுருட்டிக்கொள்ள இந்தியாவால் முடியவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அதுமட்டுமல்ல மிகவும் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையான 283 ஓட்டங்கள் வரை பங்களாதேஷ் துரத்தியிருக்கிறார்கள் என்பதைச் சிறப்பாகச் சுட்டிக்காட்ட வேண்டும். எனவே எதிர்வரும் போட்டிகள் பங்களாதேஷின் வெற்றித்தாகத்தை வெளிப்படுத்தும். ஆக்ரோஷமான போட்டிகளாகத்தான் இருக்கும். இந்த வகையில் தோல்வி என்ற சொல்லுக்கு அப்பால் பங்களாதேஷ் அணியின் நம்பிக்கைகள், திறமைகள் ஓர்மம் என்பனவும் வெளிப்பட்டதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

அடுத்தடுத்து வரும் ஆட்டங்களிலும் ஒரு கட்டம் வரை ஜாம்பவான்கள், அப்பாவிகளை நொருக்கத்தான் போகிறார்கள். சின்ன மீனை திமிங்கிலங்கள் விழுங்கும். இது விதி.



---

## விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

# எழுவதற்கு ஒரு சந்தர்ப்பம்

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் திறமை நிறைந்த ஒரு வீரர் ராம் நரேஷ் சர்வான். முப்பது வயதாகும் இவர் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் சேர்த்துக் கொள்ளப்பட வில்லை. இருந்தும் ஒரு நாள் போட்டிகளில் இவரை விட்டுவிடவும் இல்லை. அதேபோல் இவர் கிடைத்த சந்தர்ப்பத்தை விட்டுவைக்கவும் இல்லை. இலங்கைக்கு எதிரான அண்மையில் நடைபெற்று முடிந்த மூன்று ஒரு நாள் போட்டிகளில் இரண்டு அரைச் சதங்கள், கென்யாவுடனான பயிற்சிப் போட்டியில் ஒரு சதம் என்று அசத்தியிருக்கிறார்.

இந்த மத்திய வரிசை ஆட்டக்காரர் அணியில் இருந்து நீக்கப்படும் போதெல்லாம் "மனம் நொந்து போவேன். ஆனால் அதற்கான காரணங்களைப் பாடங்களாகக் கொண்டு உயிர்த்தெழுவேன். கிரிக்கெட்டை விட்டுப்போகும் கதைக்கே இடமில்லை" என்கிறார் இந்த கயானா நாட்டு வீரர்.

இதற்கிடையில், மே. இந்தியத்தீவுகள் அணி அவர்களின் ஒரு நாள் வரலாற்றில் முதன் முறையாகத் தரவரிசையில் பங்களாதேஷை விடவும் அடுத்த நிலைக்குக் கீழிறங்கியுள்ளது. தற்போது மே. இந்தியத் தீவுகள் 9 ஆவது நிலையில் இருக்கிறது. இந்நிலையில் உலகக் கிண்ணப் போட்டிகளில் எந்தவகையில், எதுவரையில் மே.இ.தீவுகள் அணி சாதிக்கப்போகிறது. சர்வான் இதுபற்றிக் கூறுகையில், தரவரிசை எங்காவது இருந்துவிட்டுப் போகட்டும். பரவாயில்லை. எங்கள் அணியில் சந்தர்போல், கிறிஸ்கைல் இருவரும் இருப்பதை மறந்துவிடக் கூடாது. இரண்டு பிராவோக்கள் இருப்பதையும் மனம் கொள்ள வேண்டும். கெப்பரோன் பொலாட் மிகப் பெரிய சொத்து என்று அடுக்கிக் கொண்டே போகிறார். (ஏன் சர்வானும் இருக்கிறாரே. 159 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 5245 ஓட்டங்கள் குவித்தவர். இவர் என்ன சாதாரணமா?)

அணியில் கட்டுக் கோப்பு, ஒருங்கிணைவு மற்றும் புரிந்துகொள்ளல், இவை எம்மிடம் தற்பொழுது நிறையவே உண்டு. கால் இறுதி வரை முன்னேறு வோம் என்று முழு நம்பிக்கை கொண்டுள்ள சர்வானின் நம்பிக்கை பிழைக்காது என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் அணி வீரர்களின் பெயர் பிரபல்யம் குறிப்பிடத்தக்கது,

மேலும் இவர்களது முதலாவது உலகக் கிண்ணப் பலப்பரீட்சை எதிர்வரம் 24 ஆம் திகதி தென். ஆபிரிக்க அணிக்கு எதிராகப் புதுடில்லியில் நடைபெறவிருக்கிறது. மிகப்பலமான அணிக்கு எதிராக நடைபெறப்போகும் இவ்வாட்டத்தில் எவ்வித சமரசத்துக்கும் இடமில்லாமல் மே.இந்தியத் தீவுகள் அணி தன்னை நிரூபித்தாக வேண்டும். பொறுத்திருந்து பார்ப்போம். சர்வானின் நம்பிக்கையை வாழ்த்துவோம்.

**RAM NERESH SARWAN**
'சர்வமும் உன்னிடம்'



மனதுக்கு நிம்மதி

# மனசு பற்றிய புரிதலே அவசியம்



மனம் பற்றிய விந்தைகளைப் பற்றி நாளாந்தம் நாம் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். மனத்தின் ஆளுமை, உத்வேகம் பற்றிய ஆர்வநிலைகளை வார்த்தைகளில் சொல்லிவிட்டு அடுத்த விடயம் பற்றி சொல்ல ஆரம்பித்துவிட முடியாது. ஆனால், நமது மனது பற்றிய ஆழமான விசாரிப்புகளில் மட்டுந்தான் நாம் எம்மைப் பற்றிய விடயங்களை அறிந்துகொள்ள முடிகிறது.

உங்களைச் சூழ்ந்த உலகம் பற்றிய அவதானிப்புகள் தான் இந்தக் கணத்தின் வலிமையையோ, வெறுப்பையோ தருவதற்கு காரணியாகிவிடுகிறது. நீங்கள் நம்பிக்கை கொண்டவராய் விடயமொன்றை சொல்லும் போது, உங்களை அவர்கள் திமிர் பிடித்தவர் எனச் சொல்வார்கள்.

நிதானமாக சிந்தித்து ஒரு விடயம் சார்பாக நீங்கள் வேலை செய்யத் தொடங்கினால், உங்களுக்கு உங்களைப் பற்றிய நம்பிக்கை அதிகமாக இருக்கிறது என்று சொல்வார்கள்.

ஒரு விடயத்தின் நோக்கத்தை அடையும் வகையில் நீங்கள் கருமம் ஆற்றத் தொடங்கும் நிலையில், உங்களை அவர்கள் சுயநலக்காரன் என்று சொல்வார்கள். நீங்கள் யாரென்று நீங்களே உங்களை அறிந்து கொண்ட நிலையில், உங்களிடம், "உண்மையாகவே, நீ யாருப்பா?" என்று ஏளனமாக கேட்கத் தொடங்குவார்கள்.

பச்சாதாபம், கருணை என்பவற்றை நீங்கள் நம்பிக்கை கொண்டு செயல்பட, உங்களை அவர்கள், ரொம்ப வெகுளித்தனமாக நீங்கள் இருப்பதாகச் சொல்வார்கள். நீங்கள் கனவு காண்பவராக இருக்கும் நிலையில், உங்களை நிஜ உலகுக்கு வருமாறு ஒரு வகையான கேளியாக அழைக்கத் தொடங்குவார்கள்.

நீங்கள் பொருத்தமில்லாத விடயங்களை எதிர்க்கத் தொடங்கும் நிலையில், அவர்கள் உங்களை கட்டுப்படுத்த தருணம் தேடித் திரிவார்கள். நீங்கள் யாரிந்த அவர்கள் என்று கேட்கலாம் அல்லது உணர்ந்து கொண்டு விட்டிருக்கலாம்.

அந்த அவர்கள், இந்தப் பாத்திரத்தை நாம், நம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொள்கிறோம். இது ஏன் இப்படி நடக்கிறது என்பது பற்றிய அவதானிப்புகள் இருந்தாலும், அது சொல்லித்தரும் பாடத்தை பலரும் புரிந்தாலும் இந்த நிலை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

ஆனாலும், நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது இவைதான். அவர்களுக்கு உங்களிடம் இருக்கும் தனித்துவமான விடயங்களைப் பெற்றுக் கொள்ள ஆசை, அதனால் அவர்களிடம் பொறாமை குடிகொண்டு விடுகிறது.

அவர்கள் மாற்றங்கள் உருவாக்கப்பட்ட போதும், மாற்றங்கள் பற்றிய பயம் எப்போதும் இருந்து கொண்டேயிருக்கிறது. அவர்களின் கவலைகளை, உங்களிடம் கோபமாக பிரதிபலிக்கச் செய்ய பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனாலும், இவை எல்லாமுமே தவறான விடயங்களாகப் புரிந்து கொள்ளப்படக் கூடாது. சிலபேர் தங்களின் மனது பற்றிய அழகிய புரிதலின் பின்னர், தம்மையே தேற்றிக் கொண்டு உங்களோடு கைகோர்த்து ஒருமித்து செயல்பட முன்வருவர்.

நீங்கள் நல்லவராய் இருந்த போது, அந்த நல்லவர் என்ற நிலையை தாங்களும் அடைய வேண்டுமென்ற ஆசைதான் அவர்களுக்கு பொறாமை கொடுத்தது என்பதை நீங்கள் உணர்வீர்கள். அவர்களை அகமகிழ்ந்து உங்களோடு சேர்ந்து கருமம் செய்ய அழைப்பீர்கள்.

"உங்கள் துணையில்லாமல் நான் தவித்திருந்தேன்" என்று நீங்கள் சொல்வீர்கள். "நல்ல நேரம், காலம் எம்மை சேர்த்து விட்டது" என்று அவர்கள் மகிழ்வை ஆழ்மனத்தால், உங்களுக்கு தெரிவிப்பார்கள்.

எது எப்படியோ, நீங்கள் காந்தியடிகள் சொன்ன விடயத்தை கட்டாயம் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். அது தான்: "முதலில் உங்களை அவர்கள் புறக்கணிப்பார்கள், பிறகு உங்களைப் பார்த்து ஏளனமாக சிரிப்பார்கள், பின்னர் உங்களோடு போராடுவார்கள், ஈற்றில் நீங்களே வெல்வீர்கள்."

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 408

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | ■ | 10 | | ■ |
| 13 | 14 | 15 | ■ | ■ | ■ |
| ■ | 20 | 21 | ■ | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | ■ |
| 31 | ■ | ■ | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 06.03.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-408
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.406 க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

வே.குமாரசுவாமி, பரமாந்தர் வளவு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. க.சாய்பிரமோதித்தா, மொல்லிகொட லேன், கம்பளை.
02. பி.லோஜிதன்,அரிசி ஆலை வீதி, களுதாவளை.
03. சி.வாகீசன், கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.
04. எஸ்.அஜந்தன், நிவ்எல்பிட்டிய, ஹெலிஓயா.
05.ம.ருசாங்கன்,கலகெதரமடிகே,கலகெதர.
06.கே.பெலின் தீசாக்,தாழ்வுபாடு, மன்னார்.
07.எச்.எம்.கயூன்ஷா, தர்ஹாநகர்,
08.செ.செந்தாரணி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

**இடமிருந்து வலம்**

01.இலங்கையின் முக்கிய வாசஸ்தலம் ஒன்று.
07.இடையூறு அல்லது கெடுதல் எனவும் பொருள்படும். (திரும்பியுள்ளது).
10.உடல் உறுப்புக்களில் ஒன்று. (திரும்பியுள்ளது).
13.பரம்பரை அல்லது சந்ததி. (குழம்பியுள்ளது)
20.செல்வம் என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது)
23.பயிர்களைத் தாக்கும் நுண்ணுயிர்கள். (திரும்பியுள்ளது)
25.ஆர்யா நடித்து வெளியான திரைப்படங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது).
34.கடவுள் அல்லது தோன்றிய வரலாறற்றது. (திரும்பியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி 406- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பி | 2 ல் | 3 ரே | 4 சி | ■ | 6 லி |
| 7 தா | ■ | ■ | 10 ன் | ■ | 12 பு |
| 13 ம | 14 பி | 15 ம் | 16 ர | ■ | ■ |
| 19 க | ■ | 21 ட | 22 ம் | 23 இ | 24 ப |
| 25 ன் | 26 தா | 27 ச | ■ | 29 வி | 30 து |
| ■ | 32 மா | ■ | 34 பி | 35 ர | 36 மை |

**மேலிருந்து கீழ்**

01.புல்லினங்களில் ஒன்று.
02.பவனி வருதல் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
04.பெண்ணை இவ்வாறும் அழைப்பர்.
05.இந்துக் கடவுளின் பெண் தெய்வங்களில் ஒன்று. (திரும்பியுள்ளது)
15.ஒழுக்கம் என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)
23.ராகங்களில் ஒன்று. (திரும்பியுள்ளது).
25.மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பு. (திரும்பியுள்ளது)
28.மன்மதனின் நாயகி.

## மோப்ப சக்தி



உலகம் முழுவதும், பிலட்த்ஹௌந்து எனப்படும் நாய்தான் துப்பறிவதற்கு அதிகம் பயன்படுகிறது. காணாமல் போன குழந்தைகளைப் பிடிப்பதற்கு பேர் போனது. பொதுவாக நாய்கள் மனிதனை விட 50 மடங்கு மோப்ப சக்தி மிக்கது என்றாலும், பிலடுவிடம் ஏராளமான மோப்ப செல்கள் உள்ளன. மனிதனிடம் 10/ச.செ.மீ. பிலடுக்கு 170/ச.செ.மீ. பரப்பில் மோப்ப செல்கள் உள்ளன. நீங்கள் அடுப்பங்கரையில் நுழையும்போது கறி வாசனை வந்தால் அது கொஞ்ச நேரத்தில் நமக்குத் தெரியாமல் போய் விடுகிறது. ஆனால் மோப்ப நாய்க்கு அப்படி இல்லை. எப்படி இவை மோப்பம் பிடிக்கின்றன தெரியுமா..? நம் உடலிலிருந்து விழுந்த செல்களின் மூலம்தான்...!

இவைதான் உங்களுக்கான தனி மணத்தை உருவாக்குபவை. உங்களின் வாசனை, உங்கள் கைரேகை போல்தான். இதுவும் தனித்துவம் மிக்கது.




மாந்திரீக நல்வழி களஞ்சியம்



01.கடமையையும், உண்மையையும் இரு கண்களாகக் கொண்ட என் அருள் ஞான சித்தத்தால் செவ்வாய் குற்றத்தால் வயது ஏறிக் கொண்டு போகும் பெண்களுக்கு உடன் திருமணம் நடைபெற எம்மால் 13 வாரங்களுக்கு அதாவது 3 மாதம் 7 நாள் வரை செவ்வாய் கிழமை வரும் ராகு காலத்தில் 3 மணி முதல் 4.30 வரை இவர்களுக்காக அவர்களின் பெயர் நாமத்தில் வரும் 11 தேசிக்காயில் ஸ்ரீ துர்க்கை அம்மனுக்குக் குங்கும அபிஷேகம் செய்ய இந்தக் குறிப்பிட்ட நாட்களுக்குள் குறிப்பிட்ட ஜாதகம் பொருந்தக்கூடிய ஜாதகன் வந்து சேருவார்.

02.இன்னும் கணவன்-மனைவி பிணக்குத் தீர மன்மத ஆகாசன் வேர் தலையணையில் வைத்து உறங்கிவர கணவன்-மனைவி பிணக்குத் தீரும்.

03.மாமன் மாமி சண்டை, விட்டுப்பிரிந்த கணவர், விட்டுப்பிரிந்த உறவு, விவாகரத்துப் பெற்றவர்கள், கல்வியில் கவனம் எடுக்க, தொழிலை உன்னிப்பாகக் கவனிக்க, அனைத்துக்கும் தெய்வீக மூலிகை வசியம் என்னிடம் உண்டு.

தனிப்பட்ட நபரின் தெட்டத் தெளிவான ஜாதக கணிப்பின் பின்பே பரிகார முறைகள் கையாளப்படும். நல்லது நினைக்க நல்லது கிட்டும்.

கௌரவ பேராசிரியர் தேசபந்து P.K.சாமி (J.D.G.A.N)JP ஐயா. ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக ஞான பீடம். இல.162,கொட்டாஞ்சேனை வீதி, மேபீல்ட் ரோட், கொழும்பு-13, 011-2470615, 011-2342463, 011-2342464. FAX 0094-112344831 நுவரெலியா கிளை - இல. 33, தினசரி சந்தை கட்டிடம். 052-2222508. (C/441)




**அகில இந்திய இசை விழா போட்டியில் வெற்றி பெற்றதற்காக ப்ரமோத் ஏற்பாடு செய்திருந்த பார்ட்டியில் கலந்துகொண்ட அகல்யா, அன்றைய இரவை ஸ்ரீதரின் தங்குமிடத்தில் கழித்திருந்தால் (கொஸ்ரல் பூட்டப்பட்டிருந்ததால்) மறுநாள் காலையில் அகல்யா விடுதிக்குத் திரும்பியபோது அவளது மாமனார் சுந்தரேஷன் அவளைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். அவளது விருப்பப்படி கொம்பியூட்டர் படிப்பதற்கான பணத்தினைச் செலுத்தியிருந்தார்.**

'தப்பா நினைக்கமாட்டீங்களே!

"அதிகாலை ஆறு மணியில் இருந்து ஒன்பது மணி வரை கிளாஸ்... குறைஞ்ச பட்சம் 200 மணித்தியாலம் கொம்பியூட்டர் நேரம் இருக்கும். எப்ப ஆரம்பிக்கறீங்க?

"உங்களுக்குப் பிரச்சினை இல்லையென்றால் இங்க தரையில படுத்துக்கொள்ளலாமே?"

"அதுக்கென்ன. படுத்துக்குங்களேன்"

"அகல்யா... அகல்யா!"

"என்ன என்றாள்"

அப்போதுதான் நினைவு வந்தவள் போல

"இராத்திரி நீ சரியாக நித்திரை கொள்ளவில்லையா" என்றார் சுந்தரேஷன்.

"எப்ப இங்கு படிப்பதற்கு சேர்ப்போறீங்க?"

"அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து சேர்கிறேன்" என்றாள்.

"ஐ ம் முரளி. உங்க இன்ஸ்ட்ரக்டர்" என்று ரை கட்டிய, கைகட்டிய இளைஞன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

கல்லூரிக்குச் சென்றபோது சக மாணவிகளும், மாணவர்களும் உற்சாகமாக வரவேற்றார்கள்.

அகல்யா ப்ரமோத் என்ற இரண்டு இதயங்களை வேறு வரைந்திருந்தார்கள்.

பிரார்த்தனை மண்டபத்தின் முன் அவர்கள் வென்ற கோப்பை பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

"நம் கல்லூரிக்கு வெற்றி வாய்ப்புத் தந்த ப்ரமோத்துக்கும், அகல்யாவுக்கும் வாழ்த்துக்கள்" என்று பலகையில் பற்பொடிக் நிறத்தில் வர்ணம் வர்ணமாக எழுதியிருந்தது.

அப்போது கரஸ்பாண்டண்ட் சாரங்கபாணி அவளைக் கூப்பிட்டிருந்தார். அவள் போன போது ப்ரமோத் எதிர்நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அலுமாரி நிறைய கப் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பிரிட்டிஷ் காலத்திலிருந்து கரஸ்பாண்டண்ட்டாக இருந்தவர்களின் போட்டோக்கள் சுவரின் மேற்பாகத்தை அலங்கரித்தன. அத்தனையும் தலைப்பாகையுடன்.

"வெல்டன் மை கேர்ள்" என்று சாரங்கபாணி. அகல்யாவின் கையைப் பற்றிக் குலுக்கினார்.

"நீ யாரப்பா"

"இவன்தான் சேர் ப்ரமோத்" என்றாள் கிருத்திகாசாரி.

"பாடினது இந்தப் பொண்ணுதான் சேர்"

"பெயர்?"

"அகல்யா"

"நீங்கள் யாருடைய மகள்"

"உங்க அப்பா பெயர் என்ன?"

"ராமசாமி" என்றாள்.

"அவரை நான் சந்திக்க வேண்டும்" கிருத்திகா சொன்னாள்,

"நீ படிப்பிலும் ரொம்ப துடியாம். இந்த மாதிரி மாணவர்கள் தான் வேணும். ஆனால் படிப்பை விடக்கூடாது. படிப்புத்தான் முக்கியம்" என்றார்.

அறையை விட்டு வெளியே வந்தபோது, ப்ரமோத் அவளிடம் "ஐ'ம் வெரி சொறி"

"நேற்றுக் கேனத்தனமா, பாமரத்தனமா உன்னோடு நடந்துவிட்டேன். நாலு கிளாஸ் பியர் குடிச்சிட்டேன். என்ன செய்யிறதெண்டு தெரியாம..."

"அதனால பரவாயில்லை. இராத்திரி ரொம்ப நேரமாயிட்டுது போல... நிஜமாகவே என்னை மன்னிச்சுக்கொள்... காட்டான் நான். உன்னை உட்கார வைத்து என்னென்னவோ பண்ணப் பார்த்தேன். தப்பு"

மௌனமாக இருந்தாள்.

"இனிமேல் நீயும் படிக்க வேண்டும். நானும் படிக்க வேண்டும். வரலாறு, சமூகவியலில் ஏதாவது சந்தேகம் வந்தா என்னிடம் கேள்"

அகல்யா யோசித்தாள்.

"சந்தேகம் இருக்கு ஆனா வரலாறு, சமூகவியல் பாடங்களில் இல்லை."

"அப்ப உனக்கு எதில் சந்தேகம்?"

"நேற்று நதியோட என்னவெல்லாம் செய்தாய்?"

"அதோ அவளே வாறாளே... நதி, நாம் இரண்டு பேரும் என்ன செய்தோம் என்று கேட்கிறாள் அகல்யா"

"சொல்லட்டுமா?" என்று பயம் காட்டினாள் நதிரா.

அவளிடமிருந்து பர்.'. பியூம் மணம் மிகவும் காட்டமாக இருந்தது.

"நேற்று நடந்ததைச் சொல்லிவிடேன்"

"இரண்டு பேரும் சேர்ந்து 'ஸ்க்ராபிள், ஆடினோம்" என்று அட்டகாசமாகச் சிரித்தாள்.

அகல்யாவுக்கு நதிரா சொன்னது ஆறுதலாக இருந்தது. ஆனால் அவள் எப்போது பொய் பேசுகிறாள், எப்போது நிஜம் என்று சொல்லுவது கஷ்ரம்.

"அந்தக் காட்சியைப் பார்த்தால் நீ பொறாமைப் பட்டு என் பின்னால ஓடி வந்துவிடுவேன் என்று சிறுபிள்ளைத்தனமான எண்ணம்! மடையன் நான்" என்று தலையில் அடித்துக்கொண்டு "இனிமேல் உன்னோடு நான் அந்தமாதிரித் தப்பாக நடந்துகொள்ளமாட்டேன். என்னை மன்னித்துக்கொள்" என்றான் ப்ரமோத்.

"என்னோடு தப்பாக நடந்துகொள்ளவில்லையே!" என்றாள் நதி.

"இவள் பேச்சை நம்பாதே அகல்யா. ரொம்ப ரொம்ப டீப்"

"என்ன நதி Thus Far? என்று மூக்கைத் தொட்டான். 'And No Further' என்று கையை உயர்த்தி அவன் கையில் தட்டினாள். அகல்யாவைத் தனியாக அழைத்த நதிரா.

"இருப்பது ஒன்றே ஒன்றுதான். அதை நாங்கள்தான் பாதுகாக்க வேண்டும் என்ன?"

அகல்யாவுக்கு அழுகை வந்தது.

**இன்பம் தொடரும்**

# மனதோடு மறந்த காதல்

## இவ்வாரச் சிறுகதை

**அச்யுதா அன்ரனியோய்**

மாலை வெயில் மனதிற்கு இன்பம் தரும் என்று சொல்வார்கள். றொண்சாவின் முகம் மாலை வெயிலை விட பிரகாசமாக மிளர்கிறது. அவளது சின்னச் சிரிப்புக் கன்னத்தின் மச்சம் மனதைக் கவரும் தோற்றம் இவளொரு அழகிய பட்டாம்பூச்சி. இந்த அழகிய பட்டாம்பூச்சி அன்று ஒரு மாலை நேரம் தனது இன்னுயிர்த் தோழியான சாளினியுடன் விளையாடிக் கொண்டிருக்கிறாள். அவளது வண்ண உடலைக் கண்டு வாசமுள்ள பூவில் தேன் குடிக்க ஆசைப்படுகிறான் கோபி. அன்று றொண்சா வீட்டிற்கு அருகே இருக்கும் சாலை வழியே கோபி வந்து கொண்டிருக்கிறான். எப்படியாவது றொண்சாவின் மனதில் இடம்பிடித்துவிட வேண்டும் என்பதுதான் அவனது ஆசை.

றொன்சாவோடு வந்த அவளது நண்பி சாளினியை கோபி அழைக்கிறான். சாளினி கோபியைப் பார்த்து "என்ன கோபி ஏன் என்னை அழைத்தாய்"

"ம்...ம்...சொல்லுகிறேன் சாளினி. ஆனா நீ அது தப்பா எடுக்கக் கூடாது" என்றான்.

"இல்லக் கோபி நான் தப்பா எடுக்கமாட்டேன் சொல்லு"

"அது வந்து சாளினி உனது நண்பி றொண்சா யாரையாவது விரும்புறாளா?"

"சீச்சீ... எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் அவள் யாரையும் விரும்பவே இல்ல கோபி".

"சரி நன்றி சாளினி நீ போ...."

சாளினியும் அவ்விடத்தை விட்டு சென்றாள்.

மறு நாள் காலை றொண்சாவும் சாளினியும் பாடசாலை சென்றுகொண்டிருந்தார்கள். கோபி தனது காதலை எப்படியாவது றொண்சாவிடம் சொல்ல வேண்டும் என்று அவர்கள் இருவர் பின்னாடியும் சென்று கொண்டிருந்தான் கோபி றொண்சாவின் ஊர்ப்பையன் என்பதினால் அவனைப்பற்றி ஓரளவுக்கு றொண்சாவுக்குத் தெரியும். அதனால கோபி ஏன் பின்னால் வருகிறான் என்று நினைத்தவாறு சட்டென்று திரும்பினாள் றொண்சா. "என்ன கோபி ஏன் எங்கள் பின்னால் வருகிறாய். நேற்று மாலை நீ சாளினியை அழைத்து என்னைப் பற்றி விசாரித்ததாகச் சாளினி என்னிடம் சொன்னாள். ஆனால் நீ கேட்ட கேள்வியின் அர்த்தம் எனக்குப் புரியவில்லை. ஏன் அப்படிக் கேட்டாய்?"



"அது... ஒன்றுமில்லை றொண்சா சும்மா தெரிஞ்சுக்கலாமே எண்டு கேட்டன்" என்று இழுவைப் பதிலாகக் கூறிவிட்டி மெதுவாக அவ்விடத்தை விட்டு விலகினான்.

அவன் தனது காதலை வெளிப்படுத்த வேண்டும் என்று செல்கின்ற நேரமெல்லாம் பூனையைக் கண்டு எலி பயப்படுவது போல பயப்பட்டான் கோபி. கோபி சொன்ன பதில் றொண்சாவுக்குப் புரியவில்லை. அவள் தனது நண்பி சாளினியிடம் கேட்டாள் "ஏனடி கோபி சொன்னது ஏதாவது உனக்குப் புரிகிறதா? என்று.

மறுநாள் பாடசாலை விடுமுறை தினம். றொண்சா தனது வீட்டு முற்றத்தில் இருக்கிற வேப்ப மரத்தில் ஊஞ்சல் கட்டி அதன் மேலிருந்து ஆடிக்கொண்டிருந்தாள். அப்போது அவள் நண்பி வருகிறாள். "என்னடி றொண்சா இன்று பாடசாலை விடுமுறை என்றதால ஊஞ்சல் ஆடிக் கொண்டு இருக்கிறியே".

"வாடி சாளினி உனக்கொரு விஷயம் சொல்லோணும்" றொண்சாவின் கண்கள் படபடவென அடித்தது. ஏதோ பெரிய இரகசியத்தை மறைத்து வைத்தது போல் அவளது முகத்தில் தெரிந்தது.

"என்னடி ஏதோ பெரிய இரகசியத்தை மறைக்கிற மாதிரி தெரியுது" நீ என் உயிர் நண்பி. ஆனால் உனக்குக் கூடத் தெரியாமல் ஒரு தப்பு பண்ணிட்டன்டி. நான் போனவாரம் அம்மன் கோயில் திருவிழாவுக்குச் சென்றன்தானே. அப்ப ஒரு பையனை என்னை அறியாமலே அவனை விரும்ப ஆரம்பிச்சிட்டன். நாங்க இந்த இரண்டு மாசமா உயிருக்குயிரா விரும்புறம். இந்த விஷயத்தை உனக்குச் சொல்லாம மறைச்சிட்டன். மன்னிச்சிடடி சாளினி"

"சரி பரவாயில்லை அதுதான் இப்பச் சொல்லிட்டியே" என்று சமாதானப்படுத்தினாள்.

சாளினி வீதியால் சென்றுகொண்டிருந்தாள். அவ்வழியே கோபி வந்தான். "சற்று நில் சாளினி"

"என்ன கோபி? எதுவா இருந்தாலும் சீக்கிரமாச் சொல்"

"சரி சரி நான் சொல்லுறன் நான்... உன் நண்பி றொண்சாவை விரும்புறன். அத நீதான் எப்படியாவது றொண்சாட்ட சொல்லி என்னையும் றொண்சாவையும் சேத்து வைக்கோணும். பிளீஸ் சாளினி...." என்று கேட்டான்.

"என்னை மன்னிச்சிடு கோபி என்னை அவ ஏத்துக்க மாட்டா. அவ ஏற்கெனவே ஒரு பையனை விரும்புறா. இந்த விஷயமே எனக்கு இப்பத்தான்தெரியும். அவள மறந்திடு கோபி" என்று கூறிவிட்டு அவள் சென்றாள். கோபி திகைத்து நின்றான். அவனது மனது சுக்குநூறாக உடைந்துவிட்டது. ஆனால் கோபியால் றொண்சாவை மறக்கமுடியவில்லை. அவளின் நினைவுகளை மட்டும் மனதில் சுமந்து கொண்டு காதலின் தோல்வியை நினைத்துத் தன்னையே நொந்துகொண்டு அவ்விடத்தைவிட்டு கால்போன போக்கில் சென்றுகொண்டிருந்தான்.

# பொன்மொழி



நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்! தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரம் ஆகும்.

சுவாமி விவேகானந்தர்




# பரியே சற்றுப் பரிவுகாட்டு

கே.வி. குணசேகரம்

காதலிப்பவர்கள் எக்கணமும் தாம் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேச வேண்டும் என நினைப்பார்கள். அப்படிச் சந்தித்துப் பேச முடியாதவர்கள் தமது காதலரை முழுமையாக ஒரு சில கணங்களேனும் பார்த்து ரசித்துவிடல் வேண்டுமென விரும்புவார்கள்.

இப்பாடல் காதல் கொண்ட ஒரு பெண்



தனது காதலனைப் பார்க்கத் தடையாக இருக்கும் அவனது வாகனமான குதிரையை இரந்து கேட்பது போலப் பாடலாசிரியர் பாடலைப் பாடியுள்ளார். அந்தப் பெண் தனது காதலனைக் கண்குளிரப் பார்க்க நினைக்கிறாள். ஆனால் வேகமாகச் செல்லும் குதிரை அவளது விருப்பத்தைப் பூர்த்தி செய்யவில்லை. அதனால் அவள் துன்பப்படுகிறாள்.

சங்ககாலத்தில் காதல் வசப்பட்டவர்களில் ஆண்கள் பொருள் தேடுவதற்காக வெளியூர்களுக்குச் சென்றுவிடுவார்கள். பெண்கள் தனிமையில் இருந்து அவர்களை நினைத்து வாடுவார்கள். இயற்கை அவர்களுக்குக் காமத்தையூட்டும் வகையில் இருக்கும். பறவைகள் தமது சோடிகளுடன் மரங்களில் இருந்து காதல் செய்யும். தும்பி போன்ற பூச்சிகள் பறந்து பறந்து காமலீலைகள் செய்யும். இதைக்காணும் காதலர்களுக்குத் தாமும் அப்படி காதலை அனுபவிக்க வேண்டுமென்ற உணர்வு உண்டாகும். அந்த உணர்வால் அவர்கள் தமது காதலரிடம் தூது செல்லப் பறவைகளையும் பூச்சிகளையும் அழைப்பார்கள். இவ்வாறு அழைப்பதைப் பல புலவர்கள் சுவையாகக் கூறியுள்ளனர். ஆனால் முத்தொள்ளாயிரத்தைப் பாடிய புலவர் காதலன் தனக்கு முன்னால் சென்றும் அவனைக் கண்டு மகிழ முடியவில்லையே என்று எண்ணித் தவிக்கும் ஒரு பெண்ணின் அவலத்தை மிகவும் சுவையாகச் சொல்கிறார்.

சங்ககாலப் புலவர்களின் பாடல்களை விளங்கிக்கொள்வது மிக மிகக் கஷ்டம். ஆனால் முத்தொள்ளாயிரப் புலவர் இலகுவில் விளங்கிக்கொள்ளக் கூடியனவாக இருப்பதோடு காதலின் சுவையை இரட்டிப்பாகக் கூறுகின்றன. உயிர்கள் அனைத்திற்கும் காதல் உண்டாகிறது. ஆனால் அதைப் பற்றி நினைப்பவர்கள் யாரும் இல்லை. ஆனால் புலவர்கள் தமது திறமையால் அதைக் கூறும்போது சிறிய ஒரு சம்பவமும் மலை போல உயர்ந்துவிடுகிறது. ஒரு காதலி தனது காதலனைக் காண விரும்புகிறாள். ஆனால் அது நடைபெறவில்லை. இது ஒரு சாதாரண நிகழ்வு. ஆனால் புலவர் அதைப் பெரிதாக்கி வாசிப்பவர்களின் மனதைக் கரைக்கிறார். அப்படிக் கரைக்கும் திறமை முத்தொள்ளாயிரப் புலவரிடத்தில் நிறைய இருக்கிறது.

# சிந்தியா பதில்கள்

✉ சிந்தியா! இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை அரசியல் ரீதியான நாடகமாகத்தான் தெரிகிறதே?

**சி.பஞ்சலிங்கம், மன்னார்.**

● அரசியல் இல்லாமல் எதுவும் இல்லை. மீனவர் விவகாரம் கூட அரசியலுக்கு அப்பாற்பட்டதல்ல. பொதுவாகவே சர்ச்சைக்குரிய விடயங்களில் அரசியல் செல்வாக்குச் செலுத்தப்படுவது இயல்பு.

✉ சமீபத்தில் தங்களைப் பாதிப்படைய வைத்த செய்தி ஏதாவது பற்றி?

**எச்.எம்.எம்.மஸ்னவீ, புத்தளம்.**

● கிழக்கு மாகாணத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டு இரண்டு தடவைகள் அவலப்பட்ட சுமார் 12 இலட்சம் பேர் மீண்டும் வறுமை நிலையை அடைவதற்கிடையில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தார்கள். அவர்களுக்கு உதவ, நிவாரணம் வழங்க, ஆறுதல் சொல்ல எடுக்கப்பட்ட முன்னெடுப்புக்கள் திருப்திகரமானதாக இல்லை.

எத்தனையோ புறக்கணிப்புக்கள், பொறுப்பற்ற போக்குகள், கவலையீனங்கள் ஆகியவற்றை இனங்கண்டு கொள்ள முடிந்தது. இவ்வாறு இனங்காணப்பட்டவர்களின் அரிதாரம் பூசப்பட்ட முகங்களை நினைத்துப் பார்க்கையில் ஆச்சரியமும், அதிர்ச்சியும் மேலெழுகிறது.

✉ பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளுக்கு சிந்தியாவின் அனுதாபச் செய்தி இல்லையா?

**எஸ்.அபிராமி, யாழ்ப்பாணம்.**

● மரணச் செய்தியில் முன்னணி அல்லது பின்னணி பார்த்து நான் அனுதாபப்படுவதில்லை. சக மனிதன் ஒருவரின் இழப்பு எந்நாளும் துயரமானதுதான்.

புலிகள் இருந்த காலத்திலேயே கொல்லப்படும் புலிகளுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் ஏனைய உறுப்பினர்களின் மரணத்துக்கோ, பொதுமக்களின் மரணத்துக்கோ ஊடகங்களும், புத்திஜீவிகளும் கொடுக்கவில்லை என்பதே கடுந்தொனியில் அப்போதே நான் விமர்சனத்திற்கு உள்ளாக்கியிருந்தேன் என்பதை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.

பார்வதி அம்மாவின் மரணம் பிரபாகரனின் தாயார் என்று பேசப்படுவதிலும் பார்க்க தாய்க்குச் சமனான ஒருவரின் இழப்பு என்றுதான் கருதுகிறேன்.

✉ சிந்தியா! பெண்கள் பிடிவாதம் பிடிப்பது ஏன்?

**த.நிர்மலா, மட்டக்களப்பு.**

● பெண்கள் என்றும் சொல்வதற்கு முன்னால் பிடிவாதம் பிடிப்பவர்கள் பற்றிய தகவல்களைச் சொல்கிறேன். பொதுவாகப் பிடிவாதம் பிடிப்பவர்கள் தன்நிலை அறியாதவர்கள், அதீத உரிமை கொண்டாடிகள், சற்று அதிகமாகச் சுயநலம் கொண்டவர்கள். தாங்கள் வெளிப்படுத்தும் அன்புக்கு இன்னொருவகை வடிவத்தை எதிர்பார்ப்பவர்கள்.

நிர்மலா நான் சொன்னதெல்லாம் பொதுவானவை. நீங்கள் கேட்ட கேள்விக்குப் பொருந்தினால் எடுத்துக்கொள்ளுங்கள்.

✉ சிந்தியா! காலையில் கனவு கண்டால் அது நடப்பதாகக் கூறப்படுகிறதே. அது நிஜமா?

**க.சோபிதன், வவுனியா.**

● கனவுகளைப் பற்றி சாத்திரம் சொல்லுமளவுக்கு எனக்கு அது போதாது. ஆனால் கேள்வி ஞானத்திலிருந்து சொல்வதானால் அதிகாலை மூன்று மணிக்கு முன்னர் காணுகின்ற கனவுகள் நடந்து முடிந்தவை. அதற்குப் பின்னர் காணுகின்ற கனவுகள் நடக்கப்போகின்றவை என்கின்றனர் கனவு ஆய்வாளர்கள். பகல் கனவு பற்றி ஆய்வு ஒன்றும் சொல்லவில்லை.

இரசாயன மாற்றம் ஏற்படுத்தும் பிம்பம் என்கின்றனர். மனிதன் காணும் கனவுகளைக் காட்சிகளாகப் பதிவு செய்வதற்கு ஆராய்ச்சிகள் நடப்பதாகச் செய்திகளில் படித்தேன். அந்த முயற்சி வெற்றிபெற வேண்டுமென்று விரும்புகின்றேன். அப்போது கண்ட கனவுகளைப் பொழுது போகாத வேளையில் போட்டுப் படிக்கலாம்.

✉ சிந்தியா! 2011 உலகக்கிண்ணத்தை எந்த அணி சுவீகரிக்கும் வாய்ப்புள்ளது. அல்லது எந்தெந்த அணிகள் அந்த இலக்கு நோக்கி முயற்சிக்கக் கூடும் என்பதைச் சொல்ல முடியுமா?.

**எஸ்.ரமேஷ், கண்டி.**

● உங்கள் கேள்வி ஒற்றைக் கேள்வியாக இருந்திருந்தால் திணறிப்போயிருப்பேன். இரட்டைக் கேள்வியாக இருப்பதால் தப்பித்தேன். 2011 வெற்றிக்கிண்ணத்தைத் தூக்குகின்ற வாய்ப்பு இந்திய அணிக்கு இருப்பதாகத் தற்போதைய கணிப்பீடு ஒன்று கூறுகிறது. அதேவேளை இலங்கை, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து தென்னாபிரிக்கா அணிகளும் சிறு வித்தியாசத்தில் பலம்பொருந்திய அணிகளாகக் களத்தில் இறங்கியிருக்கின்றன.

முதற் சுற்றுப் போட்டிகளில் கனடா, கென்யா, சிம்மாப்வே, பங்களாதேஷ் ஆகிய அணிகள் விளையாடுகின்ற விதத்தைப் பார்க்கின்றபோது மூன்றாம்தர நிலையிலேயே அந்த அணிகள் இன்னும் இருப்பது தெரிகின்றது.



# விரையும் தரகர்களுக்கு விலை போவார்களா வீரர்கள்

நடைபெற்று வருகின்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் தலையை நுழைத்து போட்டி நிர்ணய சதிகளில் ஈடுபடுவதற்கு பல்வேறு வழிகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி சர்வதேச கிரிக்கெற் பேரவையை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நான்கு நாடுகளும் இணைந்து நடாத்திவருகின்ற 10 ஆவது உலகக் கிண்ணப் போட்டிகள் கடந்த 19 ஆம் திகதி டாக்கா நகரில் மிகவும் கோலாகலமாக ஆரம்பமாகியிருக்கின்றது. இதன் இறுதிப் போட்டி எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் சூதாட்டக்காரர்கள் தலையிட்டு போட்டி முடிவுகளில் தீர்மானங்களை ஏற்படுத்தத் தீவிரமாக முயற்சித்து வருவதாகவும் அதற்காக போட்டிகளில் பங்குபற்றுகின்ற அனைத்து அணிகளினதும் முக்கிய வீரர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சித்து வருவதாகவும் ஏற்கெனவே சில வீரர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திய சூதாட்டக்காரர்கள் பெருந்தொகைப் பணம் தருவதாகக் கூறி சில முக்கியமான வீரர்களுக்கு மூளைச்சலவை செய்ய முயற்சித்தமைக்கான சில ஆதாரபூர்வமான தகவல்கள் வெளியாகியுள்ளது. ஏற்கெனவே, இலங்கை அணியின் மிக முக்கிய வேகப்பந்துவீச்சாளர் ஒருவருக்கும் சூதாட்டக்காரர்கள் விலைவீச முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இந்நிலையில், இப்பொழுது இந்திய, பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த சூதாட்ட முகவர்கள் சிலர் இலங்கை அணியின் வீரர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ள முயற்சி செய்ததாகவும் சிலர் நேரடியாகக் கொழும்பு வந்து திரும்பியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதையடுத்து உசாரடைந்திருக்கின்ற ஐ.சி.சி. தனது கழுகுப் பார்வையை செலுத்தி வருகின்றதுடன், போட்டிகளில் பங்குபற்றுகின்ற வீரர்கள் 'ருவிற்றர், ஈமெயில்,' போன்ற கண்காணிக்கக் கடினமான தகவல் பரிமாற்ற வழிமுறைகளை பயன்படுத்துவதற்கு தடை விதித்துள்ளது.

ஐ.சி.சி.யின் கடுமையான கட்டுப்பாடுகளையும் மீறி சூதாட்டக்காரர்கள் உள்நுழைவார்களா? அதற்கு வீரர்கள் விலைபோவார்களா? பெறப்படுகின்ற வெற்றிகளும் குவிக்கப்படுகின்ற ரண்களும் ஏற்கெனவே விலைபேசப்பட்டவையா? மூடிய அறைக்குள் நிர்ணயிக்கப்பட்டவையா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அவ்வாறு அமையுமாயின் ரசிகர்களுக்கு ஏமாற்றம்தான். மாறாக தங்களுக்கும் தங்கள் நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் வீரர்கள் விளையாடுவார்கள், குறுகிய நோக்கங்களுக்கு இடங்கொடுக்கமாட்டார்கள் என்பதே கிரிக்கெட்டையும், நாட்டையும் நேசிக்கின்ற ஒவ்வொரு ரசிகரினதும் நம்பிக்கையாகும்.

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வளர்ச்சியின்...

நம்மிடமிருக்கும் அறிவே நாம் பெருமைப்படவும் பாராட்டிக் கொள்ளவும் தக்கதுதானா? நம் அறிவால் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எதை முழுமையாக அறிந்திருக்கிறோம்? எந்த ஒரு சின்னஞ்சிறு துகளையும் பற்றி என்ன தெரியும் நமக்கு? மறுபக்கத்தில், இந்த அறிவு என்பது அதிகாரமாகவும், மனித சமத்துவத்துக்கு எதிரானதாகவும், அழிவுக்குரிய கருவிகளைத் தேடிக் கொள்வதாகவும், இவற்றின் காரணமாகவே மனிதகுல அழிவுக்கு வழிவகுப்பதாகவும் இருப்பதைக் கண்டுகொண்டிருக்கிறோம்.

அறிவும் அதன் விளைவான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுமே பல தேசங்களையும் பல இனங்களையும் அடிமைப்படுத்திய வரலாறு நமக்குத் தெரியும். ஐரோப்பியர்கள் தென்னமெரிக்கா முழுவதையும் அடிமை கொண்டது அறிவினால்தான் நிகழ்ந்தது. ஆபிரிக்காவிலிருந்து ஆயிரக்கணக்கானோர் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு அமெரிக்கக் கண்டத்திற்குக் கொண்டுவரப்பட்டு அடிமைகளாக்கப்பட்டது அறிவினால்தான். மேற்கத்தியர்களிடம் இருந்த நவீன கருவிகளுக்கான அறிவு கீழைத்தேசத்தவனிடம் இல்லாததால்தான் இவன் எளிதில் அவர்களிடம் அடிமைப்பட நேர்ந்தது. அதேபோல, வேதத்தையும் உபநிடதங்களையும் மனப்பாடமாக்கி வியாக்கியானம் செய்ய அறிந்து கொண்ட குழு, அந்த அறிவைப் பெற்றுக் கொள்ளாதவர்களை அடிமைகளாக்கியதும் அறிவோம்.

ஆயின், எளிதில் தோற்றுப்போய், எதிர்காலத்திற்காக யாரையோ எதையோ எதிர்பார்த்திருக்கும் நாம் எப்படி நம்மைப் புத்திசாலிச் சமூகம் என்று சொல்லிக் கொள்வது? நம் பாடழி வைத் தடுத்துக் கொள்ளத் தெரியாத நாம் எப்படி நம்மை அறிவுச்சமூகம் என்று சொல்லிக் கொண்டிருந்தோம்? நடந்து முடிந்த வரலாற்றில் அறிவும் அதனூடான செயற்பாடுகளும் நம் தரப்பில் இல்லாமல் போனதுதானே அவல முடிவாக அம்பலப்பட்டது.

அதுமட்டுமல்ல, உணர்ச்சிகரமான ஆவேசத்தில் கூட்டப்படும் மக்கள் திரளிடமிருந்து அறிவு பறிக்கப்பட்டு விடுகிறது. உணர்ச்சிகரமாகக் குறுக்கித் தரப்பட்ட நியாயங்களுக்கப்பால் எதையும் யோசிக்கவிடாமல் செய்யப்படுகிறார்கள். அவர்களைத் திரள வைத்த சக்திகளிடம் தம்மை ஒப்படைத்து கோஷங்களினூடாக பகையுணர்வை வளர்த்துக் கொள்கிறார்கள். 1984இல் டெல்லியில் ஆயிரக்கணக்கில் சீக்கியர்கள் கொல்லப்பட்டமை, 2002ல் குஜராத் படுகொலைகள், 1983இல் ஜூலைப் படுகொலைகளுக்கெல்லாம் பயன்பட்டது இந்தக் கும்பல் எழுச்சி மனோபாவமே. கூட்டமாகத் திரண்டிருக்கையில் உயிரழிவு பற்றியோ மனித அறங்கள் நீதிகள் பற்றியோ சிந்திக்க முடிவதில்லை.

இதற்கு வெளியே இவர்களை மீறிச் சென்று நன்மை தீமைகளை அலசிப் பார்க்க, மனிதாபிமானத்துடன் சிந்திக்க முயலும் எவரும் இந்தத் திரளுக்கு எதிரான துரோகிகள் எனவே காட்டப்படுவார்கள். இரண்டாம் உலகப் போருக்கு முன் ஜெர்மானிய மக்கள் காட்டியதும், கடந்த இரு தசாப்தங்களாக நம்மவர்கள் காட்டியதும் இதையே என்பதை இன்று யாரும் ஒப்பிட்டுப் பார்த்துப் புரிந்துகொள்ள முடியும்.

வரலாற்றின் அந்தக் குரூர நாடகத்தையே நாங்களும் திரும்ப நடித்தோம். நாடகம் முடிந்துவிட்டது. இனி நாம் அதுபற்றிப் பேச வேண்டும். வீழ்ச்சி ஏன் என்று விமர்சனம் செய்து அறிந்து மீள வேண்டும். அதைவிடுத்து தொடர்ந்தும் அந்த நாடகத்தையே நடத்தும் பாவனைகளைப் பண்ணிக் கொண்டிருப்பது, நம்மை மீளவிடாமலடிக்கும் அறியாமையும் வஞ்சனையுமே ஆகும்.

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இலங்கையில்...

அண்மைக்காலமாக சமூகம் சீரழிகின்றது, கலாசாரம் சின்னாபின்னமாகிறது என்று பல தரப்பினரும் தமது கவனத்தை இவ்விடயம் தொடர்பாக செலுத்திக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. வெறுமனே மேடைப் பேச்சுகளாலும், போகும் இடங்களில் ஒப்பாரிகளாலும் இவற்றை கட்டுப்படுத்திவிட முடியாது. மாறாக எமது சமூகத்தின் மீதான மற்றவர்களின் அருவருப்பான பார்வையை அதிகரித்துக் கொள்ளவே வழிவகுக்கின்றது.

தற்போது அதிகரித்து வருகின்ற பாலியல் தொடர்பான பிரச்சினைகளினால் எமது கலாசாரப் பண்பாடுகளுக்கு சாவுமணி அடிக்கப்பட்டு விடவில்லை. யுத்தம் முடிந்த நிலையில் கட்டுப்பாடின்றி நுழைக்கின்ற மேற்கத்தைய கலாசார மோகத்தினால் எம்முடைய இளம் சந்ததி கொஞ்சம் தடுமாறிக் கொண்டிருக்கின்றது. அல்லது தடுமாறுவதற்கான வாய்ப்புகள்? அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அவ்வளவுதான்.

புலம்பெயர் நாடுகளில் நீண்ட காலம் வாழ்ந்துவிட்டு வருகின்ற உறவுகளின் உடை, உணவு, பழக்கவழக்கங்களினால் இளம் சந்ததியினர் கவரப்படுகின்றனர். அந்த வாழ்க்கை முறையில் மகிழ்ச்சி குடியிருப்பதாக கற்பனை பண்ணிக் கொண்டிருக்கின்றனர். இதனாலேயே பெரும்பாலான தவறுகள் நடைபெறுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இது ஒன்றும் நிவர்த்தி செய்யப்பட முடியாத விடயங்களல்ல.

வெறுமனே ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பதையும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியை தூற்றிக் கொண்டிருப்பதையும் விடுத்து எமது சமூகத்திற்கு பாலியல் பற்றிய ஓர் தெளிவு ஏற்படுத்தப்பட வேண்டும். மேடைகளில் பேசுபவர்கள், பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுப்பவர்கள் எல்லாம் வெறுமனே குற்றச்சாட்டுக்களை முன்வைக்காது சமூகத்துக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் செயற்திட்டங்களை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். ஒரு தாய், பருவ வயதை அடைகின்ற தனது பிள்ளைக்கு பாலியல் பற்றிய விடயங்களையும், அதில் இருக்கின்ற நன்மை, தீமைகளையும் எமது பண்பாட்டு நிலைப்பாடுகளையும் தெளிவுபடுத்த வேண்டும். ஊடகங்கள் ஊதாரித்தனமான கருத்துக்களை பரப்பி இருக்கின்ற நிலைக்கு எண்ணெய் ஊற்றாது, உருப்படியான விளக்கங்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்த வேண்டும். அதிகாரங்களில் உள்ளவர்கள் அதிருப்திகளை மட்டும் வெளியிடாது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

தெளிவு ஏற்படுத்தப்படுமாயின் எமது சமூகத்திற்குள், எவர் வருகிறார்கள், என்ன ஊடுருவுகின்றது என்பது பற்றியெல்லாம் நாம் அலட்டிக் கொள்ளத்தேவையில்லை. எதை, எவ்வாறு, எங்கு பயன்படுத்த வேண்டும், எமது நிலை என்ன?, நாம் யார்? என்பதையெல்லாம் எமது சமூகம் புரிந்து கொள்ளும்.

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இன்றைய இலக்கி...

அலட்டல், பிதற்றல் இல்லாமல் சுற்றி வளைத்துச் சோதிக்காமல் 'சுளீர்' என வாசகர் உள்ளத்தில் படியும்படியாக எழுதுவது செங்கை ஆழியானின தனி "ஸ்பெஷாலிட்டி". இவரின் எழுத்துநடை சில இடங்களில் வெற்றிலைக் கொழுந்தாய் குழைகிறது. சில இடங்களில் தீக்கொழுந்தாய் சுவாலை விடுகிறது. விடுதலைப் பாதையில் தொடங்கிய நெடும் பயணம் இந்நிகழ்ச்சித் தொடருக்கு ஊன்று சக்தியாக விளங்கிய மக்கள் எழுச்சியின் பெருமை சிறுமைகள் சாதனை சோதனைகள்-தவறு திரிபுகள் இவற்றின் வடுக்களையும் எண்ணச் சுமைகளையும் இளநெஞ்சிலே தாங்கி தமிழ் இலக்கிய உலகில் நுழைந்தவர் செங்கை ஆழியான். (தொடர்ச்சி அடுத்த வாரம்...)




**எகிப்தைப் போன்று ஆர்ப்பாட்டம் நடத்த முயற்சிப்பின் துப்பாக்கி தான் பதில் சொல்லும்.**

-அமைச்சர் மேர்வின் சில்வா.

"இதயத்தின் நிறைவினால் வாய் பேசும்... எண்டு வேதவசனம் சொல்லுறமாதிரி உந்த மனுசன்ர நெஞ்சுக்கை கிடக்கிறதெல்லாம் சில நேரங்களில, உப்பிடித்தான் ஒவ்வொண்டா அம்மணமாகக் கொட்டுப்படுகிறது. உவரைப் போலத்தானே எகிப்திலையும் முபாரக் அங்கத்தேயச் சனத்தை வெருட்டி; உருட்டி வைச்சிருந்தவர். கடைசியில என்ன நடந்தது இப்ப. அது பண்டிக்காய்ச்சல், பறவைக்காய்ச்சல் பரவின மாதிரி ஊருலகமெல்லாம் பரவுறதைப் பாத்திட்டுத்தான் போல இஞ்சையும் அப்பிடி வந்தாலுமெண்ட பயத்தில துவக்கைக் காட்டி சிங்களச் சனத்துக்குத் தூசுதட்ட வெளிக்கிடுறார் போலக் கிடக்குது. ஏற்கெனவே துவக்கைக் காட்டி வெருட்டினதுகள் எல்லாம் இப்ப சனத்துக்கு நடுவில துடக்காப் போய் கிடக்கிறது தெரியாதாமோ உவருக்கு? போரால, வெள்ளத்தால அல்லற்பட்டு நிற்கிற சனத்துக்கு முன்னால உப்புடி வெருட்ட வெளிக்கிட்டா சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த மாதிரியெல்லோ நடக்கப்போகுது. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கென சனங்கள் எல்லாம் ஆவேசம் கொண்டு வெளிக்கிட்டுதுகளெண்டால் துப்பாக்கியாவது... தும்புக்கட்டையாவது... எல்லாத்தையும் தூள்பரத்திப் போட்டுத்தான் விடுங்கள் கண்டியளே!"

**வாழ்க்கை சிறப்பானதாக அமைவதற்குத் தம்பதியர் மனம்விட்டுச் சிரிக்க வேண்டும்.** -அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி தெரிவிப்பு.

"நீங்கள் சிரிக்கவிட்டாத்தானே நாச்சியார் நாங்கள் சிரிக்கிறதுக்கு. நீங்கள் தயாரிக்கிற குண்டுகளால ஊருலகத்திலயெல்லாம் கணவனையிழந்த பெண்களும், தாரத்தையிழந்த தபுதாரர்களும்தானே மிஞ்சிப்போய்க்கிடக்குதுகள். ஆப்கானிஸ்தானிலையும், ஈராக்கிலையும் கொஞ்சநஞ்சமே உப்பிடிக்கிடந்து அழுகுதுகள்; அந்தரிக்குதுகள்? ஏன் கனக்க வேண்டாம். எங்கட நாட்டை எடுத்துக்கொள்ளுங்கோவன். வன்னியில சண்டை நடக்கேக்கை உங்கட நாடும்தானே உதவிசெய்தது. உந்த உதவி இஞ்சை எத்தனை தம்பதியினரைப் பிரிச்சுப் போட்டுதெண்டு உங்களுக்குத் தெரியுமே? நாங்கள் சிரிச்சு எத்தனை நாளாச்சுது எண்டது எங்களுக்குத் தெரியாத நிலையில இருக்கிறம். அதுக்குள்ள நீயென்னடி பிள்ளை சிறப்பாயிருக்கிறதுக்குத் தம்பதியரெண்டும் தவிடு புண்ணாக்கெண்டும் கதைக்கிறாய். சும்மா பேசாமல் நீ உன்ர பாட்டில கிட."

**கொழும்பில் வான்பரப்பில் தூசுப்படலம் அதிகரிப்பு.**

-இலங்கை சுற்றாடல் வள அமைச்சு தெரிவிப்பு.

"வன்னியில சண்டை நடக்கேக்கை இந்தா புலியளைப் புடிக்கிறம். பொதுமக்களை மீட்கிறமெண்டு சொல்லிக்கொண்ட கழிவுகெட்ட குண்டுகளை நாலாபக்கத்தாலும் கவிட்டுக்கொட்டி வெடிக்கப்பண்ணினதால அதிலயிருந்து எழும்பின கந்தகப் புகையள், நஞ்சுத் தூசுகள் எல்லாம் ஒண்டாச் சேர்ந்து காத்தோடை அள்ளுப்பட்டுப்போய் கொழும்பு வான்பரப்பில கூடுகட்டியிருக்குது போலக் கிடக்குது. இனி மழைக்காலம் மழைபெய்ய உந்தத் தூசுகளெல்லாம் மழைத்தண்ணியோடை கீழவந்து கிணறுகள், குளங்களில விழப்போகுது கண்டியளே. உதால எவ்வளவு நோய்த்தாக்கம் வரப்போகுது தெரியுமே. உந்தச் சண்டையொண்டு வந்ததால இப்ப எல்லாருக்கும் சாக்காடாத்தான் கிடக்குது பாருங்கோவன்."

# இந்தவாரம் உங்கள் பலன்

(24.02.2011 தொடக்கம் 02.03.2011 வரை

ஆதினி

**மேடம்**– நன்மையான வாரம். தொழிலில் இருந்து வந்த தடைகள் நீங்கி இலாபம் கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் இடம்பெறும். இனசனபந்துக்கள் கூடி மகிழ்வார்கள். நினைத்த காரியங்கள் இலகுவில் நிறைவேறி மகிழ்ச்சியைத் தரும். நீண்ட நாட் கனவு நிறைவேறும். சகோதர வழியால் சுபச்செலவொன்றிற்காகப் பணம் செலவிடப்படும். தடைப்பட்டிருந்த பணம் வந்துசேரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உதவுவர். மாணவர்களுக்கு நன்மையான வாரம். அரசியலில் உள்ளோர் போற்றப்படுவார்கள். விவசாயிகளும் வியாபாரிகளும் முதலீடுகளால் இலாபமடைவர். அதிர்ஷ்ட நாள் வெள்ளி.

**இடபம்**– தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. நினைத்த காரியங்கள் சிறுதடையின் பின் நிறைவேறும். பணம் வந்தாலும் உடன் செலவாகும். கடன்பட வேண்டியநிலை உருவா–கும். குடும்ப உறுப்பினரின் சுபநிகழ்வொன்றிற்காக அதிக பணம் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும். சமூகத்தால் மதிக்கப்படுவீர்கள். மேலாளர் உதவுவார்கள். பெரியோர்கள் மதிப்பார்கள். புகழ் அதிகரிக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மாணவர்கள் உற்சாகமாகக் கற்பர். அரசியலில் உள்ளோர் அவதானமாகக் கடமை செய்யவும். வியாபாரிகளும் விவசாயிகளும் எதிர்பார்த்த இலாபத்தை அடைவர். அதிர்ஷ்ட நாள் சனி.

**மிதுனம்**– மனமகிழ்வுடன் சகல காரியங்களைச் செய்தாலும் தடையும் தாமதங்களும் வந்து அச்சுறுத்தும். குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் தோன்றி மறையும். பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய வாரம். மேலாளருடன் முரண்பாடு ஏற்படா வண்ணம் காத்துக் கொள்ளவும். பணவிடயத்தில் அடிக்கடி பிரச்சினைப்படுவீர்கள். நண்பர்கள் உறவினர்கள் உதவமாட்டார்கள். மாணவர்களுக்குக் கல்வியில் வெறுப்பு உண்டாகும். பெற்றோர் கவனமெடுத்தல் வேண்டும். அரசியலில் உள்ளோர் அலைச்சற்படுவர். விவசாயிகளும் வியாபாரிகளும் எதிர்பார்த்த இலாபத்தை அடையமாட்டார்கள். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

**கடகம்**– தொழில் நிலையில் அதிக கவனம் எடுக்கவும். பொருள் இழப்பு, நட்டம் என்பன வார முற்பகுதியில் உண்டாக வாய்ப்புண்டு. போட்டிகளில் வெற்றி கிடைப்பது அரிது. நினைத்த காரியங்கள் தடைப்படும். பணம் தாராளமாகப் புழங்கினாலும் வரவுக்கதிகமான செலவு ஏற்படும். குடும்பத்தில் சந்தேகத்தாலும், பணவிடயத்தாலும் சிக்கல்கள் உருவாகும். வீண்வார்த்தைப் பிரயோகத்தால் நிலைமை மோசமடையும். அவதானம் தேவை. மாணவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். அரசியலில் உள்ளோர்களும் பிரயத்தனப்படுவர். விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் தடைகள் ஏற்படும். அதிர்ஷ்ட நாள் சனி.

**சிங்கம்**– சோம்பல் காரணமாகத் தொழி லில் சிறு சிறு பிரச்சினைகளும் நட்டமும் உண்டாகும். நினைத்த காரியம் ஒன்று தடைப்பட்டு மன நிம்மதியைக் குறைப்பதோடு கவலையையும் தரும். நண்பர்கள் சந்தேகத்துடன் பார்ப்பர். இனசனபந்துக்களால் முரண்படுவர். குடும்பத்தில் பணப்பிரச்சினை காரண–மாக முரண்பாடுகளும் சண்டைகளும் வரும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பணத்தட்டுப்பாடு உண்டாகிக் கடன்பட நேரிடும். குடும்ப உறுப்பினர் ஒருவரின் உடல்நலத்தில் கவனம் எடுக்கவும். மாண–வர் சோம்பலால் கெடுவர். அரசியலில் உள்ளோரின் முயற்சிக்கேற்ப பலன் கிடைக்கும். விவசாயிகளும் வியாபாரிகளும் அவதானமாக இருக்கவும். அதிர்ஷ்ட நாள் ஞாயிறு.

**கன்னி**– தொழிலில் கவனக்குறைவால் நட்டமடைய வேண்டிவரும். பணவிடயத்தில் எதிர்பார்த்த பணம் கிடைப்பது கஷ்டம். நினைத்த காரியம் பல தடங்கல்களுக்குப் பின் நிறைவேறினாலும் பூரணத்துவம் அடையாது. நண்பர்கள் உறவினர்களின் உதவி மனநிம்மதியையும் மகிழ்ச்சியையும் தரும். கொடுக்கல் வாங்கலில் அவதானமாக இருக்கவும். இழப்பு ஏற்படலாம். ஏதாவது சந்தேகமேற்படும். காரணமின்றிப் பயம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் பின்தங்குவர். அரசியலில் உள்ளோர் ஏமாற்றப்படுவர். விவசாயிகளும் வியாபா–ரிகளும் புதிய முதலீடுகள் செய்வதைத் தவிர்க்கவும். அதிர்ஷ்ட நாள் புதன்.

**துலாம்**– நண்பர்களால் இவ்வாரம் முழுவதும் தொல்லைகள் வந்து கொண்டிருக்கும். தொழிலில் கடின முயற்சி எடுப்பீர்கள். பணம் ஓரளவு தட்டுப்பாட்டின்றிப் புழங்கும். குடும்பத்தில் நிலவிய மகிழ்ச்சி வார இறுதி நாட்களில் குறைந்து நிம்மதியைக் கொடுக்கும். வெளிவிட்ட செய்தி ஒன்று மகிழ்ச்சியைக் கொடுக்கும். சுபச்செலவையும் உண்டு பண்ணும். தந்தை வழியால் நற்செய்தியும் பணமும் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். மாணவர்கள் உற்சாகமாகக் கல்வி கற்பர். அரசியலில் உள்ளவர்களுக்குச் சிறிது மனக்குழப்பமும் உண்டாகித் தீரும். விவசாயிகளும் வியாபாரிகளும் முதலீடு செய்யும்போது அவதானமாக இருக்கவும். அதிர்ஷ்ட நாள் சனி.

**விருச்சிகம்**– பயம் காரணமாகத் தொழிலில் குழப்பமடைவீர்கள். மனதில் இனம்புரியாத ஒரு பயம் தோன்றி வாட்டும். பொருளா–தார நிலையில் மாற்றமில்லை. வரவுக்கு மிஞ்சிய செலவு உண்டாகும். ஒரு நிகழ்வுக்காகக் கடன்பட வேண்டிய நிலை உருவாகும். குடும்பத்தில் தோன்றும் சிறுசிறு சச்சரவுகள் பெரிதாகி மனதை வாட்டும். இனசன பந்துக்கள் வெறுப்பைக் காட்டுவர். தேக நலம் பாதிப்படையாது. தெய்வ வழிபாட்டில் மனம் நாட்டம் கொள்ளும். மாணவர்கள் சோம்பலால் நல்ல வாய்ப்புக்களைத் தவறவிடுவர். அரசியலில் உள்ளோர் மனம் குழம்புவார்கள். விவசாயிகள் எதிர்பார்த்த இலாபத்தை அடைச் சிரமப்படுவர். அதிர்ஷ்ட நாள் புதன்.

**தனுசு**– பொறுமையுடன் நடந்து தொழிலில் இலாபம் அடைவீர்கள். தொழிலில் பகைவர்களால் தொந்தரவு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்ப உறுப்பினர்கள் மகிழ்வாக நடந்து கொள்வார்கள். வரவுக்கேற்ற செலவுகள் உண்டாகும். இனசன பந்துக்கள் கேட்ட உதவிகளைச் செய்வார்கள். இவ்வாரம் முழுவதும் பொறுமையைக் கடைப்பிடித்துச் செய்யும் காரியங்களில் வெற்றி காண்பீர்கள். வார இறுதியில் பொருள் வந்துசேரும். மாணவர்களின் முயற்சியில் தடைகளும் தாமதங்களும் உண்டாகும். அரசியலில் உள்ளோர் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். விவசாயிகளும் வியாபாரிகளும் முதலீடு செய்வதில் கவனம் செலுத்தவும். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

**மகரம்**– முன்பு செய்த செயலை நினைத்துப் பயப்படுவீர்கள். தொழிலில் மேன்மையான நிலை ஏற்படும். மேலாளர்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும். இனசனபந்துக்கள் தாராளமாக உதவுவர். தேவைக்கேற்ப பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்ப உறுப்பினர்கள் அனுசரித்து நடப்பார்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். எதிர்பார்த்த நற்செய்தி வார இறுதியில் வந்து சேர்ந்து மகிழ்ச்சியைத் தரும். மாணவர்கள் உற்சாகமாகக் கல்வி கற்பர். அரசியலில் உள்ளோர் நினைத்ததைச் சாதிப்பர். விவசாயிகளும், வியாபாரிகளும் நம்பிக்கையுடன் முதலீடு செய்வர். அதிர்ஷ்ட நாள் வெள்ளி.

**கும்பம்**– தொழிலில் உண்டாகும் சில பிரச்சினைகள் குறித்துக் கவலைப்படுவீர்கள். நினைத்த காரியங்கள் நினைத்தவாறு நடக்காமையால் வெறுப்பும் விரக்தியும் உருவாகும். பகைவர்கள் உங்களைத் தாக்கத் திட்டமிடுவர். எனினும் பெரிதாக அவர்களால் எதையும் செய்ய முடியாது. வார இறுதி நாட்களில் பணவரவு அதிகரிக்கும். தொழிலில் இருந்து வந்த மந்தநிலை நீங்கும். சகோதரவழியால் உதவிகள் உண்டாகும். தெய்வ வழிபாட்டில் மனம் நாட்டம் கொள்ளும். மாணவர்களுக்கு மத்திமமான பலன் அரசியலில் உள்ளோர் மனமுறிவடைவர். விவசாயிகளும் வியாபரிகளும அவதானமாக நடக்காவிட்டால் நட்டம் உண்டாகும். அதிர்ஷ்டநாள் செவ்வாய்.

**மீனம்**– – தொழிலில் இலாபமடைவீர்கள். உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ் வொன்றிற்காகப் பிரயாணம் செய்ய வேண்டிவரும். தெய்வ வழிபாட்டில் மனம் நாட்டம் கொள்ளும். நினைத்தவாறு பணம் வந்துசேரும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி நடந்தேறும். குடும்பத்தினருக்கு அன்பளிப்புப் பொருட்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். மகிழ்ச்சியும் நெருக்கமும் அதிகரிக்கும். மனைவி வழியால் உதவிகள் உண்டு. மாணவர்கள் குதூகலத்துடன் கல்வி கற்றுச் சாதனை செய்வர். அரசியலில் உள்ளோர் சாதுரியமாகக் கடமை செய்வர். விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
– காதில பூ கந்தசாமி –

**வணக்கமுங்கோ. போனவாரம் கரட்டியாரை நான் பேட்டி கண்டதை ஆடிக்கு ஒருக்கால், அமாவாசைக்கு ஒருக்கால் பேப்பர் படிக்கிற பாட்டுவாத்தியார் பார்த்துப்போட்டாருங்கோ.**

**பார்த்தால் மனிசன் சும்மா இருப்பாரோ. தன்னையும் ஒருக்கால் நாலு கேள்வியைக் கேட்டு ரீ இன்டக்ஷன் பண்ணச் சொல்லுறாருங்கோ.**

**எனக்கு என்னங்கோ போச்சு... யாரைப் புடிச்சாலும் வாயைக் கிளறி நாலு விசயத்தைப் பிடுங்கி உங்களுக்குச் சொல்லுறது தானுங்கோ. சரி துவங்குங்கோவன் எண்டு நீங்கள் சொல்லுறது புரியுதுங்கோ.**

**கா.பூ:-** என்ன பாட்டு வாத்தியார், அந்தக் காலத்தில ரேடியோவில ஒரு கலக்குக் கலக்கினியல் பிறகு ஆளையே காணமுடியவில்லையே. எங்க போனியள். என்ன செய்தீங்கள்.

**பாட்டு:-** நீர் கேக்கிற கேள்வியைப் பார்த்தால் நான் என்னவோ நாட்டை விட்டு ஓடினமாதிரியும், ஒழிச்சு இருந்த மாதிரியெல்லோ சொல்லுறியள். நான் நாட்டைவிட்டு ஓடயில்லை தெரியுமோ. சிங்கமும் புலியும் சண்டை பிடிக்கேக்க இடையில அகப்பட்டு பல குஞ்சு குருமான்கள் மண்ணோட மண்ணாகப் போயிட்டுதுகளுங்கோ.

அப்படிப் போனவையளின்ட விபரங்களும் இல்லை. போனவைக்காக ஒரு பதிவும் இல்லை. மனிசன் செத்தாலும், மிருகம் செத்தாலும் யாரும் அதைக் கணக்கில எடுக்க இல்லையுங்கோ.

அந்தச் சிங்கம்புலி சண்டைக்காலத்தில நானும் அகப்பட்டிருந்தால், நீங்கள் நான் நாட்டைவிட்டு ஓடிப்போயிட்டேனோ இல்லை செத்து மண்ணுக்குள்ள போயிட்டேனோ எண்டு யாருக்கும் தெரிஞ்சிருக்காதெல்லோ. அப்படி எதுவும் நடக்கக் கூடாதெண்டுதான் நான் சிங்கமும் புலியும் அடிபடேக்கை நான் ஒதுங்கி இருந்துபோட்டன். அதாலைதான் என்ர தலை தப்பிக் கிடக்குது எண்டு நினைக்கிறேனுங்கோ.

**கா.பூ:-** ஆடின காலும், பாடின வாயும் சும்மா இருக்காதெல்லோ. எப்பிடி நீங்கள் மட்டும் விதிவிலக்காக இருந்தியள்.

**பாட்டு:-** விதியும் இல்லை. விளக்குமில்லை. நாட்டு நடப்புக்களையும், நடந்த அல்லது நடந்து கொண்டிருக்கிற அநியாயங்களையும் கேள்விப்படேக்கையும் என்ர காலும் ஆடுச்சுது. என்ர வாயும் பாடிச்சுது. என்ர கெட்டகாலம் நான் ஆடினாலும், பாடினாலும் வெளியால தெரியல்லை.

எல்லாம் ஊமை கண்ட கனவு மாதிரி இருக்குது.

**கா.பூ:-** உங்கட கதையைக் கேட்டால் எனக்கே தலையைச் சுத்துது. என்ன பாட்டுவாத்தியார் விளக்கமாகச் சொல்லுங்கோவன்.

**பாட்டு:-** எதைச் சொல்லச் சொல்லுறீர், எல்லாம் வடிவேலுவின்ர பகிடி மாதிரியெல்லோ இருக்குது...

"வரும் ஆனால் வராது" எண்டமாதிரி புலியை அழிச்சிட்டினம் எண்டிச்சினம் பிறகு இல்ல இல்ல புலிகள் இருக்கினம் எண்டினம்.

அப்பேக்கப் புலிகள் இந்தியாவுக்குள்ள ஊடுருவினம் எண்டு சொல்லேக்க சாச்சா நாங்கள் கடலில எல்லாம் கெயாபுல்லாத்தான் இருக்கிறம் எண்டிச்சினம். இப்ப மூண்டு பிரிவாக பயிற்சி எடுக்கினம். முக்கியஸ்தர்களை முடிக்கப் போகினம் எண்டு குய்யோ முறையோ எண்டு கத்தினம்.

பிடிபட்டவையைத் தரோவாக தடவியும் விசாரிச்சும் தான் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கினம் எண்டிச்சினம். இப்ப அவையின்ர விபரத்தை எடுக்கினம் எண்டினம்.

சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு இருக்குது. யுத்தத்துக்குப் பிறகு எல்லாம் கிளியர்கட்டாக நடக்குது எண்டிச்சினம். இப்ப, என்ன பிரச்சினை எண்டாலும், இராணுவத்திட்ட வாங்கோ எண்டினம்.

உப்பிடியே சொல்லிக்கொண்டிருந்தால் நீரும் வாயைப் பிளந்து கேட்டுக்கொண்டிருப்பீர். ஏன் உமக்கு உதெல்லாம் தெரியாதோ. இல்லாட்டில் தெரிஞ்சும் தெரியாதமாதிரி பொலிரிக்ஸ் பண்ணுறீரோ. ஏதோ புதுக்கதை சொல்லுமாப்போலை கேட்டுக்கொண்டிருக்கிறீரோ.

**கா.பூ:-** அண்ண என்ன இது யார் மேலையோ வாற கோபத்தைக் கடைசியில என்மேல காட்டுறீங்கள். அப்படியெண்டால் நீங்களும் பொலிடிக்ஸாத்தானே பேசுறீயள்.

அண்ணை ஒரு காலத்தில கத்தியைத்தீட்டி பட்டது தெரியும்தானே. இனியாச்சும் புத்தியைத்தீட்டுவம் எண்டு தான் யோசிக்கிறன். அதைப்போய் பொலி ரிக்ஸ் அது இதெண்டு போட்டு தாக்குறியளே. சரி இனி அடிக்கடி சந்திச்சுக் கொள்ளுவம் ஓகே... பாய், எண்டு தப்பி வந்தனுங்கோ.

யாவும் கலப்படமற்ற கற்பனை

# ஆகாயத்தில் பறந்த முதல்வர்

## உலகை வியக்க வைத்தவர்கள்

வீட்டினுள்ளே நடத்திய சோதனை தான் இது. "இதைவிடப் பெரியதாக ஒரு துணிப்பையைத் தயாரிப்போம். வெட்ட வெளியிலே இச்சோதனையைச் செய்து பார்ப்போம்." என்று தீர்மானித்தார்கள், மான் கோல்.'.பியர் சகோதரர்கள்.

தொடர்ந்து புகை உருவாக்கும் ஒரு கணப்பையும் அதோடு இணைக்க ஒரு பெரிய துணிப்பையையும் உருவாக்கினார். கணப்பில் நெருப்பு மூட்டிப் புகை உண்டாக்கித் துணிப்பையில் நிரம்பும்படி செய்தார்கள். கணப்பு எரிந்து தொடர்ந்து புகை உண்டாக்கிக் கொண்டிருக்க, துணிப்பை



பலூன் ஆகாயத்திலே எழுந்தது. சகோதர்களுக்கு மகிழ்ச்சி.

"அது கீழே வரவே வராதா?" என்று கேட்டார் எட்டினி,

"நெருப்பு அணையும் வரை, அந்தப் பலூன் கீழே இறங்காது," என்றார் ஜோசப்.

இதன் பிறகு அவர்கள் இன்னும் பெரிய துணி பலூனைத் தயாரித்து ஆகாயத்திலே மிதக்க விட்டார்கள். இதைக் கண்ட மக்கள் "அதிசயம்...! நம்ப முடியாத ஆச்சரியம்!" என்று வியந்தார்கள்.

மான்கோல் .'. பியர் சகோதரர்களின் ஆகாயத்தில் மிதக்கும்' புகைப்பை'யைப் பற்றிய செய்தி பிரான்ஸ் முழுதும் பரவிப் பரபரப்பை ஏற்படுத்தியது.



(வியப்புக்கள் தொடரும்...)

Regd. as a News paper at the G.P.O.(QD/124/NEWS/2010)



## பணமரம்

ஒருவர் வீட்டில் அல்ல எல்லோர் வீடுகளிலும் இந்த மந்திரம் தான். இப்படி தங்கள் பிள்ளைகளைத் திட்டித் தீர்க்கும் பெற்றோர்கள். பணம் காய்க்கும் மரத்தை நேரில் கண்டால் வாயை பிளப்பார்கள். அவுஸ்திரேலியாவில் இவ்வாறு பணம் காய்க்கும் மரம் ஒன்று இருக்கிறது என்றால் நம்புவீர்களா? ஆனால் அது உண்மையான காசு மரம் அல்ல. நிஜத்தில் இங்கு பணம் காய்க்கவில்லை. அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த வங்கியொன்று மரம் ஒன்றை பணத்தால் அலங்கரித்துள்ளது. அந்த மரமுள்ள பாதையால் கடந்து செல்பவர்களது பிரதிபலிப்பு எந்த விதத்தில் அமைகின்றது என்பதை அவதானிப்பதாக குறித்த வங்கி இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கின்றது. இந்த மரத்தில் 5 பில்லியன் டொலர் பற்றுச்சீட்டுக்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் வங்கிக்கு பணம் கட்டாதவர்களை மேலும் ஆச்சரியத்திற்குள்ளாக்கும் செயற்பாடாகும் என அவுஸ்திரேலிய வங்கி தெரிவித்துள்ளது.

மரத்திலா பணம் காய்க்கிறது என்று எங்களில் பலர் பெற்றோர்களிடம் வாங்கிக் கட்டியிருப்பார்கள். இது



## சப்ப்பா...த்து

உலகில் மிகப்பெரிய காலணி (சப்பாத்து) ஒன்றை இங்கிலாந்தின் லோன்ஜ் குறூப் என்ற நிறுவனம் தயாரித்துள்ளது. புற்றுநோய் தொடர்பான ஆய்வு நிறுவனம் ஒன்றிற்கு அனுசரணை வழங்கும் முகமாக இந்த நிறுவனம் குறித்த காலணியைத் தயாரித்துள்ளது.

4 மீற்றர் நீளமும் 1.6 மீற்றர் அகலமும் 1.7 மீற்றர் உயரமும் கொண்ட இந்தக் காலணி சாதாரணமாக மனிதர்கள் துயில் கொள்ளும் விஸ்திரத்தன்மை கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இது மட்டுமன்றி உலகில் மிகப்பெரிய காலணி என்று கின்னஸ் சாதனையும் படைத்திருப்பது முக்கிய விடயமாகும்.



## சுமைதாங்கி

பருமனாக இருக்கும் சிலர் தங்களின் உடற்பருமனால் கவலையடைவார்கள் ஆனால் இங்கு படத்தில் காட்டப்பட்டுள்ள பெண்ணைப் பார்க்கின்ற போது சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். உண்மையில் ஆச்சரியம் தான். அமெரிக்காவில் வசித்து வரும் இவர் 241 கிலோ எடையுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## சாதனை

மேலைத்தேய நாடுகளில் வாழ்கின்றவர்கள் சுறுசுறுப்புக்காக எதையாவது புதிதாக செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் அவர்களுக்கு நிகர் அவர்கள் தான். எம்மவர்களைப் போன்று குடும்பச்சுமையோ பொருளாதார நெருக்கடியோ அவர்களிற்கு இல்லை. விதம் விதமாக வாழ்வை அனுபவிக்க வேண்டும் என்பது தான் அவர்களின் எதிர்பார்ப்பு. இவ்வாறான ஒரு முயற்சியில் தான் ஜேர்மனியைச் சேர்ந்த ஒருவர் 400 ஸ்ரோக்களை சேகரித்து வாய்க்குள் புகுத்தி சாதனை படைத்திருக்கின்றார். அதுவும் 10 செக்கனில் இந்தச் சாதனையைப் படைத்திருக்கின்றார். இவரின் இந்தச்சாதனை உலக சாதனையாகப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.



## நுட்பம்

மனிதர்கள் எதை இழந்தாலும் நம்பிக்கையை இழக்கக்கூடாது. நம்பிக்கைய்யை இழந்தோமானால் வாழ்வில் எல்லாவற்றையும் இழந்தவர்கள் ஆகிவிடுவோம். நம்பிக்கையை இழக்காமல் வாழ்க்கையில் சாதனை படைத்த பலரை நாம் உதாரணமாகக் கொள்ளலாம். அப்படிப்பட்ட ஒரு சாதனையாளர் தான் ஜெரி ஜோர்வா. வாகான விபத்தொன்றில் தனது கரத்தின் விரல் ஒன்றை இழந்தும் தனது நம்பிக்கையை இழக்கவில்லை. அந்த விரலுக்குப் பதிலாக 2GB கொள்ளளவு கொண்ட சிறியரக மெமறிஸ்ரிக் ஒன்றை தயாரித்து தனது கை-யுடனே அதனைப் பொருத்தி சாதனை படைத்திருக்கின்றார். முடியாது என்று அவர் துவண்டிருந்தால் அவரால் இந்தச் சாதனையைச் செய்திருக்க முடியாது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...

C/421

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 12 வியாழக்கிழமை (24.02.2011) பக்கங்கள் IV ஓசை – 147

## இந்திய மீனவர்மீது பலவந்தம் புரிவதை நியாயப்படுத்த முடியாது - கிருஷ்ணா



(சென்னை)

எமது மீனவர்கள் மீது பலவந்தத்தைப் புரிவதை நியாயப்படுத்த முடியாது. எனினும் நீண்ட காலத்தின் பின்னர் சுதந்திரமாக மீன்பிடித்தொழிலை ஆரம்பித்துள்ள இலங்கை மீனவர்கள் குறித்தும் நாம் கரிசனை கொள்ளவேண்டும் என எஸ்.எம். கிருஸ்ணா நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்;

இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினைகளுக்குத்தீர்வு காண்பதற்காக இரு நாடுகளினதும் கூட்டு செயற்குழுவொன்று அடுத்த மாதம் (iv பக்கம் பார்க்க)

## இந்திய–இலங்கை உறவில் விரிசலில்லை மீனவர் பிரச்சினை என்பது சிறிய விடயம்

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உயர்ந்த பட்சமனதும் நெருக்கமானதுமான உறவு நிலைகாணப்படுகின்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் எந்தவிதமான விரிசலும் இல்லை. எந்தவொரு சக்தியாலும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான உறவை சீர்குலைக்க முடியாது. இந்தியாவுக்கும் (iv பக்கம் பார்க்க)

# மரணத்தை அரசியலாக்கும் மலினமான செயற்பாட்டுக்கு வல்வை மக்கள் கடும் விசனம்

## பார்வதி அம்மாளின் இறுதிச்சடங்கில் அச்சமும் பதட்டமும் உருவாக இதுவே காரணம்



(விசேட நிருபர்)

**பார்வதி அம்மாளின் இறப்பை அரசியலாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியே அங்கு பதட்டம் ஏற்படக்காரணம் என்று வல்வெட்டித்துறை மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். தமிழ் தேசியக்கூட்டமைப்பு மற்றும் இந்திய புலி ஆதரவு சக்திகள் பார்வதி அம்மாளின் மரணத்தை தேர்தல்நேரத்தில் தமது அரசியல் நோக்கத்துடனேயே அனுகியுள்ளனர்.**

வெறும் உணர்ச்சியூட்டல் காரணமாக உறவினர்கள், நண்பர்கள் கூட அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதில் அச்சமான சூழல் தோற்றுவிக்கப்பட்டிருந்தது.

அரசியல்வாதிகள் தலையிடாமல் சாதாரணமான முறையில் இறுதிச் சடங்கிற்கு (iv பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தூதுக்குழுவினர் வடக்கிற்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தெற்காசிய பிராந்தியத்திற்கான ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தூதுக்குழுவினர் வடபகுதியில் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம செய்து அங்குள்ள புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட அரச அதிபர்களுடன் கலந்துரையாடியுள்ளனர். (iv பக்கம் பார்க்க)

## ஐ.நா. செயலாளருடன் சந்திப்பு நடத்தவுள்ளதாக வெளியான செய்திகளை அரசு நிராகரிப்பு!

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் மற்றும் வெளிவிவகாரச் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க ஆகியோர் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாக வெளியான செய்தியை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இந்த நிபுணர் குழு இலங்கையில் போர்க்குற்ற விசாரணைகளை நடத்த முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்கவில்லை. இணையத்தளம் ஊடாக காணொளிக் கலந்துரையாடல் மூலம் போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. இந் (iv பக்கம் பார்க்க)

## பயங்கரவாதப்பட்டியலில் புலிகள் அமைப்பு ஐரோப்பிய ஒன்றியத்தடை மேலும் நீடிப்பு

### புலம்பெயர் அமைப்புக்களின் கோரிக்கை நிராகரிப்பு



(இலண்டன்)

புலிகள் அமைப்பினரை மீண்டும் பயங்கரவாத அமைப்பாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. கடந்த 31 ஆம் திகதி இந்த தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு உலக நாடுகளில் செயற்பட்டு வரும் பயங்காரவாத அமைப்புக்களில் புலிகள் அமைப்பும் ஒன்றாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் பின்னர், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகள் உள்ளிட்ட அமைப்புக் (iv பக்கம் பார்க்க)

# எமது சமூகத்தை ஆற்றலுள்ள அறிவுள்ள சமூகமாக கட்டியெழுப்ப வேண்டிய தருணம் மலர்ந்துள்ளது

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

எமது சமூகமானது ஆற்றலுள்ள அறிவுள்ள ஒரு சமூகம். ஆயினும் இடையில் வந்த பிழையான அரசியல் தலைமைகளின் தவறான வழிநடத்துதல்கள் காரணமாக அந்நிலைமை அழிந்து விட்டது. ஆயினும் மீண்டும் அறிவுள்ள ஆற்றலுள்ள சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டிய தருணம் மலர்ந்துள்ளது. அதனை சரியாக எமது பிள்ளைகளான மாணவச் செல்வங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதன்மூலம் எமது சமூகம் முன்னேற வேண்டும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்திலிருந்து உயர்தரப் பரீட்சையில் அதி விசேட சித்திபெற்று பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி நெறியும் 2008ஆம ஆண்டு க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் விசேட சித்திபெற்ற மாணவர்களுக்கான ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் (iv பக்கம் பார்க்க)



நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில்

# தனியார்துறை ஊழியர்கள் அங்கத்துவம் பெறவேண்டும்

### யாழ். பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துத் தனியார்துறை ஊழியர்களும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையில் அங்கத்துவம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு அல்லாத தனியார்துறை நிறுவனங்களின் தலைவர்கள், அதிகாரிகள் இது குறித்து தம்முடன் தொடர்பு கொண்டு ஊழியர்களின் நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் ஜெயசுந்தர கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ். குடாநாட்டில் தற்சமயம் 850 வரையான தனியார் துறை ஊழியர்கள் தமது சபையின் அங்கத்துவம் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர்களில் 350 வரையானவர்கள் மட்டுமே தங்களது மாதாந்த கட்டுப்பணத்தைச் செலுத்துவதாகவும் மிகுதி 500 பேரும் தொடர்ந்து தமது கட்டுப்பண நிலுவைகளையும் சேர்த்து செலுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதன் மூலம் தொழிலாளர்களுக்கு பல நன்மைகள் கிடைப்பதுடன் அவர்களது பணத்திற்கும் வட்டியும் வழங்கப்படுகின்றது. அத்துடன் குறித்த நிறுவனத்தில் இருந்து ஊழியர் விலகிச் செல்லும் பட்சத்தில் அவருக்கு வட்டியுடன் முழுத் தொகையும் கிடைக்கவுள்ளது.

எனவே, தனியார் துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தங்களுக்கு நிறுவனத்தின் சார்பில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் அங்கத்துவம் பெற்றுத் தரப்பட்டுள்ளதா என்பது குறித்து இலக்கம் 70, மாட்டின் வீதியில் அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும். (0212220010).

அவ்வாறு ஊழியர்களை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இணைத்துக் கொள்ளாத நிறுவனங்கள் மீது எமது பரிசோதனை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)

# புலர்ந்தது புதுவசந்தம்

(கொழும்புத்துறை)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் நடாத்திய புலர்ந்தது புது வசந்தம் கலாசார நிகழ்வு நேற்று முன்தினமும், நேற்றும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வாத்திய பிருந்தா நாட்டியாஞ்சலி, விநாயகர்துதி, மல்லாரி, உயிரின் ஓசை, வசந்த உதனசிரியா, புதியதோர் உலகம் செய்வோம், வசந்த உற்சவம், தேவலோகத்தில், சாஸ்திரிய நடனம், மலர்ந்தன மலர்கள், கைகோர்ப்போம் வணங்கி நிற்போம் போன்ற நடன நாட்டிய நிகழ்வுடன் யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கிய வார்த்தைகளற்ற நாடகம் அசோகா போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற மாவட்டங்கள் பங்குபற்றின என்பது குறிப்பிடத்தக்கது. (52)

# சமூக வலுவூட்டல் திட்டத்தில் சர்வமதத் தலைவர்கள் ஒன்றுகூடல்

(பாசையூர்)

ஒருங்கிணைந்த மனித அபிவிருத்தி ஊடாக சமூக வலுவூட்டல் திட்டத்தில் சர்வமதத் தலைவர்களுக்கான ஒன்றுகூடல் முதற் தடவையாக நேற்று யாழ். மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள கரித்தாஸ்-கியுடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து மதங்களைச் சேர்ந்த மதப் பெரியார்கள் கலந்துகொண்டனர். 'சமயத் தலைவர்கள் ஒன்று சேர்வதன் மூலம் சமூகங்களை எவ்வாறு கட்டியெழுப்பலாம்' என்னும் தொனிப் பொருளில் இவ் அமர்வு ஆரம்பமானது.

இதில் தொடக்கவுரையினை கரித்தாஸ்-கியுடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை றெக்னோ அடிகளார் நிகழ்த்தினார். தொடர்ந்து 'யாழ்.மாவட்ட சமயத் தலைவர்களுடனான உறவு' என்னும் தலைப்பில் அருட்தந்தை றெக்னோ அடிகளாரும், 'சமூக மேம்பாட்டில் சமயத் தலைவர்களின் பங்கு' என்னும் தலைப்பில் ஆசிய ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ஜே.ஆம்ஸ்ரோங் அவர்களும், 'பிற மாவட்ட சமயத் தலைவர்களுடனான உறவு' என்னும் தலைப்பில் ஜோசப்பாலா அவர்களும் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுக்களிடமும் 'சமுகத்தில் சமயங்களின் ஒன்றிப்பு' என்னும் தலைப்பில் கூடி ஆராயவிடப்பட்டது. பின்பு அவர்கள் தங்களின் கருத்துக்களை தெரிவித்தனர்.

அதில் ஒரு சமூகத்தில் உள்ள சமயத் தலைவர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் பொது இடங்களில் ஒன்று கூடி கலந்துரையாடி பின்பு எல்லா சமயத் தலைவர்களும் தங்கள் தங்கள் வழிபாட்டு இடங்களில் கூடி ஆலோசனைகளை நடத்துவது ஒரு சமூக முன்னேற்றத்துக்கு ஒரு காரணமாகும் எனவும், நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். மௌலவி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த குழு மாதம் ஒரு தடவை கூடுவதா என கேட்கப்பட்டபோது எல்லோரும் ஏகோபித்த குரலில் அதற்குச் சம்மதித்தனர்.

அதனையடுத்து இந்தக் குழு குருநாகல் மாவட்டத்தில் உள்ள சர்வமதத் தலைவர்களைச் சந்திப்பதற்கு அழைப்பு கிடைத்தமையினால் எதிர் வரும் சித்திரை மாதம் 3ஆம் கிழமை அங்கு செல்வதற்கான எல்லோருடைய சம்மதத்தை நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் கேட்டுக் கொண்டார். (21)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன் புரிச் சங்கத்தின் இருபதாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற அதிபரும், சங்கத் தலைவருமான செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்திற்குப் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலக செயலாளர் திருமதி அ. சாந்தசீலன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலெஸ்ரின் கலந்து சிறப்பிப்பார். (11)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (R017)



## 10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - 2011

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு கிரிக்கெட் ஆர்வலர்களிடையே தினமொரு போட்டியை நடாத்தி தினமொரு பரிசில்களை வழங்க தினமுரசு எண்ணியுள்ளது

38 நாட்கள் மட்டுமே நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பாக தினமுரசில் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடைகளை தினமும் அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள் .

வெற்றியாளர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

38 வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் காத்திருக்கின்றன.

எனவே விடைகளை அனுப்புங்கள் பரிசில்களை அள்ளுங்கள்

தினமுரசில் வெளியாகும் கூப்பனில் மட்டும் விடைகளை எழுதி அனுப்பவேண்டும் ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்

போட்டி இல: 8

அனுப்ப வேண்டிய முகவரி:-

தினமுரசு விளையாட்டு அரங்கு, இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ICC Cricket World Cup 2011

**தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.**

1) 26ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லும் அணி ஏது?

2) இப்போட்டியில் ஆட்டநாயகனாகத் தெரிவாகும் வீரர் யார்?

பெயர்: ..............................

முகவரி : ..............................

போ.இல : ..............................

விடைகள் : 01) ..............................

02) ..............................

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

| தினமுரசு காரியாலயம் | தினமுரசு விளம்பரப் பணிமனை |
|---|---|
| 373, பிரதான விதி, யாழ்ப்பாணம். | M.P.C.S. பில்டிங் 127, கே.கே.எஸ்.வீதி, யாழ். |

விடைகளை 26 ஆம் திகதி 12.00 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.


# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31-01-2010 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 01) | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையும், மானிப்பாய் சேவை நிலையமும், நாவலர் வீதி சேவை நிலையமும் | 13-03-2011 மு.ப. 8.30 | மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை - 030 |
| 02) | காங்கேசன்துறைக்கிளையும், மல்லாகம் சேவை நிலையமும் | | |
| 03) | யாழ். பிரதான வீதிக் கிளையும், உரும்பிராய் சேவை நிலையமும் | | |
| 04) | நெல்லியடி | | |
| 05) | அச்சுவேலி | | |
| 06) | சங்கானைக்கிளையும், பண்டத்தரிப்பு சேவை நிலையமும் | | |
| 07) | சுன்னாகக் கிளையும், கோப்பாய் சேவை நிலையமும் | | |
| 08) | சாவகச்சேரிக் கிளையும், கொடிகாமம் சேவை நிலையமும் | | |
| 09) | வல்வெட்டித்துறை | | |
| 10) | யாழ். பல்கலைக்கழகக் கிளையும், திருநெல்வேலி சேவை நிலையமும், கல்வியங்காடு சேவை நிலையமும் | | |
| 11) | பாழ். கன்னாதிட்டிக்கிளையும், இணுவில் சேவை நிலையமும் | | |
| 12) | பருத்தித்துறைக் கிளையும், புலோலி சேவை நிலையமும் | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம்விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**

மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
2011.02.24

(C/475)

## ஜனாதிபதியால் தடை

ICC Cricket World Cup 2011

(கொழும்பு)

அவுஸ்ரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கு எதிராக அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமைந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் பாடலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவிற்கு இணங்க தடை செய்யப்பட்டுள்ளது.


நடப்புச் சம்பியனான அவுஸ்ரேலிய அணி பறவைத் தீனி போன்று நொறுக்கப்படும். நியூசிலாந்து அணியினர் தாடைகள் உடைக்கப்படும் என இப்பாடலின் வரிகள் அமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

சிங்களம், தமிழ் வரிகள் கொண்ட இப்பாடசாலை செவிமடுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இப்பாடலை ஒலிபரப்ப வேண்டாம் என வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

அவமதிக்கும் விதமான வரிகளை அனுமதித்தமைக்காக விளையாட்டுத் துறை அதிகாரிகளையும் ஜனாதிபதி கண்டித்துள்ளார்.

இப்பாடல் மோசமான சரணை கொண்டதென ஜனாதிபதி கருதுவதாகவும் ஏனைய நாடுகளை அவமதிக்காமல் அணியையும் ரசிகர்களையும் உற்சாகப்படுத்தும் விதத்தில் பாடல் அமைய வேண்டும் எனவும் ஜனாதிபதிக்கு நெருக்கமான அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகின.

## ஐ.பி.எல். தொடர் கைகொடுக்கும்



(புதுடில்லி)

உலகக் கிண்ணத் தொடரில் சாதிக்க, ஐ.பி.எல். அனுபவம் கைகொடுக்கும் என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் துணைத் தலைவர் டுவைன் பிராவோ நம்பிக்கை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: உலகக் கிண்ணத் தொடரை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்ள இருப்பது சவாலான விடயம். எங்கள் அணியில் உள்ள 5 முதல் 6 வீரர்கள், இந்திய மண்ணில் நடக்கும் ஐ.பி.எல்., தொடரில் விளையாடிய அனுபவம் பெற்றவர்கள். இதனால் இந்திய மைதானங்கள் குறித்து நன்கு அறிந்திருப்பார்கள். இந்த அனுபவம், உலகக் கிண்ணத் தொடரில் சாதிக்க நிச்சயம் கைகொடுக்கும்.

தென்னாபிரிக்க அணியை, கடந்த 1996இல் நடந்த உலகக் கிண்ண அரையிறுதி மற்றும் சாம்பியன்ஸ் தொடர் உள்ளிட்ட மிகப் பெரிய தொடர்களில் வீழ்த்தி உள்ளோம். பழைய செயற்பாடுகள் குறித்து அதிகம் சிந்திக்காமல், ஒவ்வொரு போட்டியிலும் முழுத் திறமையை வெளிப்படுத்தினால் சுலப வெற்றி பெறலாம் என்றார்.

## இறுதிவரை போராடுவோம்



(கொழும்பு)

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி கிண்ணத்தை வெல்வதற்காக இறுதி வரை போராடுவோம் என பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடி தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்கள் நாட்டு மக்கள் உலகக் கிண்ணப் போட்டிகளை சொந்த ஊரில் ரசிக்கும் வாய்ப்பை தவறவிட்டு இருப்பது வருத்தமளிக்கிறது. இதுதான் எங்கள் மனதில் முக்கிய சிந்தனையாக உள்ளது. எனவே உலகக் கிண்ணத்தை வெல்ல எங்களது மிகச்சிறந்த ஆட்டத்தை நிச்சயம் வெளிப்படுத்த முயற்சிப்போம்.

உலகக் கிண்ணத்தை வென்றால், விரைவில் எங்கள் நாட்டில் சர்வதேச கிரிக்கெட் நடக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. இந்த உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் பாகிஸ்தான் அணி அபாயகரமான ஒரு அணியாக இருக்கும். இந்த உலகக் கிண்ணப் போட்டியை நான் ஒரு சவாலாக ஏற்றுள்ளேன். நாங்கள் அரையிறுதிக்குத் தகுதி பெறுவோம் என்று யாரும் மதிப்பிடவில்லை. இது எங்களுக்கு மிகப்பெரிய சவால். எங்களது அணி அரையிறுதியில் விளையாடுவதை பார்க்க விரும்புகிறேன் என்றார்.

## அனுமதியளிப்பு

(கொழும்பு)

கிரிக்கெட் போட்டிகளின் போது, இசைக்கருவிகளைக் கொண்டு வர, இலங்கை கிரிக்கெட் சபை அனுமதியளித்துள்ளது.

இலங்கையில் நடக்கும் உலகக் கிண்ணப் போட்டிகளின் போது, பாதுகாப்புப் காரணங்களுக்காக இசைக் கருவிகள் உள்ளிட்ட பல பொருட்களை, மைதானத்துக்குள் கொண்டுவர பொலிஸார் தடை விதித்தனர். இதற்கு ரசிகர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் ரசிகர்கள் வருகையை அதிகரிக்கும் வகையில், இசைக்கருவிகளைக் கொண்டு வர, இலங்கை விளையாட்டுத்துறை அனுமதி தந்துள்ளது. மற்றபடி மதுபானங்கள், கூர்மையான பொருட்கள், வர்த்தக ரீதியிலான கமரா, கண்ணாடி பொருட்களுக்கான தடை தொடருமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ICC Cricket World Cup 2011

### இன்றைய ஆட்டம்

தென்னாபிரிக்கா எதிர் மேற்கிந்தியத்தீவுகள்


மைதானம் : புதுடில்லி.
பகலிரவு ஆட்டம்

## பாகிஸ்தான் வெற்றி

(கொழும்பு)

கென்யா அணிக்கெதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி 205 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் நேற்றைய 'ஏ' பிரிவு ஆட்டம் கொழும்பு அம்பாந்தோட்டை மைதானத்தில் நடைபெற்றது. பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி, 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை 317 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய கென்யா அணி, 33.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.



## தினமுரசு பாகிஸ்தான் எதிர் கென்யா SCORE CARD

மைதானம் : அம்பாந்தோட்டை. திகதி : 23-02-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி பாகிஸ்தான் : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) முகமட் ஹபீஸ் | c வோர்ட்டார்ஸ் b ஒற்றினோ | 09 |
| 02) அகமட் ஷவார்ட் | c கமண்டோ b ஒடோயோ | 01 |
| 03) கம்ரன் அக்மன் | st ஒவ்மா b நிக்கோஸி | 55 |
| 04) யூனிஸ்கான் | lbw b திகொலொ | 50 |
| 05) மிஸ்பா உல்-ஹக் | c ஒற்றினோ b கமண்டோ | 65 |
| 06) உமர் அக்மல் | c ஒபுபா b ஒடோயோ | 71 |
| 07) சஹிட் அப்ரிடி | lbw b ஒடோயோ | 07 |
| 08) அப்துல் ரசாக் | not out | 08 |
| 09) அப்துர் ரஹ்மான் | not out | 05 |
| 10) உமர் குல் | | |
| 11) சொஹிப் அக்தர் | | |
| உதிரிகள் | (lb 3, w 37, nb6) | 46 |
| மொத்தம் | (7 w : 50 ஓவர்கள்) | 317 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) எம்.ஏ. ஒவ்மா | c கம்ரன அக்மல் b உமர் குல் | 16 |
| 02) எஸ்.ஆர். வோர்ட்டர்ஸ் | run out (உமர் அக்மல்) | 17 |
| 03) சி.ஓ. ஒபூயா | c அகமட் ஷவார்ட் b அப்ரிடி | 47 |
| 04) சோ. திகொலொ | b அப்ரிடி | 13 |
| 05) ரி. மிஸ்ரா | lbw b அப்ரிடி | 06 |
| 06) ஆர்.ஆர். பட்டேல் | c உமர் அக்மல் b ஹபீஸ் | 00 |
| 07) ஜே.கே. கமண்டே | lbw b அப்ரிடி | 02 |
| 08) ரி.எம். ஒடோயோ | lbw b அப்ரிடி | 00 |
| 09) என்.என். ஒடியம்போ | run out (sub: அசாட் சபீஸ்) | 00 |
| 10) எஸ்.ஒ. நிக்கோஸி | b உமர் குல் | 00 |
| 11) ஈ. ஒற்றினோ | not out | 00 |
| | (b 4, lb 3, w 3, bl 1) | 11 |
| மொத்தம் | (all out; 33.1 ஓவர்கள்) | 112 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| ரி.எம். ஒடோயோ | 07 | 41 | 03 |
| ஒற்றினோ | 09 | 49 | 01 |
| எஸ்.ஒ. நிக்கோஸி | 10 | 46 | 01 |
| ஜே.கே. கமண்டே | 07 | 64 | 01 |
| சோ. திகொலொ | 09 | 44 | 01 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| அக்தர் | 05 | 10 | 00 |
| ரசாக் | 05 | 23 | 00 |
| உமர் குல் | 4.1 | 12 | 02 |
| அப்ரிடி | 8 | 16 | 05 |
| முகமட் ஹபீஸ் | 4 | 26 | 01 |

205 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றி. ஆட்டநாயகன் : உமர் அக்மல்

அனுசரணையாளர்: நேரடியாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கட்டடப் பொருட்களுக்கும் தேவையான அனைத்து இயந்திர வகைகள் மற்றும் நிறுத்தல் தராசு வகைகள் அனைத்து மாபிள் கொமட் வகைகள் எல்லாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள ஒரே இடம்

ஸ்ரார் செரமிக்ஸ்

NO. 05, Stanley Road,
Jaffna. (C/476)

T.P: 021 5672061,
Mobile: 0772510994, 0777578277 .
Email: vimalraja 43@yhoo.com.

ICC Cricket World Cup 2011

# பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஆளுநரின் உதவி வழங்கும் திட்டம் அங்குரார்ப்பணம்



வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான கௌரவ ஆளுநரின் விசேட உதவி வழங்கும் திட்டம் யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் சண்முகலிங்கனின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வன்னியில் இடம் பெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்ட 189 பல்கலைக் கழக மாணவர்கள் ஆளுநரின் விசேட உதவி வழங்கும் திட்டத்தின் மூலம் ஆரம்ப நிதி உதவியை பெற்றுக்கொண்டனர்.

இந்நிதியுதவியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் சந்திரசிறி ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் (அசோக்) ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு முதன்மையுரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், சிறந்த ஆரம்பத்துடன் தனது கல்வி மற்றும் சமூக நடவடிக்கைகளை முன்னெடுத்த பல்கலைக்கழகமானது இடையில் தவறான வழிநடத்துதல்கள் காரணமாக தடம்மாறிப் போனதை எடுத்துக்கூறினார். ஆயினும் தற்சயமம் மீண்டும் தனது சரியான பாதைக்கு பல்கலைக்கழகம் திரும்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் சிவசுவாமி, ஆளுநரின் செயலாளர் ரங்கராஜன், பிரதி பிரதம செயலாளர் இராசநாயகம், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன், மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் செல்வரட்ணம், மாகாண அமைச்சின் செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ். பல்கலைக்கழக பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்வியாளர்களும் பெருமளவான மாணவர்களும் கலந்து கொண்டனர்.

## ஐ.நா. செயலாளருடன்...

நிலையிலேயே, சட்டமா அதிபர் மொஹான் பீரிஸும், வெளிவிவகாரச் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்கவும் பான் கீ மூனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக இன்டர்சிற்றிபிறஸ் செய்தி வெளியிட்டிருந்தது. எனினும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு வெளிநாடு சென்றுள்ளதாகவும், பான் கீ மூனுக்கும் இடையில் எவ்வித சந்திப்புக்களுக்கும் ஏற்பாடு செய்யப்படவில்லை எனவும் பிரதியமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவை தொடர்பு கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை அரசாங்கம் தடுத்ததாக வெளியான செய்திகளையும் அவர் மறுத்துள்ளார். பான் கீ மூனின் அலுவலகத்தோடு தொடர்பு கொள்ள தாங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவை தொடர்பு கொள்வதற்கு விருப்பம் என்றால் நிபுணர் குழு நேரடியாகவோ அல்லது அரசாங்கத்தின் ஊடாகவோ தொடர்பு கொள்ள முடியும எனவும் நியோமல் பெரேரா கூறியுள்ளார்.

## பயங்கரவாத...

களின் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் மீளாய்வொன்றை நடாத்தியிருந்தது. அதன் போது பயங்கரவாத அமைப்புக்களாகக் கருதி தடைசெய்யப்பட்டுள்ள அமைப்புக்களின் செயற்பாடுகள் குறித்து பரந்தளவில் மீளாய்வு செய்யப்பட்டது.

புலிகள் அமைப்பு போராட்டக் களத்தில் தற்போது இல்லை என்பதால் அதனை பயங்கரவாதிகள் பட்டியலிலிருந்து நீக்க வேண்டுமென பலதரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தனர். அத்துடன் புலிகள் அமைப்பினர் மீதான தடை நீக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் பல அவதானிகள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத அமைப்புக்களாக கருதியுள்ள 26 அமைப்புக்களில் புலிகள் அமைப்பின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இனிவரும் காலங்களிலும் புலிகள் அமைப்பின் பேரால் ஐரோப்பிய நாடுகளில் செயற்படுவதற்கு தடை விதிக்கப்படுவதுடன், அந்நாடுகளில் உள்ள புலிகளின் சொத்துக்கள் என இனங்காணப்படுபவை முடக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## இந்திய மீனவர் மீது..

சந்தித்து பேசவுள்ளது.

மீனவர் தொடர்பான கூட்டு செயற்குழு எதிர்வரும் மார்ச் மாதம் சந்தித்துப் பேசுவதற்கு எமது இரு நாடுகளும் இணங்கியுள்ளன. அத்துடன் மீனவர் சங்கங்களையும் தமக்கிடையில் தொடர்புகளை பேணுமாறு நாம் ஊக்குவிக்கிறோம். அத்தகைய தொடர்புகள் பரஸ்பரம் நன்மையளிப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடலில் ஜனவரி மாதம் இந்திய மீனவர்கள் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் 136 மீனவர்கள் இம்மாத முற்பகுதியில் இலங்கை மீனவர்களால் சுற்றிவளைக்கப்பட்டு இலங்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட அல்லது தொந்தரவுக்குள்ளாக்கப்பட்ட ஏறத்தாழ அனைத்து சம்பவங்களும் இலங்கை கடற்பரப்பிலேயே இடம் பெறுவதாக அமைச்சர் கிருஷ்ணா சுட்டிக் காட்டினார். இது எமது மீனவர்களுக்கு எதிராக பலவந்தத்தை பிரயோகிப்பதை நியாயப்படுத்த முடியாது. எனினும் நீண்டகாலத்தின் பின்னர் அப்பகுதியில் மீன்பிடியை ஆரம்பித்துள்ள இலங்கை மீனவர்கள் குறித்தும் நாம் கரிசனை கொள்ள வேண்டும். என்றார்.

துப்பாக்கிப்பிரயோகங்கள், வன்முறைகளைப் பயன்படுத்துதல் என்பவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. இது குறித்து இலங்கை அரசாங்கத்திடம் எமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளோம். இச்சம்பவங்கள் குறித்து தீவிரமாக விசாரணை நடத்துமாறும் மீண்டும் அவை நடைபெறாமலிருப்பதை உறுதிப்படுத்துமாறும் நாம் ஏற்கெனவே இலங்கை அரசாங்கத்தை கோரியுள்ளோம் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா கூறியுள்ளார்.

## எமது சமூகத்தை...

நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த வலிகாமம் யாழ்ப்பாணம் தீவகம் வடமராட்சி தென்மராட்சி கிளிநொச்சி மடு மன்னார் துணுக்காய் முல்லைத்தீவு வவுனியா வடக்கு வவுனியா தெற்கு ஆகிய பன்னிரண்டு கல்வி வலயங்களிலிருந்து பரீட்சைக்குத் தோற்றி விசேட தரத்தில் சித்தியெய்திய 788 மாணவ மாணவிகளுக்கு ஜனாதிபதி நிதிய புலமைப் பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி தலைமையில் இடம் பெற்ற தேசிய சூரியப் பொங்கல் நிகழ்வில் ஜனாதிபதியின் கையினால் மடிக்கணினி பெற்றுக்கொண்ட நூறு மாணவ மாணவிகளும் நேற்றைய நிகழ்வில் சமூகமளித்ததுடன், அவர்களுக்கான மடிக்கணினி பயிற்சி நெறியும் நேற்றையதினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## மரணத்தை...

ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், பீதியும், நெருக்கடியும் அற்றதொரு சூழலில் அம்மாளின் இறுதிச்சடங்குகளை இயல்பாக நடத்தியிருக்க முடியுமென அப்பகுதி மக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தனர்.சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த கதையாகவே பார்வதி அம்மாளின் மரணத்தை பிரபாகரனின் பெயரைச்சொல்லி அநாதரவான நிலைக்கு இட்டுச் சென்றதோடு, தமது அரசியல் நிகழ்ச்சியைப்போலவே அதனை நடத்தியுமுள்ளனர்.

இவ்வாறான அரசியல்சுயலாபம் மிகுந்த ஏற்பாடுகளைத் தாம் கண்டிப்பதாக அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக சுரேஷ்பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் ஆகியோரின் நடவடிக்கைகளை வல்வை மக்கள் கடுமையாக விமர்சித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கில் இடம்பெயர்ந்த வாக்காளர்களின் வாக்குரிமையை பாதுகாப்பது அவசியம்

## தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

வடக்கில் போரினால் இடம்பெயர்ந்த வாக்காளர்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பது அவசியமானது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். தேர்தல்கள் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சி செயலாளர்களுடன் விசேட சந்திப்பின்போதே இதனை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சட்டவிரோதமான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் எனவும் வேட்பாளர்கள் தங்களுடைய உருவப்படம் தாங்கிய சுவரொட்டிகளை மட்டுமே ஒட்டமுடியும், பதாதைகளைக் கட்டுவது முற்றாக தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் நீதிமன்றம் தீர்மானங்களை எடுக்கும் வரை அந்த உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் எவ்விதமான பிரசாரங்களையும் முன்னெடுக்கவேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் அதன் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் எம்.பியான செல்வம் அடைக்கலநாதன், மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா, ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் குமரகுருபரன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வடக்கில் சட்டவிரோதமான முறையில் மரங்கள் வெட்டப்படுவதாக முறைப்பாடு

(வவுனியா)

வடக்கில் மிகவும் பெறுமதிவாய்ந்த மரங்கள் வெட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் உள்ள காடுகளிலேயே இந்தப் பெருமளவான மரங்கள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரண்டு மாதங்களாக இந்த நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் பொலிஸார் நடத்திய தேடுதலின் போது ஐந்து மில்லியன் ரூபா பெறுமதியான மரங்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய...

நேற்றைய தினம் விஜயம் செய்த இவர்கள் வவுனியா அரச அதிபர் திருமதி வி.எச்.எம் சாள்ஸ் அவர்களைச் சந்தித்து வவுனியா மாவட்டத்தில் நடைபெற்று வரும் அபிவிருத்தி திட்டங் கள் தொடர்பாகவும் கடந்த மாதம் பெய்த மழையினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாகவும் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன் குறித்த குழுவினர் வவுனியா செட்டிகுளம் பகுதியில் உள்ள மெனிக்பாம் முகாமுக்குச் சென்று அங்குள்ள இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று மாலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த குழவினர் யாழ். மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இச் சந்திப்பில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய நடவடிக்கைகள் குறித்தும் யாழ்.மாவட்டதில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித்தேர்தல் குறித்தும் ஐரோப்பியகுழுவினர் கலந்துரையாடியதாக அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

## இந்திய-இலங்கை...

இலங்கைக்கும் இடையிலான உறவுடன் ஒப்பிடுகையில் மீனவர் விவகாரம் ஒரு சின்ன விடயம் என்று நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்நாட்டில் விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது' இந்நிலையில் தற்போதைய மீனவர் விவகாரங்கள் சூழ்ச்சியானதாகக் கூட இருக்கலாம். தமிழகத்தைப் பொறுத்த வரையில் எப்பவுமே குழப்பகரமான நிலை காணப்படுகின்றது

தமிழ்நாட்டில் இருந்து மத்திய அரசுக்கு செல்கின்ற அழுத்தங்கள் குறித்தும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். யுத்தத்தின்போது விசேடமான பங்களிப்பை இந்தியா எமக்கு வழங்கியுள்ளது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உச்சபட்ச நெருக்கமான உறவு காணப்படுகின்றது. எந்தவொரு சக்தியாலும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான உறவை சீர்குலைக்க முடியாது. இரண்டு நாடுகளுக்கும் இடையில் மீனவர் விடயம் தொடர்பில் ஒரு பிரச்சினை இருக்கின்றது. அதனை ஏற்றுக்கொள்கின்றோம். அப்படி பார்க்கும்போது ஜப்பான் கடலில் வேறு நாடுகளும் அவுஸ்திரேலியாக் கடலில் வேறு நாடுகளும் மீன்பிடிக்கின்றன. அவை வெளிவருவதில்லை. ஆனால் இலங்கை-இந்திய மீனவர் விவகாரம் உடனே வெளிவந்துவிடும். கடலில் எல்லையை நிர்ணயிப்பது என்பது இலகுவான விடயமல்ல. அவ்வாறு எல்லை நிர்ணயிக்கப்பட்டாலும் அவற்றைப் பேணுவது கடினமாகும். எனவே மீனவர் விவகாரத்தை நாங்கள் சுமுகமான முறையில் விரைவில் தீர்த்துக்கொள்வோம் என்றார் அவர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.